விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 01 செவ்வாய்க்கிழமை (16.06.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 179

குருவாரம்
25வது ஆண்டு குருபூசை
தவத்திரு வடிவேல் சுவாமிகள்
ஆச்சிரம மண்டபம்
21-06-2015
ஞாயிறு.
கிளிநொச்சி
மகாதேவ ஆச்சிரமம்
(சி-1267)


# வித்தியா கொலை வழக்கு இறப்பு நிகழ்ந்தது எவ்வாறு?

## ஊர்காவற்றுறை நீதிமன்றில் 7 பேரின் சாட்சியங்கள் பதிவு

- தாய், சகோதரன் சாட்சியம்
- முறைப்பாட்டை ஏற்க மறுத்த பொலிஸ்
- சடலத்தை கண்டுபிடித்த நாய்
- பொலிஸார், சட்ட வைத்திய அதிகாரி, குற்றப்புலனாய்வு அதிகாரி சாட்சியம்



புங்குடுதீவு மாணவி கொலைச் சம்பவம் தொடர்பில் மாணவியின் உறவினர்கள் மற்றும் பொலிஸ் தரப்பு உட்பட ஏழு பேரின் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.


குறித்த வழக்கு நேற்றைய தினம் மரண விசாரணைக்காக ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே ஏழு பேரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இன்றைய (நேற்று) தினம் எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கு குற்றவாளி யார் என்பதனை கண்டு பிடிப்பதான வழக்கு அல்ல, மாறாக குற்றம் எவ்வாறு நிகழ்ந்தது, இறப்பு எவ்வாறு நிகழ்ந்தது, இறப்பிற்கான காரணம் குறித்து ஆராய்வதாக இருக்க வேண்டும் என்பதே ஆராயப்படல் வேண்டும் என வழக்கின் ஆரம்பித்திலேயே சட்டத்தரணிகள், பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வு துறையினருக்கு நீதவான் அறிவுறுத்தியிருந்தார்.

பின்னர் குறித்தவழக்கின் பிரதான சாட்சிகளின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. 23ஆம் பக்கம் பார்க்க



## பசில் ராஜபக்ஷ பிணையில் விடுதலை



(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை பிணையில் செல்ல கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை அனுமதி வழங்கியுள்ளது.

பசில் ராஜபக்ஷவை ஒரு இலட்சம ரூபா ரொக்க பிணை மற்றும் நான்கு பேரின் 10 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணைகளுடன் பிணை 24ஆம் பக்கம் பார்க்க

# மாகாண சபையுடன் கலந்தாலோசித்து திட்டங்களை அமுல்படுத்த வேண்டும்

## அதிகாரத்தை திணிக்கக் கூடாது என வடக்கு முதல்வர் ஜனாதிபதியிடம் வலியுறுத்து

(கொழும்பு)

மத்தியின் அதிகாரத்தை மாகாணத்தில் கொண்டுவந்து திணிக்காமல் மாகாண சபையுடன் கலந்தாலோசித்தே திட்டங்களை அமுலபடுத்த வேண்டும் எனவும் வட மாகாணத்திற்கு அதிகளவான நிதியினை ஒதுக்க வேண்டும் எனவும் வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று 9 மாகாணங்களையும் சேர்ந்த முதலமைச்சரகள், ஆளுநர்கள், மாகாண அமைச்சர்கள், பிரதம செயலாளர்கள், அமைச்சின் செயலாளர்களுக்கு இடையிலான பயிற்சிப் பட்டறை ஒன்று இடம பெற்றது.

தேசிய ரீதியிலும் மாகாண ரீதியிலும் ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதன் மூலம் அபிவிருத்தியை எவ்வாறு மேம்படுத்தலாம் என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இப் பயிற்சிப்பட்டறையின் போதே வடக்கு மாகாணசபை முதலமைச்சர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எல்லா மாகாணங்களும் ஒரே மாதிரியான தேவைப்பாடுகளைக் கொண்டவை என்று நோக்கக்கூடாது. வடக்கு-கிழக்கு மாகாணங்கள் போரினால் அதிகளவில் பாதிக்கப்பட்டவை. ஏனைய மாகாணங்கள் எல்லாம் எத்தனையோ வருடாங்களைக் கடந்துவிட்ட நிலையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களே வயது குறைந்த மாகாணங்களாக உள்ளன. எனவே இந்த இரண்டு மாகாணங்களிலும் விசேட கவனம் தேவை.

மாகாணங்களில் மத்திய அரசின திட்டங்களை திணிக்காமல் மாகாண சபைகளுடன் கலந்தாலோசித்து 23ஆம் பக்கம் பார்க்க

## சமல் ராஜபக்ஷ விரைவில் ஓய்வு



(கொழும்பு)

அரசியலில் இருந்து தான் விரைவில் ஓய்வுபெறவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மூத்த சகோதரரும், நாடாளுமன்ற சபாநாயகருமான சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக சமல் ராஜபக்ஷ நிறுத்தப்படவுள்ளதாக வெளி 24ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மனித உரிமை மீறல்; சர்வதேச பொறுப்புக் கூறல் அவசியம்

### ஐ.நாவில் ம.உ கண்காணிப்பகம் கருத்து

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமை மீறல் விடயங்களில் சர்வதேச பொறுப்புக்கூறல் அவசியம் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை 23ஆம் பக்கம் பார்க்க

## தாய், சகோதரன் நீதிமன்றில் மயக்கம்

(யாழ்ப்பாணம்)

கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தி கொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவியின் கொலை வழக்கு, ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற் 24ஆம் பக்கம் பார்க்க

## தெற்கு சட்டத்தரணிகள் வழக்குக்கு வருகை

(யாழ்ப்பாணம்)


புங்குடுதீவு மாணவி கொலை வழக்குத் தொடர்பான விசாரணைகளை பார்வையிடுவதற்காக தென்னிலங்கையிலிருந்து வருகை தந்திருந்த மூன்று சட்டத்தரணிகளும் 24ஆம் பக்கம் பார்க்க

# மாணவி கொலைச் சந்தேக நபர்கள் மீது பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் விசாரணை

## ஜனாதிபதி அறிவுறுத்தல்; நீதவான் கட்டளை

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி கூட்டு வன்புணர்வு கொலைச்சந்தேக நபர்கள் ஒன்பது பேரினையும் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தன் கீழ் 30 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு ஊர்காவற்துறை நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. குறித்த வழக்கு நேற்றைய தினம் ஊர்காவற்துறை நீதிமன்றில்மரண விசாரணைக்காக நீதவான செல்வநாயகம் லெனின்குமார் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போதே சந்தேக நபர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 23ஆம் பக்கம் பார்க்க



**நடுவுநிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1-ம் ஆண்டு நினைவு

ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 13.06.2014
அன்று சிவபதமடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்
அமரர்
நமசிவாயம்
கணபதிப்பிள்ளை
(ஆழியவளை சாழையடி
நிரந்தர வதிவிடம்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று 16.06.2015 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொடிகாமம் வீதி,
புலோலி தெற்கு,
புலோலி.

(C-1288)

இங்ஙனம்
குடும்பத்தினர்


# புலம்பெயர் தமிழர்களின் ஏற்பாடான சர்வதேச மாநாடு பாராட்டத்தக்கது

## டி.யூ.எம்.பி வரவேற்பு

(கொழும்பு)

புலம்பெயர் தமிழர்கள் சர்வதேச மாநாடு ஒன்றை கொழும்பில் நடத்த வெளிவிவகார அமைச்சு எடுத்துள்ள தீர்மானத்தை பாராட்ட வேண்டும் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் டி.யூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

இப்படியான மாநாடு நடத்தப்பட வேண்டும் என கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாக தெரிவித்துள்ள அவர், அதனை அமுல்படுத்துமாறு தான் உள்ளிட்டோர் முன்னாள் ஜனாதிபதியிடம் பல முறை கோரியிருந்ததாகவும் அவர் இனவாதிகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து அந்த யோசனையை நிராகரித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை புலம்பெயர் தமிழர்கள் கலந்து கொள்ளும் சர்வதேச மாநாடு ஒன்று நடத்தப்படுமாயின் அது சட்டவிரோதமான நடவடிக்கை என ஜாதிக ஹெல உறுமயவின பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தேர்தலை இலக்கு வைத்து சில தரப்பினர் தமிழ் மக்களின் வாக்குகளை இலக்கு வைத்து மேற்கொள்ளும் இவ்வாறான நடவடிக்கைகளை அனுமதிக்க முடியாது.

இவ்வாறு செய் வதன் மூலம் நாடு பயங்கரவாதம் மற்றும் அடிப்படைவாதத்தை நோக்கி தள்ளப்படும் எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கை அரசாங்கம் புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை பாராட்டுவதாக பொது பல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது. இது தேசிய நல்லிணக்கத்திற்கான அடித்தளமாக அமையும் என பொது பல சேனா அமைப்புக்குள் நடந்த கலந்துரையாடலில் பேசப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (செ-11)

# ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை திருமலையில்

(கொழும்பு)

காணாமற்போகச் செய்யப்பட்டோர் தொடர்பில் விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி ஆணைக்குழு தனது அடுத்தகட்ட அமர்வை திருகோணமலையில் நடத்தவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 27 ஆம் திகதி முதல 30 ஆம் திகதி வரை திருமலையில் பல இடங்களில் சாட்சியங்கள் திரட்டப்படவுள்ளன. இந்த் தகவலை ஆணைக்குழுவின் இணைப்புச செயலாளர் ஒருவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

அத்துடன், திருகோணமலை மாவட்டத்தல் ஏற்கெனவே பெறப்பட்ட சாட்சியங்களிலுள்ள சந்தேகத்தன்மை தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பிடம் இதன்போது மேற்படி ஆணைக்குழு கேள்வி எழுப்பவுள்ளது என அறியமுடிகின்றது.

இதேவேளை, மேற்படி ஆணைக்குழுவின ஆயுட்காலம் அடுத்த மாதத்துடன் நிறைவடையவுள்ள நிலையில், அதன் பதவிக்காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற நீதியரசர் மெக்ஸ்வெல் பரணகம தலைமையிலான மூவரடங்கிய இந்த ஆணைக்குழு உள்ளக போர்க்குற்ற விசாரணையையும் கடந்த ஒரு வருடங்களாக முனனெடுத்து இது தொடர்பில் இறுதி அறிக்கையையும் தயாரித்துள்ளது. இந்த அறிக்கை அடுத்த மாத இறுதியில் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. (செ-11)


# 50வது பொன் விழா வாழ்த்து

## சிவஸ்ரீ. தியாக.சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்
## ஸ்ரீமதி. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் புவனேஸ்வரியம்மா



தேசுடனே நெல்லண்டையான் கழகம் வாழி
கலைகளுடன் மேலான வலிமை ஓங்க
ஆசியுடன் தொண்டுபுரி அறிஞர் வாழி!
அவர் புகழ் வீற்றிருந்தே அதிபர் வாழி
நேசமுடன் உறவுகள் பலவும் பெற்று
நிலவுலக மேத்தியின்புறச் சோமாஸ்கந்த
ராஜகுருவும் நெல்லண்டைப் பத்திரகாளியாசியுடன்
இவர் துணைவி புவனேஸ்வரியம்மா வாழி வாழி!

என வாழ்த்தும் அவர்கள் தம் குடும்பத்தினரும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், அன்பர்கள்.

(C-1285)

சிவஸ்ரீ.இராமலிங்க சுந்தரலிங்கக் குருக்கள், பிரபாலினியம்மா, விபூசன், சரணி, திரிஸ்யந்த் சிவஸ்ரீ.திருஞானசுந்தர - திருஞான சம்பந்த குருக்கள், ஜீவிதனி அம்மா - சம்ஸிகன், சிவஸ்ரீ.சோ.தனஞ்சயன் குருக்கள் - (மகன்), ஸ்ரீமதி.சோ.சங்கீர்த்தனியம்மா (மகள்)

நெல்லண்டையான் வெளியீட்டுக்கழகம்

தலைவர் - சிவத்திரு தம்பு இராமச்சந்திரன் (வில்வளை பிரத்தியங்கரா தேவஸ்தானம்) செயலாளர்: திருவளர் வேல்நந்தகுமார் (ஆசிரிய ஆலோசகர் துனுக்காய் வலயம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 பனைகள் தறிப்பு

(கரணவாய்)

கரணவாய் கப்பூது பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றிலிருந்து 40 பனைகள் தறிக்கப்பட்டு களவாடப்பட்டிருப்பதாக கப்பூது கிராம சேவையாளரால் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணி உரிமையாளர் வெளிநாட்டில் இருப்பதனால் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவரது காணியிலிருந்த 40 பனைகள் தறிக்கப்பட்டிருக்கின்றன.

இது தொடர்பாக கப்பூது கிராம சேவையாளரால் நேற்று செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-3-60)

# இலங்கையிலும் மரண தண்டனை ஜனாதிபதி விரைவில் அறிவிப்பார்

(கொழும்பு)

**இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றப்படுவது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விரைவில் அறிவிப்பார் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டுமா இல்லையா என்பது குறித்து ஜனாதிபதி ஒரு சில தினங்களில் அறிவிப்பார்.

மரண தண்டனையை அமுல்படுத்த வேண்டுமா என்ற கேள்விக்கு 90 வீதமானவர்கள் ஆம் என்றே கூறியிருக்கின்றார்கள்.

## அமைச்சர் ஜோன் நம்பிக்கை

எனவே மரண தண்டனை நிறைவேற்றம் குறித்து ஜனாதிபதி விரைவில் அறிவிக்க உள்ளார்.

போதைப்பொருள் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டுமென மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர் என அமைச்சர் ஜோன் அமரதுங்க சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-5)

## மரண அறிவித்தல்

### அமரர் சின்னப்பு நடராசா

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1933.10.01 | 2015.06.14 |



வரணியை பிறப்பிடமாகவும் முரசுமோட்டை 2 ஆம் கட்டையை வசிப்பிடமாக கொண்டவரும் தற்போது வரணி இயற்றாலையில் வசித்து வரும் சின்னப்பு நடராசா அவர்கள் 14.06.2015 அன்று அமரத்துவம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு சேதுப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற பழனிப்பிள்ளை ஞானரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் ஸ்ரீபரமேஸ்வரிதேவியின் அன்புக் கணவரும் தயாநிதி (கனடா), தயதீசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சர்வராசா (கனடா), ராகினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சாயுத்தியன் (கனடா), அபிநயா, சியான் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேரனுமாவார். காலஞ் சென்றவர்களான பொன்னையா, சிவபாக்கியம் மற்றும் அன்னபூரணம் ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்றவர்களான தங்கராணி, ஸ்ரீஸ்கந்தரசா, கிருஸ்ணராசா, புவனேஸ்வரிதேவி மற்றும் ஸ்ரீபார்திதேவி, ஸ்ரீஆனந்தராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் (17.06.2015) நாளை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குடமியன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

வரணி இயற்றாலை
வரணி.

(சி-1283)

தகவல்:
குடும்பத்தினர்

# பாடசாலைக் காணியில் மாணவன் சடலமாக மீட்பு

(கொழும்பு)

உடவலவ - மிரிஸ்வெல்பொத்த பாடசாலைக்கு அருகில் உள்ள காணியில் இருந்து மாணவன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் நேற்றுக்காலை மீட்கப்பட்டதாக உடவலவ பொலிஸார் தெரிவித்தனர்.

11ஆம் தரத்தில் கல்வி பயிலும் 17 வயது மதிக்கத்தக்க மாணவனின் சடலமே வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளது.

மாணவன் நேற்று முன்தினம் முதல் காணாமல் போனதாக பெற் றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாணவனின் மரணம் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என ஆசிரிய சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (இ-5)

# மரணதண்டனை நிறுத்தம்

(இஸ்லாமாபாத்)

புனித ரமழான் மாதம் தொடங்குவதை முன்னிட்டு சிறைக் கைதிகளின் மரண தண்டனை ஒரு மாதத்திற்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது. கடந்த டிசெம்பரில், பெஷாவர் பாடசாலையில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் மாணவர்கள் உட்பட 150 பேர் உயிரிழந்தனர்.

இதனால் பாகிஸ்தான் அரசு ஆறு ஆண்டுகளாக நிறுத்திவைத்திருந்த சிறைக் கைதிகளின் மரண தண்ட னையை நிறைவேற்றத் தொடங்கியது. இதை நிறுத்துமாறு ஐ.நா. ஐரோப்பிய கூட்டமைப்பு சர்வதேச மனித உரிமை ஆணையம் உள்ளிட்ட அமைப்புகள் விடுத்த கோரிக்கையை பாகிஸ்தான் நிராகரித்து விட்டது. பயங்கரவாதிகளுக்கு மரண தண்ட னையை நிறைவேற்றினால் தான் பயங்க ரவாதம் கட்டுக்குள் வரும் என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

கடந்த மே 29 நிலவரப்படி 125 கைதிகளின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இன்னும் 8ஆயிரத்துத்திற்கும் அதிகமான கைதிகள் மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)


## ஓராண்டு நினைவில்..

சேவையாளன் அமரர் சுந்தரம் குணராஜா

மண் மகிழ 01.01.1940 — விண் நெகிழ 26.06.2014



ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை- (காயம்)
மனம் மாறவில்லை- (மீள)
மீண்டுவர மாட்டீர்களா? ஐயா
நீங்கள் கோடியில் ஒரு தந்தை
கோடி வணக்கங்கள் கூறி வணங்குகிறோம்.

(7669)

தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி

தொ.பே.இல.
021 222 9621

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



உங்கள் வீட்டில்
இருந்தவாறே உள்நாட்டு / வெளிநாடுகளுக்கான முக்கிய ஆவணங்கள், பொதிகளை அனுப்பிட நாடுங்கள்

077 293 1062

CNR World Wide Express

401, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(C-1282)


## இராசி பலன்

16.06.2015
(ஆனி 01, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
அமாவாசை முன்னிரவு 8.14 மணிவரை
ரோகினி காலை 6.25 மணிவரை
இராகுகாலம் 2.53-4.23 மணிவரை
சுபநேரம் 10.23-11.53மணிவரை
அமாவாசை விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | சந் புதன் | சூரி செவ் |
| | இன்றைய கிரக நிலை | | குரு சுக் |
| | | | |
| | | சனி | ராகு |

**மீனம்:** மனோ தைரியம் கூடும், செல்வாக்கு மேலோங்கும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்பை பெறுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்ற முண்டு.

**மேடம்:** எந்தக் காரியத்திலும் தாமதங்கள் ஏற்படலாம், மனோசங்கடமுண்டு, செலவுகள் அதிகமாகும், ரோக பயமுண்டு, கௌரவக் குறைவான நாள்

**இடபம்:** வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சயன சுகமுண்டு, போசன நன்மையுண்டு, கற்பனை மிகுதியான நாள், மாதர் நட்புண்டு.

**மிதுனம்:** பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சோம்பலை விலக்குவது நல்லது, காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**கும்பம்:** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், ரோக பயமுண்டு, மனச்சஞ்சலங்கள் கூடும், பயணங்களால் பலனுண்டு, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**கடகம்:** தனதானிய சேர்க்கையுண்டு, சயன சுகமுண்டு, குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், எடுத்த காரியங்களில் எளிதில் கைகூடும், உறவினர் வருகையுண்டு.

**மகரம்:** அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், காரிய இடையூறுகளால் உற்சாகம் குறையலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, வியாபார நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்:** எடுத்த காரியம் கைகூடும், பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், ஆரோக்கியமான நாள், செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு:** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், தேக நலனில் உற்சாகம் பிறக்கும், பகைவர்கள் விலகுவர், செய்தொழில் மேன்மையுண்டு.

**விருச்சிகம்:** மனோ தைரியமுண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், சயனசுகமுண்டு, நண்பர்களின் சந்திப்பினால் பரவசமடைவீர்கள், கல்வியில் நன்மையுண்டு.

**துலாம்:** உடல் உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், செலவுகள் அதிகரிக்கும், போசன சுகக் குறைவான நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் ஏற்படலாம்.

**கன்னி:** என்ன நேருமோ என்ற பயம் உருவாகும், தொழிலில் சீரப் பிரயாசை காட்டுவீர்கள், அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









கலாநிதி கு.சோமசுந்தரம் எழுதிய நாவலர் வழியில் பண்டிதமணி கணபதிப்பிள்ளை என்ற நூல் வெளியீட்டுவிழா அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் சைவப் புலவர் செல்லத்துரை, நாவலர் நற்பணி மன்றத்தலைவர் ந.கருணை ஆனந்தன், கணக்காளர் எஸ்.யு.சந்திரகுமாரன், அகில இலங்கை இந்துமாமன்றத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி மு.கதிர்காமநாதன் ஆகியோர் உரையாற்றுவதையும் நூலின் பதிப்பாசிரியர் சிவத்திரு கா.சிவபாலனுக்கு நூலாசிரியர் கலாநிதி கு.சோமசுந்தரம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# மு.காவின் எதிர்ப்பை பொருட்படுத்தாது 20ஐ ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும்

## ஜோன் செனவிரட்ன வலியுறுத்து

• (கொழும்பு)

**இருபதாவது திருத்தம் தொடர்பான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின எதிர்ப்பை பொருட்படுத்தாது அதனை நிறைவேற்ற அனைத்து நடவடிக்கைக ளையும் ஜனாதிபதி முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா வும் எம்.பியுமான ஜோன் செனவிரட்ன, பொதுத் தேர்தலில் அதிக ஆசனங்களை வெற்றி பெறும் கட்சி க்கே பிரதமர் பதவி வழங்கப்பட வேண்டுமென் றும் தெரிவித்தார்.**

இது தொடர்பாக முன்னாள் அமைச்சரும் எம்.ப.யுமான ஜோன செனவிரட்ன மேலும் தெரிவிக்கையில்,

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு 108 க்கும் அதிகமான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர். எனவே இது தொடர்பில் எந்தவிதமான கருத்து முரண்பாடுகளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு கிடையாது. ஆனால கடந்த 30 வருட காலமாக நாட்டில் நியாயத்தை குழி தோண்டிப் புதைத்துள்ள தேர்தல் முறைமை மாற்றத்திற்கான 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடாகும். 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிய பின்னர் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும்.

இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பாக 255 ஆசனங்கள் தொடர்பான யோசனைகளை சிறுபான்மை இனக் கட்சிகள் சிறிய கட்சிகள் ஏற்றுக்கொண்டுள்ளன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாத்திரமே எதிர்க்கின்றது.

எதைக்கொண்டு வந்தாலும் எதிர்ப்பதுதான் முஸ்லிம் காங்கிரஸின் வழக்கமாகும். எனவே அந்த எதிர்ப்பை பொருட்படுத்தாது 20 ஐ நிறைவேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். எதிர்வரும் பொதுத்தேர்தலுக்கு பின்னர் எந்தக் கட்சி அதிக ஆசனங்களை வெற்றி பெறுகிறதோ அக் கட்சிக்கே பிரதமர் பதவி வழங்கப் பட வேண்டும். அவ்வாறு வழங்கப் படாது சிறிய பெரும்பான்மை உள்ள கட்சிக்கு பிரதமர் பதவி வழங்கியதால் தான் இன்றைய பிரச்சினைகளுக்கு வழி வகுத்தது என் றும் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார.

இதேவேளை பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேர ணையை கொண்டு வருவதில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் இரு வேறு க்ருத்துக்கள் தலைதூக்கியிருப்பதாகவும் தெரியவருகிறது. பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை அவசரமாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென ஒரு தரப்பினரும் 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட பின்னர் பிரதமருக்கு எதிரான் நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றப்பட வேண்டுமெனவும் ஒரு தரப்பினரும் வேண்டுகோளை முன்வைத்திருப்பதாகவும் தெரிய வருகிறது. (இ-5)

# திஸாநாயக்கவுக்கு ஒருசட்டம் சந்திரிகாவுக்கு ஒருசட்டமா?

## பந்துல கேள்வி



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வெளியிடும் கருத்துக்களால் நீதிமன்றத்திற்கு அவமதிப்பு ஏற்படவில்லையா? என முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன கேள்வி எழுப்பியுள்ளார். நாவலப்பிட்டி பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு அழைப்பது சட்டரீதியானது அல்ல என நீதிமன்றத்தில் வாதம் முன் வைக்கப்பட்டதாகவும் அதன் பின்னர் மனுவை விசாரணைக்கு எடுக்கும் வரை அவரை கைது செய்ய தடுக்கும் உத்தரவொன்று நீதிமன்றத்தினால் வெளியிடப்பட்டது எனவும் பந்துல தெரிவித்தார். இந்த தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர், தீர்ப்பை வழங்கிய நீதிபதிகள் பெண்களை துஷ்பிரயோகம் செய்தவர்கள் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற நாய் தீர்ப்பொன்றை வழங்கியதாக அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கூறியிருந்தார். இதனையடுத்து அவர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதாகவும் பந்துல குணவர்தன சுட்டிக் காட்டியுள்ளார்.

சந்திரிகா, நீதிபதிகளை பெண்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தும் நபர்கள் என கூறியுள்ளார். எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு அமுலான சட்டம் ஏன் சந்திரிகாவுக்கு அமுல்படுத்தப்படவில்லை எனவும் பந்துல குணவர்தன கேள்வி எழுப்பியுள்ளார். (இ-5)

# சனத்தொகையின் அடிப்படையிலேயே தொகுதிகளை தீர்மானிக்க வேண்டும்

## ஜே.வி.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சனத்தொகை அடிப்படையில் தொகுதிகளை நிர்ணயிக்காமல் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை முற்கூட்டியே தீர்மானிப்பது அடிப்படையற்றது என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

பொதுத் தேர்தலொன்றுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலையில் அவசர அவசரமாக தேர்தல் மறுசீரமைப்புக்குச் செல்ல முடியாது.

எனவே நடைபெறவிருக்கும் பொதுத தேர் தலை தற்பொழுது நடைமுறையிலு ள்ள விகிதாசார முறையில் நடத்தி விட்டு, தேர்தலின் பின்னர் கூடும் பாராளுமன்றத்தில் தேர்தல் மறுசீரமைப்பை நிறைவேற்ற வேண்டும் என ஜே.வி.பியின் அரசியற்குழு உறுப்பினரும், தொழிற்சங்கத் தலைவருமான கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

விகிதாசார தேர்தல் முறை மாற்றப்பட வேண்டும் என்ற அடிப்படை கொள்கையில் ஜே.வி.பி உள்ளதாகவும், இருந்தபோதும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை உரியமுறையிலான தொகுதி நிர்ணயத்தின் பின்னரே தீர்மானிக்கப்பட வேண்டும்.

அதற்கு முன் னர் எம்.பிக்களின் எண்ணிக்கை யைத் தீர்மானிப்பது அடிப்படை யற்றது எனவும் அவர் தெரிவிததார். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு

### திருமதி கனகரத்தினம் அருந்தேஸ்வரி



காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் அருந்தேஸ்வரி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெற்று பின்னர் பூதவுடல் வவுனியா தட்சணாங்குளம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி விஜயராஜா செல்வநாயகி



மயிலங்கூடலைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய், கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயராஜா செல்வநாயகி கடந்த 13ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை புதன் கிழமை மு.ப11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் பி.ப2மணிய ளவில் பொறளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தை வென்ற மகிந்தவுக்கு மக்களை வெல்ல முடியவில்லை

## அமைச்சர் ராஜித சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**நாட்டை பயங்கரவாதத்திலிருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீட்டுள்ள போதும் மூக்க ளின் மனங்களை அவரால் வெல்ல முடியாது போயுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**



அகில இலங்கை வை. எம். எம். ஏ. மாநாட்டில் நேற்றுமுன்தினம் பிரதம விருந்தினராக கலந்து கொ ண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார். அவர் மேலும் தெரிவிக் கையில்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பயங்கர வாதிகளிடமிருந்து நாட்டை மீட்டார். ஆனால் அவர் சமாதானத்தை யதார்த்த மாக்கவில்லை.

மக்களின் மனங்களை யும் அவர் வெல்லவில்லை. ஜனவரி 8 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள் இதனைத் தெளிவு படுத்தின. எதிர்கால அரசியல் தலைவர்களும் இதனைத் தகுந்த பாடமாக ஏற்று மக் கள் மனங்களை வெல்ல வேண் டும். இனப்பிரச்சி னைக்கு மூல காரணம் அதிகாரப் பசியேயாகும். சிங்களத் தலைவர்கள் சிங்கள வாக்குக ளைப் பெற அரசியல் செய்த னர்.

தமிழ் அரசியல்வாதிக ளும் அவ்வாறே வாக்குகளை பெற அரசியல் செய்தனர். பின்னால் சில முஸ்லிம் தலைவர்களும் அவ்வாறே செய்தனர். சகலருக்கும் சம மான கவனிப்பு இருக்க வேண் டும். சம உரிமை வாழ்வே அவசியம். நாங்கள் இன்று நாட்டு மக்களை மீட்டு சமா தானமாக வாழும் சூழலை உருவாக்கியுள்ளோம்.

முஸ்லிம்களுக்கு மஸ் ஜித் செல்ல இன்று பயமி ல்லை. 'சேனாக்களும், 'பலய க்களும்' இன்று வர முடி யாது. தமிழர்கள் இன்று நிம் மதியாக உறங்குகின்றனர். இரவில் இராணுவ ஜீப் வந்து உறங்குபவர்களின் பிள்ளை களைக் கொண்டு செல்லாது. தமிழர்களின் காணிகள் பறிக்கப்படாது.

முன்னைய காலங்களில் பெறப்பட்ட காணிகளை அர சாங்கம் திருப்பி கையளித்து வருகிறது. மகிந்தவின் ஒரே நோக்கம் தேர்தலில் வெல்வ தாகவே இருந்தது. அவர் மக்களின் எண்ணங்களை கருத்திற்கொள்ளவில்லை. நான் அமைச்சரவையில் மகிந்த ராஜபக்ஷவுடன் வாக்குவாதங்களில் ஈடுபட்டவன்.

முஸ்லிம் அமைச்சர்கள் மௌனம் காத்த வேளை யில் கூட முஸ்லிம்களுக்காக நான் அமைச்சரவையில் போராடியவன். நான் இறுதி வரை மனிதாபிமானத்துக் காகப் போராடுவேன் என்றும் சுகாதார சுதேச அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ஏ. எச். எம். பௌஸி உட்பட வை. எம். எம். ஏ. பேராளர்கள், உறுப்பினர்கள் இந்த மாநாட்டில் பங்குபற் றியிருந்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. (இ-5)

# பிரதமர் ரணிலுக்கெதிரான பிரேரணை 40 எம்.பிக்கள் கையெழுத்திடவில்லை

## திலங்க சுமதிபால

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிர மசிங்கவுக்கு எதிரான நம்பி க்கையில்லாப் பிரேரணை யில் ஐக்கிய மக்கள் சுதந் திரக்கூட்டமைப்பின் 40 நாடாளுமன்ற உறுப்பினர் கள் கையெழுத்திடவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள ளது.

கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால இந்தத் தகவலை வெளிநாட்டு வானொலி ஒன் றிடம் வெளியிட்டுள்ளார்.

இந்த தருணத்தில் பிரதம ருக்கு எதிரான நம்பிக்கை யல்லாப் பிரேரணை அவசிய மற்றது என்று குறிப்பிட்டுள்ள அவர்,

20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதே தற்போ துள்ள அவசியமான காரியமா கும். இந்த வாய்ப்பை தவற விட்டால், வாழ்நாளில் ஒருபோ தும் இதனை நிறைவேற் றிக்கொள்ள முடியாது என் றும் சுமதிபால தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் 20ஆவது திருத்தத்தை நிறை வேற்றுவதில் தாமதிப்பதாக திலங்க சுமதிபால குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்நிலையில் 20 ஆவது திருத்தம் நிறைவேற் றப்பட்ட வுடன் ஜனாதிபதி நாடாளு மன்றத்தை கலைப்பார். அதே நேரம் அது நிறைவேற்றப் படாது போனாலும் உடன டியாக நாடாளுமன்றம் கலை க்கப்படும் என்று சுமதிபால தெரிவித்துள்ளார். (இ-5)

# கௌரவிப்பும் பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கொம ர்ஷல் வங்கிக் கிளை யின்ஏற்பாட்டில் தரம்5 புலமைப்பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாண வர்களுக்கான கௌரவிப்பும் பரிசளிப்பு விழாவும் நாளை 17 ஆம் திகதி புதன்கி ழமை பி.ப.4.30மணிய ளவில் சுன் னாகம் கொமர்ஷல் வங்கிக் கிளையில் இடம்பெ றவுள் ளது. (இ-3-7)


**டயானா பிளாஸ்டிக் மீள் சுழற்சி**

கழிவு பிளாஸ்டிக் விலைக்கு வாங்கப்படும்

வாளிவேசன்-1Kg-50/=

கதிரை-1Kg-80/=

கான்-1Kg-35/=

(C-1138)

**தொடர்புகளுக்கு:-0212228680, 0775925088**

**108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க எம்முடன் இணையுங்கள்


# விமானப்படைத் தளபதியாக ககன புளத்சிங்கள நியமனம்

விமானப்படையின் தளபதியாக ககன புளத்சிங்கள நியமிக்கப்பட்டுள்ளார்.

எயார் வைஸ் மார்ஸல் ககன புளத்சிங் களவை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விமானப்படைத் தளபதியாக நியமித்து ள்ளார். இதுவரை காலமும் விமானப் படைத் தளபதியாக கடமை யாற்றிய கோலித குணதிலக்க, கடந்த 11ஆம திகதி இராணு வப் படைகளின் கூட் டுத் தளபதியாக பத விப்பிரமாணம் செய்து கொண்டார்.

இதன் காரண மாக ஏற்பட்ட வெற் றிடதிற்கு ககன புளத் சிங்கள நியமிக்க ப்பட்டுள்ளார்.

எயார் வைஸ் மார் ஸல் ககன் குணதி லக்க, விமானப்படை யில் இடம்பெற்ற பாரிய மோசடிகளு டன் தொடர்புபட்டிரு ப்பதாக குற்றம் சும தத்ப்ட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

இதேவேளை, புதி தாக நியமிக்கப்பட்ட பாதுகாப்பு படைக ளின் பிரதானி எயார் சீப் மார்ஷல் கோலித குணதிலக மற்றும் புதிய விமானப்படை தளபதி எயார் மார் ஷல் ககன புளத்சிங் கள ஆகியோர் நேறறு ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேனவி டம் இருந்து நியம னம் கடிதங்களைப் பெற்றுக் கொண் டனர். (இ-5)


**யாழ்.வண் வடகிழக்கு கலட்டி**

**ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்**

**இன்று ஏழாம் நாள்**



கஜமுகனே கரிமுகனே கலட்டிப்பதியுறை கணபதியே
கால்பிடித்தோம் ஐயா! காத்தருள்புரிய வேண்டும்
நிஜவாழ்வில் உன்னையே நிச்சயமாய் நம்பி வந்தோம்
நீலகண்டன் பெற்றெடுத்த பாலகணபதியே ஆனைமுகனே!
புஜபல பராக்கிரமங்கொண்ட அசுரனை அழித்தவனே
பூதலத்தோர் போற்றிடும் பாதபங்கஜம் பணிந்தோம்!
மூசுஷிக வாகனனே முன்னவனே மூத்தவனே கஜவதனா
கருணை புரிந்தே காப்பாய் தயா நிதியே சரணம்! சரணம்!!

(C-1281)

**நாச்சிமார் கோவிலடி**
**கே.கே.எஸ் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**சுஜீவா வைத்தியசாலை**
**(தாய்மைப்பேற்று சிறப்பு சித்த ஆயுர்வேத வைத்தியசாலை)**



**நயினை பாமாலை**



நயினாதீவு நாகபூஷணி அம் மன் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உங் கள் வலம்புரியில் நயினாதீவு நாகபூஷணி அம்மன் பாமாலை வெளிவரும்.

உங்கள் கவிதைகளை அனுப்பி வையுங்கள்.

**இல.3,2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.**



இவர்களுக்கு **மணமகள் தேவை** — **கல்யாண மாலை** — இவர்களுக்கு **மணமகன் தேவை**

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 17 செவ் 8 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4607 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 15 1/2<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: G/4613 |
| பிறப்பு: 1983 RC<br>உயரம்: 6’<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/4609 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 32 1/2 செவ் 2 இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/4622 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 37 செவ் 4 இல்<br>உயரம்: 5’8"<br>தகைமை/தொழில்: A/L/ முகாமையாளர் லண்டன்<br>தொ.இ: B/4610 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 29 1/2<br>உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: BBM/ தனியார் தொழில்<br>தொ.இ: G/4624 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 58 செவ் 8 இல்<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: கனடா PR<br>தொ.இ: B/4611 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 30 செவ் 1 இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்: MBCS/ சித்தவைத்தியர்<br>தொ.இ: G/4625 |

**கல்யாண மாலை**

**(சர்வதேச திருமண சேவை)**

**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**

**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**

**தொடர்பு:- 021 720 1005**

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கஞ்சா குற்றம் நிரூபிக்கப்படுமாயின் புனர்வாழ்வுக்கு அனுப்புவது நிச்சயம்

## நீதிபதி சிவகுமார் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

**கஞ்சா தொடர்பான குற்றச்சாட்டுக்களில் தொடர்புடையவர்களின் குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் புனர்வாழ்வுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் எச்சரித்துள்ளார்.**

யாழ். திருநகர் பகுதியில் கஞ்சாப் பொதிகளுடன் நேற்று முன்தினம் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே நீதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

சந்தேகநபர் இருவரையும் எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளதுடன் கஞ்சா, ஹெரோயின் போன்ற பொருட்கள் வைத்திருந்த குற்றச்செயல்களில் தொடர்புடையவர்கள் பூரண விசாரணைக்கு பின்னர் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரம் வாசிக்கப்படும் போது அவர்கள் தமது குற்றத்தை ஏற்றுக் கொண்டால் அல்லது அவர்களது குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிப்பதுடன் புனர்வாழ்வுக்கு அவர்கள் அனுப்பிவைக்கப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## வாள்வெட்டுக்கு இலக்காகியிருந்த குடும்பஸ்தர் வைத்தியசாலையில்

(கரணவாய்)

வாள்வெட்டுக்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புலோலி தெற்கு புலோலியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தவராஜா (வயது -60) என்பவரே வாள்வெட்டுக்கு இலக்கானவராவார்.

கடந்த சனிக்கிழமை இரவு காந்தியூர் வெள்ளையன் வைரவர் ஆலயப் பகுதியில் இளைஞர் குழு ஒன்று பிரஸ்தாப நபரை கையிலும் காலிலும் வாளால் வெட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பிரஸ்தாப குடும்பஸ்தர் மேலதிக் சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3-60)





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கடந்த 12 ஆம் திகதி முகிழ்நிலை ஆசிரிய மாணவர்களுக்கான பிரிவுபசார நிகழ்வு கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்ற போது....

## மனைவியை உலக்கையால் தாக்கிய கணவனை கைது செய்த பொலிஸார்

(கரணவாய்)

மனைவியை உலக்கை கொண்டு தாக்கிய கணவனை பொலிஸார் கைது செய்துள்ளனர். மனைவி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.நேற்று முன்தினம் அட்டிய தோட்டம் அல்வாய்ப் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிரஸ்தாப குடும்பப் பெண் தலையின் பிடரிப் பகுதியில் தாக்குதலுக்குள்ளாகி மயக்கமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மகன் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து தந்தை கைது செய்யப்பட்டதுடன் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ-3-60)




## வரவேற்கும் வைபவம்

கரவெட்டி கட்டைவேலி நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் சபை உறுப்பினர்களை வரவேற்கும் வைபவம் கடந்த 12 ஆம் திகதி சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இவ் வரவேற்பு வைபவத்தில் நெல்லியடி வைரவர் ஆலயத்திலிருந்து இசை வாத்தியங்கள் முழங்க இயக்குநர் சபை உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு தனது கன்னியுரையை நிகழ்த்திய சங்கத் தலைவர் க.கந்தசாமி தரப்படுத்தலில் 7 ஆவது இடத்திலிருக்கும் கட்டைவேலி- நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தை முதலாமிடத்திற்கு கொண்டு வருவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றது.

மேலும் கூட்டுறவுச் சங்கக் கடைகளில் பொருட்களின் விலைகளை தனியார் கடைகளிலுள்ள பொருட்களின் விலைகளிலும் பார்க்க குறைவாக வழங்கப்படுவதன் மூலம் சங்கத்தை இலாபத்தில் இயங்க வைக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-3-60)

## அச்சுவேலி-திருகோணமலை பேருந்துச் சேவை ஆரம்பிப்பு

(யாழ்ப்பாணம்)

பயணிகளின் நன்மைகருதி திருகோணமலைக்கான பயணிகள் பேருந்து சேவை அச்சுவேலியிலிருந்து ஆரம்பிக்கப்படும் என இலங்கை போக்குவரத்துச்சபையின் யாழ். சாலை முகாமையாளர் செ.குலபாலசிங்கம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

இலங்கைப் போக்குவரத்துச் சபை யாழ்.சாலையினால் இதுவரை காலமும் இரவு 7மணிக்கு யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து புறப்படும் திருகோணமலை பேருந்து சேவை பயணிகளின் நன்மை கருதி அச்சுவேலி பேருந்து நிலையத்திலிருந்து மாலை 5.30மணிக்கு புறப்பட்டு யாழ்.மத்திய பேருந்து நிலையம் சென்று அங்கிருந்து வழமைபோல் இரவு 7மணிக்கு திருகோணமலை நோக்கி புறப்படும். அதே போல் திருகோணமலை பேருந்து நிலையத்தில் இருந்து காலை 6.20க்கு புறப்படும் பேருந்து யாழ். மத்திய பேருந்து நிலையம் சென்று அங்கிருந்து அச்சுவேலி சென்றடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## சனசமூக நிலையங்களுக்கு நன்கொடை வழங்கவேண்டும்

(கரணவாய்)

சனசமூக நிலையங்கள் வினைத்திறனுடன் இயங்குவதற்கு நன்கொடைகள் வழங்கப்படவேண்டுமென வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் சமாசம் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் சனசமூக நிலையங்களின் சமாசம் மேலும் தெரிவிக்கையில்,

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் 98 சனசமூக நிலையங்கள் உள்ளன. ஒரு கிராமத்தின் வளர்ச்சியில் சனசமூக நிலையங்களின் பங்களிப்பு கணிசமானது.

சனசமூக நிலையங்கள் ஊடாக பல்வேறு சேவைகள் கிராம மக்களுக்கு வழங்கப்படமுடியும்.

மேலும் சனசமூக நிலையங்கள் வினைத்திறனுடன் செயற்படவும் கிராமமக்களின் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்லவும் வடக்கு மாகாண முதலமைச்சரிடமிருந்து நன்கொடைகள் வழங்கப்படுவது இன்றியமையாதது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-3-60)

## கருத்துரை

வடக்கு கிழக்கு மாகாணங்களில் விஞ்ஞானக் கல்வி பற்றிய ஒரு கண்ணோட்டம் எனும் தலைப்பில் ஒலிம்பியன் நா. எதிர்வீரசிங்கம் கருத்துரை வழங்கவுள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ். [illegible] மண்டபத்தில் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது. (இ-3-7)

## வணிகர் கழகத்தால் வாழ்வாதார உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகர் கழகம் ஒவ் வொரு பிரதேச செயலகப் பிரிவிலிருந்தும் சிற்றுண்டி வகை உணவுகளை தயாரித்து விற்பனை செய்து வரும் பெண்களுக்கு வாழ்வாதார உதவியாக ரூபா 10 ஆயிரத்தை அந்தந்த பிரதேச செயலரின் சிபார்சின் அடிப்படையில் வழங்கி வருகிறது.

இதன் அடிப்படையில் இரண்டாவது கட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு யாழ்.வணிகர் கழக பணிமனையில் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலகப்பிரிவில் 15 பயன்ாளிகளுக்கும் ஊர்காவற்றுறை பிரதேச செயலகப்பிரிவில் 16 பயனாளிகளும் இக் கொடுப்பனவு பெறவுள்ளார்கள்.

இதற்கான நிதியை சிங்கப்பூரைச் சேர்ந்த துரை தம்பதியினருடன் யாழ். வணிகர் கழகமும் இணைந்து வழங்கியுள்ளது என யாழ். வணிகர் கழகத்தின் உப செயலாளர் ச.சிவகுமரன் அறிவித்துள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயரும் ராணுவம் இல்லாமல் போகாது!

வடக்கிலிருந்து இராணுவத்தை முற்றாக அகற்ற ஒருபோதும் தீர்மானம் எடுக்க வாய்ப்பில்லை என்பதை வெளிப்படுத்தும் வகையில் சுமார் 3.25 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் புதிய திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது.

இத்திட்டம் யாழ்.வலிகாமம் வடக்குப் பகுதியை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்படவுள்ளது. அத்தோடு எதிர் காலத்தில் வடக்குபூராகவும் இத்திட்டத்தை அமுல்படுத்த அரசு தீர்மானித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா உள்ளிட்ட நாடுகள் இந்த பாரிய திட்டத்திற்கு உதவிகள் வழங்க முன்வந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

விமான நிலைய விஸ்தரிப்பு, துறைமுக விஸ்தரிப்பு, பாதுகாப்புத் தரப்பினரின் முகாம்களை நகர்த்துதல் என்பன இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மகிந்த ஆட்சிக்காலத்தில் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட வலிகாமம் வடக்குப் பகுதியில் சுமார் ஆறாயிரத்து 500 ஏக்கருக்கும் மேற்பட்ட தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு இராணுவம் உள்ளிட்டபடைத் தரப்பின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இக்காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும், இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படுவார்கள் என்ற வாக்குறுதியை முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும் அவரது அமைச்சரவையிலிருந்த அமைச்சர்களும் ,அரச தரப்பினரும் காலத்திற்கு காலம் வழங்கி வந்த போதும் மக்களின் மீள்குடியேற்றம் என்பது சாத்தியப்படாத ஒன்றாகவே காணப்பட்டது.

26 ஆண்டுகள்நலன்புரிநிலைய வாழ்க்கையை வாழ்ந்துவரும் வலிகாமம் வடக்கு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் 38 நிலையங்களில் தற்போதும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மைத்திரி தலைமையிலான அரசு கடந்த 2015 ஜனவரி மாதம் 9 ஆம் திகதி பதவியேற்றதையடுத்து தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்கும் நடவடிக்கைகள் மந்தகதியிலேனும் இடம் பெற்று வருகின்றது.

வலிகாமம் வடக்கில் உயர் பாதுகாப்பிற்குட்பட்ட சுமார் 1000 ஏக்கர் காணிகளை புதிய அரசு விடுவித்துள்ளது ஓரளவுக்கேனும் தமிழருக்கு ஆறுதலையளித்துள்ளது.

மைத்திரி ஆட்சிபீடம் ஏறுவதற்கும் மகிந்த ஆட்சியிலிருந்து இறங்குவதற்கும் தமிழ் மக்களின் வாக்குகள் பிரதான பங்காற்றியிருந்ததால் நன்றிக்கடனாக தமிழர் நலன்சார்ந்த சில திட்டங்களை புதிய அரசு முன்னெடுத்து வருவது உண்மையே.

ஆனால், மைத்திரி தலைமையிலான அரசின் 100 நாட்கள் திட்டத்தில் தமிழர் நலன் சார்ந்த திட்டங்களோ சிறுபான்மையினர் நலன் சார்ந்த திட்டங்களோ இடம் பெற்றிருக்கவில்லை என்பது ஏமாற்றத்தையே அளித்திருந்தது எனலாம்.

குண்டு மழையின் நடுவே உயிர்களைப் பணயம் வைத்து இடம் பெயர்ந்த நிலையில் அவலங்களுக்கு மட்டும் சொந்தக்காரர்களாக வாழ்ந்து வரும் மக்களுக்கு புதிய அரசின் அணுகு முறை வருத்தத்தை அளித்துள்ளதை மறுக்கமுடியாது. அதேவேளை அரசின் மாற்றுத்திட்டங்ளை தமிழர்கள் ஏற்றுத்தான் ஆகவேண்டும் என்ற நிலைக்குள்ளும் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதிய திட்டம் ஒன்றின் முன்மொழிவை பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் அண்மையில் கையளித்துள்ளார். அத்திட்டத்தின் பிரகாரம் வடக்கிலிருந்து இராணுவத்தை அரசு வெளியேற்றும் தீர்மானத்தை எடுக்க வாய்ப்பில்லை என்பது தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், இடம்பெயர்ந்த நிலையில் நலன்புரி நிலையங்களில் அடிப்படை வசதிகளற்ற நிலையில் அவலப்படும் தமிழ் மக்களுக்கு சொந்தநிலங்களை வழங்கி மீள்குடியேற்ற நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது என்பது தெரியவந்துள்ளது.

அதுமட்டுமன்றி பலாலி விமான நிலையம் அமைந்துள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப் படுவதோடு கடலுக்குள் விமான நிலையத்தை விஸ்தரிக்கும் திட்டத்தையும் அரசு பரிசீலிக்க முடிவெடுத்துள்ளதும் தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் தகவலாகவேயுள்ளது.

காணிகளை விடுவிக்கும் அரசு இராணுவத்தை வடக்கிலிருந்து வெளியேற்றப் போவதில்லை எனது.

அதேவேளை கடலுக்குள் சுமார் ஒன்றரைக் கிலோமீற்றர் அகலத்திற்கு இத்திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளது எனவும் முன்மொழிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இராணுவ முகாம்கள் ,கடற்படை முகாம்கள், விமானப்படை முகாம்கள் என்பவும் கடலுக்குள் கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ள அதேவேளை பலாலி விமான நிலையத்தின் ஓடுதளப் பாதையையும், விமான நிலையத்தையும் கடலுக்குள் விஸ்த ரிக்கும் வகையில் இந்த புதிய திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.



**Option 1: Coastal Buffer 1Km Width**

| Item | Qty | Rate (Rs) | Total (million Rs) |
|---|---|---|---|
| Land fill-1km Width | 50(million m3) | 4000 | 200,000 |
| Riprap | 7,000m | 1.5 | 10,000 |
| Investigation (5%) | | | 10,000 |
| Total | 220 Billion Rs. | | |

**Option 2: Coastal Buffer 1.5Km Width**

| Item | Qty | Rate (Rs) | Total (million Rs) |
|---|---|---|---|
| Land fill-1km Width | 100(million m3) | 4000 | 400,000 |
| Riprap | 7,000m | 2.5 | 17,500 |
| Investigation | | | 12,500 |
| Total | 430 Billion Rs. (approximately 3.25 Billion US$) | | |

கடலினுள் அமையும் பலாலி விமான ஓடுதளம் மற்றும் துறைமுகத் திட்டம் என்பனவற்றின் மாதிரி அமைப்பு




என்பதோடு இராணுவத்தை வெளியேற்றுமாறு கோரிக்கை வைப்பதற்கும் சந்தர்ப்பம் அளிப்பதை தவிர்க்கும் நடவடிக்கையினையும் மேற்கொண்டு வருகின்றது.

மக்களின் காணிகளில் இராணுவம் நிலைகொள்ளும் சந்தர்ப்பத்திலேயே இராணுவத்தை வெளியேற்றுமாறு கோரமுடியும். அவ்வாறு கோரப்படுகின்றது.

எனவே இராணுவத்தை கடலுக்குள் கொண்டுசென்றால் யாரும் இராணுவத்தை வெளியேற்றக் கோரமுடியாது என்பது புதிய அரசின் திட்டமாகவுமிருக்கலாம்.

இருப்பினும் இராணுவத்தைக் கடலுக்குள் கொண்டுசென்றாலும் இராணுவ நடவடிக்கைகள் முற்று முழுதாக அகற்றப்படுமா? என்ற கேள்வி பலமாகவே எழுந்துள்ளது.

இந்த பாரிய திட்டம் வலிகாமம் வடக்கில் மீள்குடியேற்றத் தடையைப் போக்கும் என எதிர்பார்க்கலாம்.

ஆனால் இரா ணுவ த்திற்கு நிரந்தர வதி விடத்தை வடக்கில் ஏற்படுத்துவதோடு எக்காலத்திலும் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இராணுவத்தை வெளியேற்றக் கூடிய சாத்தியப்பாடுகளை இல்லாமல் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகயிருக்கலாம்.

எஸ்.ஆர்.கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டராசிரிய பிரதிநிதிகளுக்கான அவசர கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாணத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்களின் பிரதிநிதிகளுக்கான அவசர கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9.30மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள எடிசன் கல்லூரியில் கிளிநொச்சி மாவட்ட தொண்டராசிரியர் சங்கத்தலைவர் தலைமையில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டராசிரியர்களின் தலைவர், செயலாளர் ஆகியோரை தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றது. (2)




# பயிர்களைப் பாதுகாக்க வாயுத்துப்பாக்கி

## வழங்கி உதவுமாறு விவசாயிகள் கோரிக்கை

(மல்லாவி)

**வடக்கு மாகாண மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகியவற்றிலுள்ள விவசாயிகள், காட்டு விலங்குகள், பறவைகள் என்பவற்றிடமிருந்து விவசாயப் பயிர்களைப் பாதுகாப்பதற்கு வடக்கு மாகாண தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறையிலுள்ள வாயுத்துப்பாக்கியை தமக்கும் வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கையொன்றை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பாகத் தெரிய வருவதாவது,

வடக்கு மாகாணத்திலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் யானை, பன்றி, குரங்கு ஆகிய விலங்குகளும் கிளி போன்ற பறவை இனங்களும் நெற்பயிர் உட்பட விவசாயிகளின் உணவுப் பயிர்களைச் சேதப்படுத்துகின்றன.

இதனால் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை வருமான இழப்பாக வருடந்தோறும் விவசாயிகள் இழக்கின்றனர்.

இதனைத் தீர்த்து வைக்கும் முகமாக பல்வேறு வகையான தடைகளை ஏற்படுத்திய போதும் காட்டு மிருகங்களினதும் பறவைகளினதும் தொல்லைகளைத் தடுக்க முடியாதுஉள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் நாட்டின் 23 இடங்களில் பயிர்களைச் சேதப்படுத்துகின்ற மிருகங்களையும் பறவைகளையும் துரத்துவதற்கு பயன்படுத்தப்படும் வாயுத் துப்பாக்கி விற்பனை நிலையங்கள் இயங்குகின்றன.

கிழக்கு மாகாணத்திலும் முதல் முதலாக வாயுத் துப்பாக்கி விற்பனை நிலையம் கடந்த 8 ஆம் திகதி திங்கட்கிழமை மட்டக்களப்பில் உள்ள காத்தான்குடியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இங்கு12ஆயிரத்து 500ரூபாதொடக்கம்50ஆயிரம்ரூபா வரையான நிலையில் வாயுத்துப் பாக்கிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

இத்துப்பாக்கியைப் பெறுவதற்கு விவசாயிகள் தமது ஆள் அடையாள அட்டையின் பிரதியுடன் தமது கைவிரல் அடையாளத்தையும் மற்றும் சில ஆவணங்களையும் ஒப்படைக்க வேண்டும்.

எனவே இவ்வாறான ஒரு நடைமுறையில் வடக்கு மாகாணத்திலும் விவசாயிகளின் நலன் கருதி வாயுத் துப்பாக்கிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு உதவ வேண்டுமென அரசாங்கத்திடம் வடக்கு மாகா ணத்தைச் சேர்ந்த விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)

# வயல் நிலங்கள் கிடைக்காவிடின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம்

## கொக்கிளாய், கருநாட்டுக்கேணி மக்கள் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட கொக்கிளாய், கொக்கு தொடுவாய், கருநாட்டுகேணி ஆகிய் இடங்களிலுள்ள 600 ஏக்கர் வயல் நிலங்கள் தமக்கு கிடைக்காவிடில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கப்போவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு, மாவட்ட செயலகத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட காணிப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நாடமாடும் சேவையொன்று கடந்த 12,13 ஆம் திகதிகளில் இடம்பெற்றது.

இந்நடமாடும்சேவைக்கு வருகை தந்த மேற்படி மூன்று கிராமங்களையும் சார்ந்த 600 ஏக்கருக்கு சொந்தமான மக்களுக்கும் காணி ஆணையாளரின் மேலதிக செயலாளர் எல்.வி.எஸ.வி. தயாரத்னவுக்கும் இடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த கிராம மக்கள், "நாங்கள் காலாகாலமாக வயல் செய்துவந்த நிலங்களை தற்போது மகாவலித்திட்டம் என்ற பெயரில் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. உரிமையாளர்கள் நாங்கள் இருக்கும் போது மகாவலித் திட்டம் என்ற பெயரில் எவ்வாறு சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டது என கேள்வி எழுப்பினர்.

"மகாவலி திட்டத்தில் தமிழர்களுக்கு காணி வழங்க முடியாதது ஏன்?. எங்களுடைய வயல் நிலங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டது எங்களுடைய [illegible]ாட வாழ்வாதாரத்தை உயரததககூடிய இந்த விவசாய வயல் நிலங்கள் எமக்கு கிடைக்காவிட்டால் நீதி கிடைக்கும் வரை உண்ணாவிரதம் இருப்போம்" என கூறினார்கள்.

இதற்கு பதிலளித்த மேலதிக செயலாளர், "இது தொடர்பாக மகாவலி அதிகாரிகளுக்கு அறியப்படுத்தியிருக்கிறோம். நாங்கள் அவர்களுடன் நேரடியாக சந்திப்பொன்றை ஒழுங்குசெய்து ஒருமாத காலத்துக்குள் உரிய பதிலொன்றை பெற்றுத்தருகிறோம்" என்றார். (2)

# இருபது பேருக்கு நவீன முறையிலான செயற்கைக்கைகள் பொருத்தப்பட்டன



யுத்தம் காரணமாக கைகளை இழந்த 20 பேருக்கு நவீன முறையிலானு செயற்கைக் கைகள் பொருத்தும் நடவடிக்கை கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி றோட்டரிக் கழகத்தின் தலைவர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியின் முயற்சியால் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கையும் தலா 400 அமெரிக்க டொலர் பெறுமதியுடையது. சாதாரண கைகளால் செய்யக் கூடிய வேலைகளில் அதிகபட்சமான வேலைகளை இந்தச் செயற்கை மூலமும் செய்ய முடியும் என ஏற்பாட்டாளர்கள் கூறினர். (2)

## ஆசிரியருக்கு விளக்கமறியல்

வவுனியா பூவரசன்குளம் மகாவித்தியாலயத்தில் சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டதாக கூறி அதே பாடசலையின் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு அதிகாரி ஜெ. ஜெயகெனடி தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பூவரசன்குளம் மகாவித்தியாலயத்தின் குறித்த ஆசிரியர் சிறுமிகள் மீது தகாத முறையில் நடந்து கொண்டதாக தெரிவித்து பூவரசன்குளம் பொலிஸாரிடம் அப்பகுதி மக்களும், தாய் சிறுவர் இல்ல அருட் சகோதரி ஒருவரும் முறைப்பாட்டை பதிவு செய்திருந்தனர்.

எனினும் குறித்த ஆசிரியர் சில நாட்களாக தலைமறைவாக இருந்துள்ள நிலையில், அவர் நேற்று முன்தினம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

இதன் பின்னரே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-250)

## வருடாந்த உற்சவம்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் திருவிழா இடம்பெறும்.

இதில் எதிர்வரும் 28 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் 30 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் நடைபெற்று ஜூலை மாதம் முதலாம் திகதி தீர்த்தத்திருவிழாவுடன் பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (2)

# போக்குவரத்தை மேற்கொள்வதற்கு ஏற்றவாறு வீதியை புனரமையுங்கள்

## சாரதிகள், பொதுமக்கள் கோரிக்கை


(கிளிநொச்சி)

வவுனியா வடக்கு நெடுங்கேணியில் இருந்து ஒலுமடுவிற்கு செல்லும் பிரதான வீதி, படுமோசமாக சேதமடைந்து காணப்படுவதால் போக்குவரத்துமேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு குறித்த வீதி புனரமைப்பு செய்யப்பட்டு ஒரு சில மாதங்கள் கடந்த பின்னர் மிக மோசமாக சேதமடைந்து காணப்பட்டது.

ஒலுமடு, பழம்பாசி, கீரிசுட்டான், குளவி சுட்டான், மருதோடை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் இப்பிரதான வீதியை தமது போக்குவரத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே இவ்வீதியை புனரமைப்பு செய்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பின் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-272)





**வள்ளுவர்புரம் செல்லமுத்து வெளியீட்டகம் வெளியிட்ட விசுவமடு கரீஸ் எழுதிய முகவரி அறியா முகவரி ஒன்றிற்காய் கவிதை நூல் வெளியீடு நேற்று சுண்டிக்குளம் சந்தி புல்வெளியில் பண்பலை வேந்தன் ரி.எஸ். முகுந்தன் தலைமையில் இடம்பெற்ற போது...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்ப கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(முல்லைத்தீவு)

இவ்வாண்டுக்கான 2 ஆம் பிரிவு புதிய (NVQ) கற்கை நெறிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜுலை மாதம் ஆரம்பமாகவுள்ளதாக இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் முல்லைத்தீவு உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பாலிநகரில் தகவல் தொழில்நுட்பம், தையற்கலை, வீட்டு மின்னிணைப்பு ஆகிய கற்கைநெறிகளும் ஒட்டுசுட்டானில் தகவல் தொழில்நுட்பம், தையற் கலை, நீர்க்குழாய் பொருத்துநர் ஆகிய கற்கைநெறிகளும் முல்லை. தொழில்நுட்ப வளாகத்தில் (Mullai-Tech) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், கணனி வன்பொருள் தொழில்நுட்பம், பெண்களுக்கான அழகுக்கலை, சிகை அலங்காரம், தையற் கலை, முச்சக்கரவண்டி திருத்துநர், அலுமினிய கட்டுமானம், வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்துநர், வெளியிணைப்பு, இயந்திர திருத்தம் ஆகிய கற்கை நெறிகளும் ஆரம்பமாகவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலதிக தக்வல் தேவைப்படுவோர், 021 229 0097, 071 395 6503, 071 031 8989 ஆகிய இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2)

# மின்னியல் போதனாசிரியர் பதவிநிலை வெற்றிடம்

(கிளிநொச்சி)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட பயிற்சி நிலையத்தில் வீட்டு தொழிற்சாலை மின்னியல் பாட கற்கை நெறிகளைக் கற்பிப்பதற்கான போதனாசிரியர்களுக்கான பதவிநிலை வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன என இவ்வதிகாரசபையின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளார் ஏ.வி.அல்பிரட் அறிவித்துள்ளார்.

இதற்கான தகைமைகளாக NVQ -4ஆம் மட்ட சான்றிதழுடன் ஒரு வருட துறைசார்ந்த அனுபவம் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

விண்ணப்பங்கள் அனைத்தும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை ஏ-9 வீதி , ஆனந்தபுரம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அல்லது நேரடியாக சமர்ப்பிக்க முடியும். இதற்கான இறுதி திகதி எதிர்வரும் 25ஆம் திகதி வியாழக்கிழமையாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார் . (2)

# மக்களின் தேவைகளை கருத்தில் கொண்டு உதவிகளை திட்டமிட்டு வழங்க வேண்டும்

## கிளிநொச்சி அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**அரச சார்பற்ற நிறுவனங்கள் பொதுமக்களுக்கு உதவிகளை வழங்கும்போது மக்களின் நீண்டகால தேவைகளை கருத்திற் கொண்டு திட்டமிட்டமுறையில் உதவிகளை வழங்கவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவி த்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் அரசாங்க அதிபருக்கும் இடையில் கடந்தவாரம் கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட செயலர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களின் தேவைகள் அதிகமாக காணப்படுகின்றன. அவர்களுக்கான உதவிகளை வழங்குவதற்கு பல்வேறுபட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

அவர்களுக்கு உதவிகளை வழங்க தீர்மானிக்கும் போது தேவைகளை முன்னிலைப்படுத்தி திட்டங்களை வழிவகுத்ததன் பின்னர் உதவிகளை வழங்கினால் சிறந்த பலனை பெறமுடியும்.

உதவிகளை மக்களுக்கு வழங்கும்போது அவற்றை ஆரம்ப உதவியாக கொண்டு தொடர்ந்து அவர்களுக்கான ஆலோசனைகளை வழங்கி வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு உதவி செய்யவேண்டும்.

அத்துடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தியதன் பின்னர் அவற்றை மேற்பார்வை செய்து அவர்களுடைய வருமானத்தை ஊக்குவிப்பதற்கான உதவிகளை தொடர்ந்து செய்யவேண்டும்.

இவ்வாறு நடைமுறைப்படுத்துவதன் மூலம் நிறுவனங்களால் வழங்கப்படும் உதவித்திட்டம் வெற்றியடையும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-9)




# கடந்தகால யுத்தத்தினால் 90ஆயிரம் பேர் கணவனை இழந்த நிலையில் உள்ளனர்

## மகளிர் விவகார பிரதியமைச்சர் தெரிவிப்பு

நாட்டில் கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக சுமார் 90ஆயிரம் பெண்கள் கணவனை இழந்துள்ளனர் என மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வு நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துரை வழங்குகையிலேயே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்தொடர்ந்து கூறுகையில்,

"யுத்தம் காரணமாக கணவனை இழந்த பெண்கள் மட்டுமல்ல 7 ஆயிரத்திற்கு அதிகமான பெற்றோரை இழந்த சிறுவர்களும் பல்லாயிரக்கணக்கான மாற்றுவலுவுள்ளோரும் உருவாகியுள்ளனர்.

இவர்களுக்கான வாழ்வாதாரங்கள் மேம்படுத்தப்படவேண்டும்.

பெண்களை தலைமையாக கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல திட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலாளர் சி.சத்தியசீலன் உட்பட பெண்கள் பலர் இதில் கலந்து கொண்டனர். (2)

# வீதிப் புனரமைப்பு பணியை தாமதமின்றி மேற்கொள்க

## பொதுமக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

சங்குப்பிட்டி மன்னார் பிரதான வீதியில் பூநகரி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பத்தினிப்பாய் கோயிலுக்கு முன்பாகவுள்ள வீதி மிகவும் தேசமடைந்த நிலையில் காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சுமார் 350 மீற்றர் தூரத்தைக் கொண்ட இடத்தில் வீதி சேதமடைந்த நிலை காணப்படுவதால் சிறியரக வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகளில் பயணிப்போர் எனபலதரப்பினரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட வீதி பெரியளவில் சிறப்பாக செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் அவ்வேலைத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஓரளவுக்கேனும் சேதமடைந்துள்ள இந்த இடத்தை சீர் செய்து அனைத்து போக்குவரத்திற்கும் உதவ வேண்டுமென இவ்வீதியால் பயணிப்போர் கோரிக்கை விடுக்கின்றனர். (2-254)

# முதிரை மரக்குற்றிகளை ஏற்றி பயணித்த வாகனம் பொலிஸாரால் நேற்று பறிமுதல்

சாரதி கைது



விசுவமடு பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மகேந்திரா ஜீப் வண்டியில் 10 முதிரை மரக்குற்றிகளை கடத்திக்கொண்டு சென்றவேளை பளைப்பகுதியில் வைத்து கிளிநொச்சி மாவட்ட போக்குவரத்து பொலிஸ் பிரிவினரால் நேற்று நண்பகல் 12 மணியளவில் வாகனம் கைப்பற்றப் பட்டதுடன் சாரதியும் கைது செய்யப்பட்டார்.

மரக்குற்றிகள் ஏற்றி பயணித்த வாகனத்திற்கு இலக்கத்தகடு பொருத்தப்படவில்லை.

கடந்த வாரம் இதேபோன்று 30 மரக்குற்றிகளை ஏற்றி பயணித்த வாகனத்தை மேற்படி பொலிஸார் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-277)

# புகையிலை பாவனைக்கெதிரான விழிப்புணர்வு பிரசாரப் பேரணி

## கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது



அபிவிருத்தி அடைந்த நாடுகளில் பிள்ளைகளுக்கு கிடைக்கும் பாதுகாப்பை எமது பிள்ளைகளுக்கும் பெற்றுக்கொடுப்போம் என்ற தொனிப்பொருளில் உலக புகையிலை ஒழிப்பு தின விழிப்புணர்வு பேரணி கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட குறித்த விழிப்புணர்வு பேரணி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நிறைவுபெற்றது. தொடர்ந்து புகையிலை பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு பிரசார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.


கிளிநொச்சி பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பேரணியில் கலந்துகொண்டவர்கள், உலகில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வாழும் பிள்ளைகள் பெற்றுக்கொள்ளும் பாதுகாப்பை எமது பிள்ளைகளுக்கும் பெற்றுக் கொடுப்போம், புகையிலை கம்பனிகளால் மறைக்கப்பட்டுள்ள உண்மைகளை வெளிக்கொண்டு வருவோம்.

நாளொன்றுக்கு 60 இலங்கையர்களை கொலை செய்வதுடன் (வருடத்துக்கு 20 ஆயிரம் பேர்) அதற்கு பதிலாக 80 சிறுவர்களையாவது புதிதாக பழக்க முற்படும் சிகரெட் கம்பனிகளின் பிடியிலிருந்து சிறுவர்களை பாதுகாப்போம், கம்பனியை பணக்காரர்களாக்கும் பயனில்லாத சிகரெட் பாவனையில் இருந்து விடுபடுவோம், சிகரெட் விறபனையை தவிர்த்து தேசப்பற்றோடு செயற்படும் வியாபாரிகளை ஊக்குவிப்போம் உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு சென்றனர்.

கிளிநொச்சி மாவட்ட தொற்றா நோய் பிரிவு பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் சானிக்க பெர்னாண்டோ, கிளிநொச்சி உள நல மருத்துவ அதிகாரி மருத்துவர் எல்.ஜெயராசா, மலேரியா தடுப்பு பிரிவினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











# சிறுவர் அரங்கம்

1166



## மூன்றாவது பகை!

...அப்போது, அவனது முன்னால் நின்றிருந்த நண்பர்கள் அலறினார்கள்.

வாவ்...

அய்யய்யோ...!

என்ன கொடுமை இது!

என்னாச்சு எல்லோருக்கும்? ஏன் இப்படி அலர்றீங்க?என்று கேட்டான் சித்து.

நம்ப முடியல என்றாள் ஜனனி.

இது ஒரு மிராக்கிள்...!என்றான் திலக்.

சித்து, உன் வலது தோள் பக்கம் பாரு... புதுசா,பின்னாடி ஒரு கை முளைச்சு இருக்கு என்றாள் ஹரிதா.

சித்து திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்க, அவனது வலது தோளிலிருந்து இன்னொரு கை. ஆ..னு அலறிட்டான்.

அந்த எக்ஸ்ட்ரா கையில் இப்போது செல்ஃபோன். இப்போது ஆகாயத்தில் இருந்து ஒரு குரல் ஒலித்தது.

ஹாய் சித்து, நீ ஒரு கையால் செல்லை உபயோகித்து, கழுத்தைச் சாய்த்துப் பேசிக் கொண்டே வண்டியை ஓட்டிச் சிரமப்படுவதை நான் விரும்பவில்லை.

அதனால் இன்னொரு கையை உனக்கு கொடுத்து இருக்கேன். இது பரிணாம வளர்ச்சியின் அடுத்த கட்டம் என்றது.

சித்து, ஓ என அழ ஆரம்பித்தான். அவனது கண்ணீரை மூன்றாவது கை துடைத்தது. அதைப் பார்த்து இன்னும் அதிகமாக அழ ஆரம்பித்தான்.

ஹரிதா அழாதேடா சித்து...பென் 10 மாதிரி இனிமே உன்னைத் த்ரீ ஆர்ம்ஸ் சித்துனு எல்லோரும் பெருமையாகக் கூப்பிடுறோம் என்றாள்.

கூடுதலாக ஒரு கை இருக்கிறதால, இனி வேகமாக எக்ஸாம் எழுதலாம். இந்தப் புதுக் கை ஒரு பேப்பரில் எழுதினால் பழைய கை இன்னொரு பேப்பரில் எழுதுமே ... என்றான் திலக்.

உடனே அபிநிதி, ஆனா வேற சில சிக்கல் இருக்கு. இனிமே ஃபுல் ஹேண்ட் ஷர்ட்டுக்கு அதிகத்துணி தேவைப்படும்.

மூணு கை மாடலில் ரெடிமேட் ஷர்ட் எங்கேயும் கிடைக்காது... என்றாள்.

ஜனனி சிரிக்க, சித்து கோபமாகி புதிய கையால் அவளது கூந்தலைப் பிடித்து இழுத்தான். என்னைக் கேலி பண்ணாதீங்க...இப்படியே எப்படி வீட்டுக்குப் போறது? இந்தப் பிரச்சினையில் இருந்து காப்பாத்துங்க என்றான்.

எனக்கு பயமா இருக்கு.. இனிமே உன்கிட்ட விளையாடுறதுக்கு எங்க வீட்ல அலோ பண்ண மாட்டாங்க...! என்றாள் ஜனனி.

சித்து, என்னோட தங்கை சாப்பிடவே மாட்டேங்கிறா... நீ வந்து நின்னா அதிசயமா பார்த்துச் சாப்பிடுவாள். டெய்லி தேர்ட்டி மினிட்ஸ் வர முடியுமா? என்றாள் அபிநிதி.

எதுக்கு ரிஸ்க்..? வாங்க நாம ஓடிப் போயிடலாம். சித்து... பை... பை... என்று திலக் சொல்ல சித்து, ப்ளீஸ், யாராவது ஹெல்ப் பண்ணுங்க என்னை விட்டுப் போகாதீங்க எனக்கு பயமா இருக்கு என்று அழ ஆரம்பித்தான்.

அப்போது மீண்டும் ஆகாயத்தில் இருந்து குரல் ஒலித்தது.ஹாய் உன்னோட நலனுக்காகத்தான் இப்படி செஞ்சேன்.

நீ வண்டி ஓடிக்கிட்டே செல்போன் பேசுறதுக்கு கஷ்டப்படுகிற. இதனால் எதிரில் வர்றவங்க மேலே மோதுறதுக்கு வாய்ப்பு இருக்கு.

அவங்க நலனையும் நான் பாக்கணும் இல்லையா? புதுசா உனக்கு வசதி கிடைச்சிருக்கு.

அதை நினைச்சு சந்தோசப்படுவியா... இப்படி அழுறியே... என்றது.

சித்து ஐயோ, எனக்கு இந்த வசதி வேண்டாம். ப்ளீஸ், திருப்பி எடுத்துக்கோ. என்னோட ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் கேலி பண்றாங்க, பயப்படுறாங்க...என் தங்கை கூப்பாடு போட்டு அலறப்போறா என்றான்.



இது சின்னப் புள்ளைத்தனமா இருக்கு. ஒரு தடவை ஆர்டர் போட்டா போட்டதுதான். வேணும்னா இடது பக்கமும் இன்னொரு கை சாங்ஷன் பண்ணட்டுமா? ஹா... ஹா..! என்று சிரிப்பு குரல் கேட்டது.

சித்து அழுதவாறு ஓடினான் அவனைப்பார்த்து ஒரு நாய் துரத்த... மிரண்டு ஓடியதில் கால் தடுமாறி கீழே விழ, நாய் அவன் மீது பாய அம்மா!

என்னடா? என்று உலுக்கி எழுப்பினார் சித்துவின் அம்மா.

சித்து கொட்டகொட்ட விழித்துப் பார்த்தான். நல்ல வேளை, கனவு...! என நினைத்தான், ஹி... ஹி... ஒண்ணும் இல்லைம்மா என்றான்.

அடுத்த நாள், அவன் வண்டி ஓட்டும் போது செல் ஒலிக்க, வாகனத்தை ஓரமாய் நிறுத்தி, செல்லை எடுத்தான்.

எதுக்கு வம்பு...?

-முற்றும்-

06.2015
16

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



- 1745 - பிரித்தானியர் கேப் பிறெட்டன் தீவை பிரெஞ்சுப் படைகளிடம் இருந்து கைப்பற்றினர். இது தற்போது கனடாவின் ஒரு பகுதியாகும்.
- 1779 - ஸ்பெயின் பெரிய பிரித்தானியா மீது போரை அறிவித்தது. கிப்ரால்ட்டர் மீதான முற்றுகை ஆரம்பமானது.
- 1897 - ஹவாய்க் குடியரசை ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கும் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1911 - விஸ்கொன்சின் மாநிலத்தில் 772 கிராம் விண்கல் வீழ்ந்ததில் களஞ்சியம் ஒன்று சேதமடைந்தது.
- 1940 - லித்துவேனியாவில் கம்யூனிச ஆட்சி உருவானது.
- 1963 - உலகின் முதலாவது பெண் விண்வெளி வீரர் ரஷ்யாவின் வலன்டீனா டெரெஷ்கோவா வஸ்தோக் 6 விண்கலத்தில் பயணமானார்.
- 1964 - லியோனிட் பிரெஷ்னேவ் சோவியத் ஒன்றியத்தின் ஜனாதிபதியானார்.
- 1983 - யூரி அந்திரோப்பொவ் சோவியத் ஒன்றியத்தின் ஜனாதிபதியானார்.

பிறப்புகள்

- 1971 - டூபாக் ஷகூர், அமெரிக்காவின் ராப் இசைக் கலைஞர்

இறப்புகள்

- 1925 - சித்தரஞ்சன் தாஸ், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி. 1870)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

...'கதையின் கதை

**கோவிலுக்கு வந்த நல்ல செய்தி**

'வாசு சார்! ஒரு மணி நேரத்தில் வருகிறேன்' என்று சொல்லிவிட்டு கேரவனுக்கு போனவர், அடுத்த ஒரு மணி நேரத்தில் படத்தில் நீங்கள் பார்த்த அந்த வேட்டையன் 'கெட்டப்'பில் வெளிப்பட்டார்.

முதலில் அவரை யாரென்றே யூனிட்டில் உள்ளவர்களுக்கு அடையாளம் தெரியவில்லை.

வெறித்தனமான பார்வையில் கம்பீரம் கலந்த வேட்டையனாக ரஜினி சாரை பார்த்தபோது, என் மனதில் இருந்த வேட்டையன என் எதிரே நிற்பதாகவே உணர்ந்தேன்.

கிளைமாக்ஸ் காட்சியை மட்டும் தொடர்ந்து 6 இரவுகள் எடுத்தோம்.

எந்தவித தயக்கமும் இன்றி இரவு 9 மணிக்கு தொடங்கும் படப்பிடிப்பில், விடிய காலை 4 மணி வரை நடித்துக் கொடுத்துவிட்டுப் போனார் ரஜினி.

**80 நாட்கள்**

மொத்தப் படத்தையும் 80 நாட்களில் எடுத்து முடித்தேன். படத்தில் நடிகர்- நடிகைகள் தவிர கதவு, படி, வீடு மூன்றையும் கேரக்டராக்கியதையும் ரஜினி சார் பாராட்டினார்.

இந்த படத்துக்கான காட்சிகள் சென்னை குஷால்தாஸ் கார்டனில் படமாக்கப்பட்டது போல தெரியும்.

உண்மையில் வீட்டின் படிகள் மைசூரிலும், கதவுகள் பெங்களூரிலும், வேட்டையன் அறை ஐதராபாத்தில் உள்ள ராமோஜி ராவ் பிலிம் சிட்டியிலும், 'சந்திரமுகி' ஜன்னல் வழியாக பார்க்கிற காட்சி பெங்களூரில் இந்திரா கார்டனிலும் படமாக்கப்பட்டது.

இந்தக்கதையின் ஒவ்வொரு காட்சியுமே 'ஆப்த மித்ரா' மூலம் எனக்குள் பதிவாகியிருந்ததால் குழப்பம் எதுவுமின்றி இந்த மாதிரியான காட்சிகளை கையாள முடிந்தது.

**வாழ்த்து**

படத்தின் நூறாவது நாளிலிருந்து 200 ஆவது நாள், 300 ஆவது நாள் என தொடர்ந்து ரஜினி சார் என்னிடம் போனில் வாழ்த்து தெரிவித்துவிடுவார்.

படம் 700 ஆவது நாள் வந்தபோது, என்னிடம் பேசி வாழ்த்தியவர், 'நான் இப்போது ராகவேந்திரா கோவிலிலிருந்து உங்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறேன்' என்றார்.

கோவிலுக்கு வந்த இடத்திலும் மறக்காமல் வாழ்த்துகிற அந்த பண்பு என்னை ரொம்ப நேரம் பரவசத்தில் வைத்திருந்தது.

படம் 'பிரியூவி'வின்போது ரஜினி சார் மனைவி லதாவுடன் வந்திருந்தார்.

படம் முடிந்து போகும்போது 'வரேன்' என்று மட்டும் சொல்லி கை கொடுத்து விட்டுப் போய் விட்டார்.

மறுநாள் என்னை வீட்டுக்கு அழைத்தவர், நான் போனதும் உற்சாகமாய் வரவேற்றார்.

அப்போது அவர் என்னிடம், 'எனது ஒவ்வொரு படத்தையும் என்னுடன் இருந்து லதா (மனைவி) பார்ப்பார்.

படம் அவருக்கு பிடித்திருந்தால், படம் முடியும்போது எனது வலது கை மணிக்கட்டை அழுத்தமாக ஒரு பிடிபிடிப்பார்.

அப்போதே அவருக்கு படம் பிடித்துவிட்டதை உணர்ந்து கொள்வேன்.

படம் ரொம்ப பிடித்திருந்தால் இந்த 'பிடி' அழுத்தமாக இருக்கும்.

நேற்று 'சந்திரமுகி' பார்த்து முடிந்த பிறகு அவரிடம் ஒரு சின்ன 'ரியாக்ஷன்' கூட இல்லை.

வீட்டுக்கு வந்த பிறகுதான் அதற்கான காரணத்தை கேட்டேன். அதற்கு லதா என்ன சொன்னார் தெரியுமா? 'படம் முடிந்தபோது ஏற்பட்ட பிரமிப்பிலிருந்து நான் விடுபடவே ரொம்ப நேரமாயிற்று.

பிறகு எப்போது உங்கள் கையை அழுத்தி படம் பற்றிய ரிசல்ட்டை சொல்றது? இப்ப சொல்றேன். இது மாதிரி படம் இதுவரைக்கும் நீங்க பண்ணலை. அந்த அளவுக்கு அற்புதமான படம்.'

அதைக் கேட்ட பிறகுதான் எனக்கு உயிரே வந்தது.

உடனே உங்களை பாராட்ட வேண்டும் என்றே நேரில் வரச்சொன்னேன்' என்றார், ரஜினி.

**சாதனை**

எம்.கே.தியாகராஜ பாகவதரின் 3 தீபாவளி கண்ட 'ஹரிதாஸ்' பட சாதனையை சந்திரமுகி முறியடிக்கும் என்கிறார்கள்.

லதா ரஜினிகாந்தின் பிரமிப்பை படம் பார்த்த ஒவ் வொரு ரசிகர்களும் அடைந்ததால்தான் இந்த சாதனையை 'சந்திரமுகி' படைக்கிறது என்பேன்' இவ்வாறு பி.வாசு கூறினார்.

(தொடரும்)














# கருவாச்சி காவியம்

**வைரமுத்து-165**

...மாமா! கூட்டாளியப் பத்திக் குறை சொல்றாளே சிறுக்கின்னு கோவிச்சுக்கிராதிக. ஒங்க பாண்டிப்பய பார்வை சரியில்ல. எப்பவும் என்னியக் கண்ணப் பாத்துப் பேசாமக் கழுத்துக்குக் கீழேயே பாத்து வெறிச்சு நிக்கிறான் பய. அவன் சீட்டக் கிழிச்சா அன்னைக்கிருந்து.

"ஒங்க ஒலக்கையன் ஒரு கடன்காரப்பய. நீ இல்லாத நேரம் பாத்து வந்து 'காசு குடு காசு குடு'ன்னு குரும்பைய அணில் கடிக்கிற மாதிரி காதோரம் வந்து கறிச் கறிச்சுங்கிறான்." அன்னைக்கிருந்து வீட்டுக்குள்ள சேக்கவிடாம ஒலக்கையன வெலக்குனா.

"மாமோய்! எப்பத் தண்ணி மோந்து குடுத்தாலும் இந்தப் பன்னியாம்பேரன் செம்புக்குள்ள கைவிட்டு என் விரலக் கிள்ளாம வாங்குறான் இல்ல." அன்னைக்கிருந்து ஒஞ்சுபோச்சு அவன் கதையும்.

நடை தளந்து போனாரு சடையத்தேவரு. சாராயமும் ஈரலும் போதுமன்னு சாஞ்சு கெடக்கான் கட்டையன். அவ 'தோ தோ'ன்னு கூப்பிட்டதும் அவ கால மோந்து பாக்குற கறுப்பு நாயாகிப்போனான் அழகுசிங்கம்.

அவ வாக்கப்பட்டு வந்து வருசம் ஏழாகியும் பிள்ளை இல்ல: என்னா எவடமன்னு கேட்கவும் நாதியில்ல.

நல்ல வெயிலு.

சுட்டுக்கெடக்கு சொக்கத்தேவன்பட்டி.

ஈ ஆடல; எறும்பாடல; மரத்துல எல ஆடல.

அகமலையில கட்டிக் குடுத்த மக வீட்டுக்கு, சொக்கத்தேவன்பட்டி வழியாப் போற குப்பணம்பட்டிக் கெழவி ஒருத்தி, கருவாச்சி வீட்டு வேப்ப மரத்து நெழல்ல ஒதுங்கி வேர்வையத் தொடச்சு அதே முந்தானையில விசிறிக்கிட்டிருக்கா.

வாழப்பழம் ஒரு கையிலயும் வடை ஒரு கையிலயுமா வாங்கி, இந்த ஊர ஆளவந்த மகாராணி நாந்தானாக்கும்ன்னு திடும் திடும்ன்னு அந்த வழியா எட்டுவச்சுப் போறா திம்சு.

குறுகுறுகுறுன்னு அவளையே பாத்தா கெழவி; திரும்பித் திரும்பிக் கெழவியையே பாத்தா திம்சு. படக்குன்னு தலையக் கவிந்து விசுக்குன்னி எட்டு வச்சு வெரசா ஓடி ஒளிஞ்சு போனா. முதுகுத்தண்டுல சிலீர்ன்னு தண்ணியடிச்ச மாதிரி வளஞ்ச கூனு நிமிந்து ஒக்காந்துட்டா கெழவி.

யாரோ அசலூர்க் கெழவி வீட்டுவாசல்ல வேர்த்து உக்காந்திருக்கா. தவிச்ச வாய்க்குத் தண்ணி குடுப்போம்ன்னு புளிச்ச தண்ணியக் கொண்டாந்து குடுத்தா கருவாச்சி.



(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு கடந்து விட்ட எமது சுதந்திர உணர்வுகளும் தற்போதைய நாட்டின் நிலையும்

(நேற்றைய தொடர்ச்சி)

இவ்விதமானநடத்தைகள்பெரும்பான்மை மக்களது பெருமளவிலான ஆதரவினை பெற்றுக் கொள்ளாதபோதிலும் அந்த நேரத்தில் அதிகாரத்திலிருந்த சக்திகளின் மெளனமான சம்மதத்தை அவை பெற்றவையாகவே இருந்திருக்கின்றன. இவ்விதமாக வைத்திருந்த நெருக்கமான உறவுகளே அவர்களது வீழ்ச்சிக்கான நேரடிக்காரணமாக இருந்தது. ஆண்களும் பெண்களுமான அத்தனை சிறுபான்மையினரும் கடந்த ஜனவரி 8 இல் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் அவர்களுக்கெதிராகவே வாக்களித்திருந்தனர்.



கடந்த வருடம் அளுத்கம, பேருவல மற்றும் டர்கா நகர் போன்ற இடங்களில் முஸ்லிம்களின் வீடுகள், தொழிலகங்கள் போன்றவற்றின்மீது மேற்கொள்ளப்பட்ட தீவிரவாதக் கும்பல் தாக்குதல்களின் பின்னணியில் இடம்பெற்ற சீரழிவுகள் பற்றி நாம் இப்பகுதியில் எழுதியிருந்தோம் (கடந்த ஜூன் 24 இல்). இரத்தப்பெருக்கும் வேதனை மிகுந்தது மான அந்த நாசகார உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து ஐந்து வருடங்களிலேயே இன்னுமொரு சித்திரவதை அனுபவம் உண்மையில் எமக்கு தேவைதானா? அப்போதிருந்த அந்தக் கலவர நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு அரசு தாமதித்திருந்த போதிலும் கூடுதல் பெரும்பான்மை மக்கள் அந்த வன்செயல்களை வெறுப்புடன் அவதானித்த காரணத்தால் அது மேற்கொண்டு பரவாதது எமது அதிர்ஷ்டமேயாகும்.

இந்த வாரம் நாட்டின் பொதுவான பார்வை வடக்கு நோக்கி திரும்பியுள்ளது. யாழ்.தீவகப் பகுதியில் பாடசாலை மாணவியொருவர் கற்பழித்துக் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக பொலிஸார் காட்டிய அசமந்தப் போக்கின் காரணமாக யாழ்.பிரதேசம் அடங்கலாக மக்களால் நடத்தப்பட்ட மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியையடுத்து புதிய அரசாங்கம் விரைவாகவே நடவடிக்கையெடுத்ததன்மூலம் மக்களின் ஏகோ பித்த உணர்வெழுச்சியை தணிக்கக் கூடியதாயிருந்தது. உடனடியாகவே யாழ்.விரைந்த ஜனாதிபதி கொலையுண்ட மாணவியின் பெற்றோரைச் சந்தித்ததுடன் அவர்களுக்கு ஆறுதலுங்கூறியிருந்தார். இனியும் இவ்விதப் பிரச்சினைகள் கைமீறிப் போகாதளவில் கொழும்பு அரசின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக உறுதி கூறியுமிருந்தார். புரளி கிளப்பி வதந்திகள் மூலம் கொந்தளிப்பான நிலைமைகளை தமது சுயநலமான திட்டங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்துவோருக்கெதிராக விழிப்புடனிருக்க வேண்டிய தேவைபற்றியும் அவர் உறுதிப்படுத்திக் கொண்டார்.

வடபகுதி அரசியல்வாதிகள் நிலைமையை மோசமாக்காது தணிக்கும் விதத்தில் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட்டது சிறந்த ஓர் அறிகுறியாகவே தென்பட்டது. இந்தச் சம்பவத்திலிருந்து கிளர்ந்தெழுந்த பிரச்சினையானது இன அல்லது மதரீதியிலான வடிவத்தைப் பெற்றுவிடாமல் நேரடியாக சட்டம்–ஒழுங்கு நடைமுறைப்படுத்தும் அதிகார சக்திகளுக்கெதிரான உணர்வுகளையே அழுத்தமாகக்கூறும் இயல்பூக்கமான எதிர்ப்பு நடவடிக்கையாக அது இருந்த போதிலும் சுற்றிச் சுழன்று சூறாவளியாக உருவெடுக்கும் பெரியதொரு ஆபத்தும் இதில் இருந்தது.

உலகமானது ஒரு புறம் தொழில்நுட்பம், எதிலும் புதுமை காணுதல் என்ற ரீதியில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கும்போது மனிதன் எதிர்காலச்சூழ்நிலைகளில் குடியேறி வாழத்தகுந்த புதிய கிரகங்களை தேடிக்கண்டுபிடிக்கும் புதுப் புது முயற்சிகளில் விஞ்ஞானிகள் மறுபுறம் தீவிர முயற்சிகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கும். அதேநேரம் உலகம் முழுவதும் பரந்து வாழும் மக்கள் சமூகங்களில் சில இன மதப்பூசல்களுடன் கூடிய போர்களில் ஈடுபடும் மத்திய கால வாழ்க்கையையே மேற்கொள்ளும் பிற்போக்கான முயற்சிகளையே தொடர்ந்து கொண்டிருக்கும் பரிதாப நிலையும் கூடவேயுள்ளது. பல் இனமத– சமூக மக்களும் இணைந்து வாழும் எமது இலங்கை நாடு மேற்கூறிய இரண்டு ரகங்களிலும் பிற்போக்கானதை எந்த விதத்திலும் தவிர்த்துக் கொள்ளவே முயலவேண்டும்.



நூற்றாண்டு கடந்து விட்ட எமது சுதந்திர உணர்வுகளும் தற்போதைய நாட்டின் நிலையும் எனும் தலைப்பில் சண்டே ரைம்ஸ் ஆசிரியர் தலையங்கத்தில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது.

எமது சமகால அரசியல் வரலாற்றில் தொடர்ந்து வளர்ச்சி பெற்றுவரும் பிற்போக்கானதும் துரதிர்ஷ்ட வசமானதுமான அம்சங்களிலொன்று இன–ஜாதி அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுவரும் அரசியல் கட்சி அமைப்புக்களேயாகும்.

நாம் கருத்திற்கெடுக்கும் இந்த விடயத்தில் பெருமதிப்புக்குரிய அம்சம் என்னவென்றால் ஏற்கனவே நாம் எடுத்துக்காட்டியிருந்ததுபோல் இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் எமது இத்தாய் நாடான இலங்கையின் அனைத்து இன– மதங்களையும் சேர்ந்த மக்கள் இலங்கையரென்ற ஒரே கொடியின் கீழ் நீதி சுதந்திரம் மற்றும் சுய இறையாண்மை பொருட்டு ஒருசேர எமது கைகளை இணைத்து ஒற்றுமை உணர்வுடன் போராடிய எமது கடந்தகாலத்தை நினைவிற்கொள்ளவேண்டும் என்பதேயாகும். எமது இந்த நாட்டின் குடிமக்கள் அனைவருடன் அவர்களது தற்போதைய தலைவர்களுங்கூட எம்மவர்களது முன்னைய நன் முயற்சிகளுக்கும் பிந்திய ஏனைய முற்போக்கான, பிற்போக்கான முயற்சிகளுக்குமான பிரதிபலன்களையே தற்போது அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். இந்த அனுபவப் பாடங்களிலிருந்து கற்று சிறந்ததை தேர்ந்தெடுத்து எமது சந்ததிகளுக்கான சரியான வழியை அமைத்துக் கொள்வோம்.

ஒருமித்திருந்தால் நிலைத்திருப்போம்! வேறுபட்டால் வீழ்ச்சியும் ஒருமித்தேயிருக்கும்!

(முற்றும்)

தமிழில்:யோகர்

# நீரிழிவு நோய் சிக்கலிலிருந்து விடுபட முடியும்

*(சென்றவாரத்தொடர்ச்சி...)*

***பாகற்காய் மசாலா***

**தேவையான பொருட்கள்**

பாகற்காய்–1/2 கப் (பொடியாக நறுக்கவும்), பொடியாக நறுக்கிய வெங்காயம்–1, பொடியாக நறுக்கிய தக்காளி–1, புளி–எலுமிச்சம் பழம் அளவு, கறிவேப்பிலை, கொத்தமல்லி–சிறிதளவு, எண்ணெய், உப்பு தேவையான அளவு, பெருங்காயம், மஞ்சள் தூள், கடுகு–1/2 தேக்கரண்டி, வெல்லம்– சிறிதளவு (தேவைப்பட்டால்)

**வறுத்துப் பொடிக்க:**

உளுத்தம்பருப்பு–1/2 தேக்கரண்டி, கடலை பருப்பு –1/2 மிளகு –1/4 தேக்கரண்டி, காய்ந்த மிளகாய்–3 அல்லது 4, எள்ளு– 1/2 தேக்கரண்டி, நிலக்கடலை–1/2 தேக்கரண்டி ஒரு வாணலியில் வறுத்துப் பொடிக்க கொடுத்துள்ள பொருட்களை எண்ணெய் விடா மல் சிவக்க வறுத்துப் பொடிக்கவும்.

**செய்முறை:**

பாகற்காயை உப்பு, மஞ்சள் பொடி சேர்த்து தண்ணீரில் ஊற வைக்கவும். ஊறிய பாகற்காயைப் பிழிந்து எடுத்து நன்கு அலம்பி அரைவேக்காடு வேக வைக்கவும். ஒரு வாணலியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு, கறிவேப்பிலை, தாளித்து வெங்காயம், மஞ்சள் பொடி, பெருங்காயம் போட்டு வதக்கவும். வெங்காயம் சிறிது வதங்கிய பிறகு தக்காளி சேர்க்கவும். தக்காளி வதங்கிய பிறகு பாகற்காயைச் சேர்க்கவும். பிறகு புளிக்கரைசல், உப்பு, வெல்லம் (தேவைப்பட்டால்) சேர்த்து பச்சை வாசனை போக கொதிக்க விடவும். பிறகு வறுத்துப் பொடித்த பொடியை தேவைக்கேற்பச் சேர்க்கவும். தேவையான அளவு தண்ணீர் சேர்த்து கிரேவி பதத்துக்குக் கொண்டு வந்து 5நிமிடங்கள் கொதிக்க விடவும். பச்சை கொத்தமல்லியைத் தூவி கோதுமை ரவை கிச்சடி, சாதம், ரொட்டி, இட்லி, தோசையுடன். பரிமாறவும். சுவையான கசப்பில்லாத பாகற்காய் மசாலா தயார்.

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த உதவும் காய்கறிகளில் பாகற்காய் தலைசிறந்தது. நீரிழிவு நோயாளிகள் தினமும் பாகற்காய் ஜூஸ் செய்து அருந்தலாம்.

**டயாபடீஸ் தோசை**

**தேவையான பொருட்கள்:**

கோதுமை மாவு–250கிராம், கேழ்வரகு மாவு–100கிராம், அரிசி மாவு–50கிராம், ரவை–50கிராம், சின்னவெங்காயம்–150கிராம், சீரகம், உப்பு–தேவைக்கேற்ப, கறிவேப்பிலை, கொத்தமல்லி–சிறிதளவு

**செய்முறை:**

இவை நான்கையும் (முதலில் கூறியுள்ளது) தண்ணீர் விட்டு தோசை மாவு பதத்துக்குக் கரைத்துக் கொள்ளவும். சின்ன வெங்காயத்தை நைசாக அரிந்து கொள்ளவும். நறுக்கிய பச்சை மிளகாய், கறிவேப்பிலை, மல்லித்தழை சேர்க்கவும். சீரகம், மிளகுத்தூள் செய்து சேர்க்கவும். ருசிக்கேற்ப உப்பு சேர்த்து மெல்லியதாக ஊற்றவும். நன்கு சிவக்க மொறு மொறுப்பாக வார்த்தெடுக்கவும்.

**சோளப்புலாவ்**

**தேவையான பொருட்கள்:**

பாசுமதி அரிசி–1கப், முழு சோளம் (உதிர்த்தது)–1/2கப், தண்ணீர்–2கப், சிறிய வெங்காயம்–100கிராம், இஞ்சி பூண்டு விழுது–1/4 தேக்கரண்டி, தயிர்–1தேக்கரண்டி, உப்பு–தேவையான அளவு, மஞ்சள்தூள்–1/4 தேக்கரண்டி, மிளகு–1/2 தேக்கரண்டி, பிரியாணி இலை–1, கரம் மசாலாப் பொடி–1/2 தேக் கரண்டி

**செய்முறை:**

அரிசி, சோளம் இரண்டையும் அரைமணி நேரம் ஊற வைக்கவும். பிரஷர் பேனில் ஒரு தேக்கரண்டி எண்ணெயை சூடாக்கி வெங்காயம், கரம் மசாலாப்பொடி, பிரியாணி இலை தாளித்து ஊற வைத்த அரிசி, சோளம் இரண்டையும் தண்ணீர் இல்லாமல் பிழிந்து போட்டு நன்றாக வதக்கி தயிர், உப்பு, மஞ்சள், மிளகுத்தூள் சேர்த்து ஒரு கப் அரிசிக்கு இரண்டு கப் தண்ணீர் வீதம் ஊற்றி பிரஷர் பேனில் மூன்று விசில் வந்ததும் இறக்கி வைக்கவும்.

**சம்பா கோதுமை ரவா பொங்கல்**

**தேவையான பொருட்கள்:**

சம்பா கோதுமை ரவை–1கப், பாசிப் பருப்பு–1/4கப், உப்பு–தேவை யான அளவு, பொடித்த மிளகு, சீர கம்–1 ஸ்பூன், கறிவேப்பிலை–சிறி தளவு

**செய்முறை:**

சம்பா கோதுமை ரவை, பாசிப்பருப்பு இரண்டையும் கலந்து தண்ணீரில் அரைமணி நேரம் ஊற வைக்கவும். குக்கரில் எண்ணெயை சூடாக்கி சீரகம், மிளகு, கறிவேப்பிலை தாளித்து ஊற வைத்திருக்கும் ரவை, பாசிப்பருப்புக் கலவையையும் தண்ணீரை வடித்து விட்டுச் சேர்த்துக் கொள்ளவும். ஒரு கப் கோதுமைக்கு மூன்று கப் தண்ணீர் என்ற அளவில் ஊற்றி உப்பு போட்டு மூடி மூன்று விசில் விட்டு இறக்கிக்கொள்ளவும். இது காலை நேரத்துக்கு ஏற்ற சிற்றுண்டி.

தொடரும்...


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழீழத்தை புறக்கணிக்கும் புலம்பெயர் அமைப்புடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்துதல் வேண்டும்

## வாசுதேவ எம்.பி.கூறுகிறார்

(கொழும்பு)

தனித்தமிழீழ இராச்சியம் என்ற கொள்கை எதுவும் இல்லையென பகிரங்கமாக அறிவிக்கும் புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடனேயே அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும் என வலியுறுத்தும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் எம்.பியுமான வாசுதேவ நாணயக்கார, அரசியலமைப்பும் சட்டத்திற்கும் மாறாக பதவி வகிக்கும் பிரதமர் அப்பதவியிலிருந்து வெளியேற்றப்பட வேண்டுமென்றும் தெரிவிதது்ள்ளார்.



இது தொடர்பாக வாசுதேவ நாணயக்கார எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

விடுதலை புலிகளோடு தொடர்புடைய புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதை எதிர்க்கின்றோம். அதே வேளை புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மற்றும் அமைப்புகள் பெரும்பாலானவை தனித்தமிழீழ இராச்சிய கொள்கையை கொண்டதாகவே உள்ளன.

எனவே ஐக்கிய இலங்கைக்குள் அதிகார பரவலாக்கத்தை ஏற்றுக்கொள்வதாக பகிரங்கமாக அறிவிக்கும் புலம்பெயர் தமிழர்களோடும் தமிழ் அமைப்புக்களுடனுமே அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டும்.

அதேவேளை இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அப்பதவியில் இருப்பதற்கு அரசியல் அமைப்பு ரீதியாகவும் அதேவேளை இலங்கையில் சட்டத்தின் பிரகாரமும் தகுதியில்லை.

எனவே பிரதமருக்கு எதிராக உடனடியாக நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் வாசுதேவ நாணயக்கார எம்.பி. மேலும் தெரிவித்தார். (இ-5)

## கனேடிய தமிழ்ச் சமூகத்தினருடன் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் சந்திப்பு

(ரொரன்ரோ)

கனடாவின் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர் அண்மையில் கனேடிய தமிழ் சமூகத்தினருடன் உத்தியோகபூர்வ சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

தனது அரசின் பாதுகாப்பு தொடர்பான கொள்கை விளக்க நிகழ்விற்கு கனடாவின் பிரதான நகரமாகிய ரொரன்ரோ வந்த போது, கனேடிய பிரதமரின் அலுவலகத் தால் நேரடியாக தெரிவு செய்யப்பட்டு விசேடமாக அழைக்கப்பட்ட கனேடிய தமிழ் சமூகத்தினர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

இங்கு கனேடிய அரசாங்கத்தின் புதிய திட்டங்கள் மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடுகள் பற்றி குறிப்பிட்ட பிரதமர், கனடாவின் பாதுகாப்பு மற்றும் கனடாவிற்கு அச்சுறுத்தலாக இருந்துவரும் பயங்கரவாதத்திலிருந்து கனேடிய மக்களையும் கனடாவின் நன்மதிப்பையும் பாதுகாப்பதற்காக தமது அரசாங்கம் உறுதியாக எடுத்துவரும் நடவடிக்கைகள் பற்றியும் தமது உரையில் விளக்கினார். கனேடிய தமிழ்ச் சமூகத்தைச் சார்ந்தவர்களுடன் உரையாடுகையில், "எனது தமிழ் மக்கள்" என்று அன்பாக கூறிய பிரதமர் தனக்கும் தனது அரசிற்கும் ஆதரவு தந்துவரும் கனேடிய தமிழர்களிற்கு நன்றிகளைத் தெரிவித்தார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 120 | 130 | 120 |
| தக்காளி | 100 | 80 | 80 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 | 50 |
| கோவா | 120 | 100 | 120 | 100 | 120 |
| கரட் | 250 | 200 | 300 | 160-240 | 200 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 | 30 |
| புடோல் | 120 | 110 | 80 | 80 | 60 |
| வாழைக்காய் | 60 | 50 | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 130 | 160 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 160 | 120 | 200 | 180 |
| வெண்டிக்காய் | 150 | 140 | 120 | 80-100 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 80 | 140 | 120 | 100 |
| பயற்றங்காய் | 160 | 160 | 100 | 120 | 120 |
| லீக்ஸ் | 200 | 180 | 200 | 200 | 120 |
| பீற்றூட் | 120 | 140 | 160 | — | 80 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 150 | 140 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 400 | 300 | 400 |
| போஞ்சி | 300 | 240 | 300 | 180 | 180 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 60 | — | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 | 40 | 15 |
| தேசிக்காய் | 120 | 140 | 140 | 160 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 50-60 | 60 | 50 |
| இராசவள்ளி | 200 | 140 | 150 | 120 | 120 |
| வெங்காயப்பூ | 300 | 250 | — | — | 200 |
| முள்ளங்கி | 150 | 80 | 120 | 120 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 20 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 10 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 403

ஜெயராசா விவுலன்




இரங்கன் சிவசாந்தன்




சுஜே செல்வா

அம்மா : டேய் செல்லம் ஸ்கூலுக்கு லேட் ஆகுது

மகன் : போம்மா அந்த ஸ்கூலுக்கு போகமாட்டன். அங்க இருக்கிற பசங்களுக்கும் ஆசிரியர்களுக்கும் என்னை பிடிக்கவே மாட்டேங்குது

அம்மா : அப்பிடியெல்வாம் சொல்லக் கூடாது கிளம்புடா


மகன் : நான் ஏன் அந்த ஸ்கூலுக்கு போகணும் ஒரு காரணம் சொல்லு?

அம்மா : நீ தானேடா கெட்மாஸ்ரர்!


நிஷா விஷ்வா




சுஜித் கெவின்




பார்த்தி மகராஜ்



உங்கள் பெற்றோரை அவர்கள் உயிருடன் இருக்கும் போதே மதியுங்கள். இறந்த பிறகு கல்லறைக்குச் சென்று வணங்குவதால் எந்தப் பயனும் இல்லை...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதாரபூர்வமாக வெளிக்கொணரப்பட்ட தந்திரிகளின் மறுமுகம்!

...2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வீரத்தமிழ் மகன் முத்துக்குமாரின் தீக்குளிப்பை தொடர்ந்து தமிழகத்தில் ஏற பட்ட எழுச்சியை நசுக்குவதிலேயே கருணாநிதி குறியாக இருந்தார். இதேநேரத்தில் கிளிநொச்சி வீழ்ச்சியடைந்ததை தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் படை வலிமை தொடர்பான ஐயம், வல்லாதிக்க சக்திகளிடையே வலுவடைந்திருந்தது. யுத்தத்தின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முடியாது என்று அதுவரை கருத்து வெளியிட்டு வந்த வல்லாதிக்க சக்திகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் களைவையும், சரணாகதியையும் வலியுறுத்திப் பகிரங்கமாக அறிக்கை வெளியிடத் தொடங்கியிருந்தன.

கே.பி- உருத்திரகுமாரன் தரப்பினரின் ஆமோதிப்புடன் 2009 பெப்ரவரி மாதத்தின் முதல் நாட்களில் வல்லாதிக்க சக்திகளால் முன்மொழியப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் களைவு- சரணாகதி திட்டத்தை அதிகார பூர்வமயப்படுத்தும் அறிக்கை ஒன்று 03.02.2009 அன்று இணைத்தலைமை நாடுகளால் வெளியிடப்பட்டது.

இதனைத்தொடர்ந்து இதே நிலைப்பாட்டுடன் 05.02.2009 அன்று இந்திய உள்துறை அமைச்சர் பா.சிதம்பரம், வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரால் ஊடக அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் களைவையும், சரணாகதியையும் பா.சிதம்பரம் வலியுறுத்த, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் முடுக்கி- விடப்படுவதை பிரணாப் முகர்ஜி வலியுறுத்தியிருந்தார்.

இதற்கு எவ்விதமான ஆட்சேபனையையும் வெளியிடாது ஊடகங்களில் அமைதி காத்த கருணாநிதி, தமிழீழ விடுதலைப புலிகளின் ஆயுதக் களைவையும், சரணாகதியையும் வலியுறுத்தி தனது பின்கதவுத் தொடர்புகள் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு செய்திகளை அனுப்பியிருந்தார்.

இம்முறை கருணாநிதியினதும், பா.சிதம்பரத்தினதும் பின்கதவுத் தொடர்பாளர் வகிபாகத்தை வெரித்தாஸ் வானொலியின் முன்னாள் பணிப்பாளர் ஜெகத் கஸ்பார் அடிகளார் வகித்திருந்தார். இது தொடர்பாக 12.02.2009 அன்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருக்கான செய்தி ஒன்று ஜெகத் கஸ்பார் அடிகளாரால் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்திய நேரம் 4:45 மணிக்கு அனுப்பி வைக்கப்பட்ட இந்திய அரசின் அதிகாரபூர்வ செய்தி கிடைக்கப் பெற்றதை உறுதிப்படுத்துமாறு கோரி அன்று மாலை பா.நடேசன் அவர்களுக்கு ஆங்கிலத்தில் ஜெகத் கஸ்பார் அனுப்பிய மின்மடல் பின்வருமாறு அமைந்திருந்தது:

"அன்புள்ள திரு.நடேசன்,

தொடர்பு விபரங்களை உள்ளடக்கிய மடல் எமது நேரம் பி.ப 4:45 இற்கு அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தயவு செய்து உறுதிப்படுத்தவும்.

ஜெகத்"

எனினும் இதன் பின்னரான நாட்களில் இந்திய அரசின் ஆயுதக் களைவு- சரணடைவு திட்டத்திற்கான தமது ஆட்சேபனையை மிகவும் பண்பாகவும், இராஜதந்திரமான முறையிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்திருந்தார்கள். அதே நேரத்தில் வன்னி கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளின் பரப்பளவு சுருங்கத் தொடங்க, சிங்களப் படைகளின் அரக்கத்தனமான தாக்குதல்களில் படுகொலை செய்யப்படும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியிருந்தது.

இந்நிலையில் ஈழத்தமிழர்களுக்கு கௌரவமான போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் முயற்சிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் கைவிடவில்லை. இதனைத் தொடர்ந்து தன்னுடன் நேரடித் தொடர்புகளை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பேணுவதற்கு ஏதுவாக, 02.03.2009 அன்று மின்னஞ்சல் ஒன்றை கனிமொழி அனுப்பியிருந்தார்.

ஏக காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் களைவையும், சரணாகதியையும் வலியுறுத்தும் அழுத்தங்கள் தனது பின்கதவுத் தொடர்புகள் ஊடாக கருணாநிதியால் பிரயோகிக்கப்பட்டன. இந்நிலையில் ஆனந்தபுரம் சமர் தொடங்குவதற்கு சில மணிநேரங்களுக்கு முன்னர் 29.03.2009 அன்று காலையும், மதியமும் கனிமொழிக்கும், கருணாநிதிக்கும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளரால் அவசர செய்தி ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. இதனை தம்மால் வாசிக்க முடியவில்லை என்று கனிமொழி பதிலளித்ததை அடுத்து மீண்டும் அதே செய்தியை மறுநாள் 30.03.2009 அன்று காலை கனிமொழிக்கு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் அனுப்பி வைத்தார். அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:-

"அன்புடன் சகோதரி கனிமொழிக்கு,

தற்போது இங்கு தினமும் நூற்றுக் கணக்கானக்கான மக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் கொண்டிருக்கின்றனர். நாம் நீண்டகாலமாகவே யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தி வருகின்றோம். எமது அவலங்களை போக்குவதற்காகவே நாம்இதனை தொடர்ச்சியாக வலியுறுத்தி வரு கின்றோம்.

ஆனால் சிங்கள அரசு யுத்தத்தை தொடர்ச்சியாக நடத்தி வருகின்றது. சிங்கள அரசின் அதிமுக்கிய மூத்த அமைச்சர்கள் இந்திய அரசின் உதவியினாலேயே தாம் இந்த யுத்தத்தை வென்று கொண்டிருப்பதாக பகிரங்கமாக அறிவித்த வண்ண முள்ளனர். இது எமக்கு மிகுந்த வேதனையை தருகின்றது. இந்த நேரத்திலாவது நீங்களும் அப்பாவும் சேர்ந்து இந்திய அரசை வலியுறுத்தி யுத்த நிறுத்தத்தை கொண்டு வந்தால் எமது மக்களை காப்பாற்றலாம். நிபந்தனையற்ற யுத்தநிறுத்தமே எதிர்காலத்தில் அரசியல் பேச்சு வார்த்தைக்கும் நிரந்தர சமாதானத்திற்கும் வழி வகுக்கும். இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணியை செய்வீர்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கின்றேன்.

நன்றி,

என்றும் உங்கள் அன்பான,

சகோதரன் பா.நடேசன்" மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் பா.நடேசன் அவர் களால் அனுப்பி வைக்கப்பட்ட இந்த செய்திக்கு கருணாநிதியோ, அன்றி கனிமொழியோ உடனடியாக எந்தவொரு பதிலையும் அனுப்பவில்லை. ஆனந்தபுரம் முற்றுகையில் தமிழீழ தேசியத் தலைவர் சிக்கியிருப்பதாக இந்திய அரசுக்கு சிங்கள அரசு செய்தியொன்றை அனுப்பியிருந்த நிலையில், பா.நடேசனின் கடிதத்திற்கு பதிலளிக்காது கனிமொழியும், கருணாநிதியும் அமைதி காத்தனர்.



இந்நிலையில் வீரத்தளபதிகளான பிரிகேடியர் தீபன், பிரிகேடியர் மணிவண்ணன், பிரிகேடியர் விதுசா, பிரிகேடியர் துர்க்கா போன்றோரும், நூற்றுக்கணக்கான போராளிகளும் தமது உயிரை வேலியாக்கி நிகழ்த்திய எதிர்த்தாக்குதல்களில் சிங்களப் படைகளின் ஆனந்தபுரம் பெட்டி முற்றுகை உடைக்கப்பட்டு, பாதுகாப்பான இடத்திற்கு தமிழீழ தேசியத் தலைவர் நகர்த்தப்பட்டார். தமிழீழ தேசியத் தலைவரை உயிருடன் சிறைப்பிடிப்பதற்கு சிங்கள-இந்திய அரசுகள் எடுத்த முயற்சி மாவீரர்களின் வீரம்செறிந்த தாக்குதல்களாலும், தற்கொடையாலும் சிதறடிக்கப்பட்டது.

05.04.2009 அன்று ஆனந்தபுரம் பகுதியை சிங்களப் படைகள் ஆக்கிரமித்ததை தொடர்ந்து மறுநாள் 06.04.2009 நாளன்று புலம்பெயர் தேசங்கள் தோறும் கிளர்ந்தெழுந்த ஈழத் தமிழர்கள் போர்நிறுத்தத்தை வலியுறுத்தி வீதிகளில் இறங்கிப் போராடத் தொடங்கினார்கள். இந்நிலையில், சிங்கள-இந்திய அரசுகளின் கனவு பலிக்காத சூழலில், ஒருவார இடைவெளிக்குப் பின்னர் 07.04.2009 அன்று முற்பகல் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருக்கான பதிலை கருணாநிதியின் புதல்வி கனிமொழி அனுப்பியிருந்தார். ஆங்கிலத்தில் அனுப்பி வைக்கப்பட்ட அந்தக் கடிதத்தின் தமிழ்வடிவம் பின்வருமாறு அமைந்திருந்தது:-

"நடேசன் அண்ணன்,

நிலைமை மிகவும் மோசமாக இருப்பதை நான் அறிவேன. நீங்கள் அனுப்பிய மடல் தொடர்பாக சம்பந்தப்பட்ட எல்லோருடனும் பேசிவிட்டேன். குடியரசுத் தலைவரின் உரையில் தெரிவிக்கப்பட்டமை போன்று ஆயுதங்களை கீழே போடுவதற்கான ஒப்புதலை நீங்கள் வெளியிட வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

தயவுசெய்து அதைச் செய்யுங்கள். அவ்வாறு நீங்கள் செய்தால் உங்களுக்கு இந்திய அரசாங்கம் உதவு செய்யக் கூடும் போல் தோன்றுகின்றது. நான் சொல்வதை செய்ய முடியாது விட்டால் தயவுசெய்து டில்லியுடனேயே கதையுங்கள். மக்களைப் பற்றி உள்துறை அமைச்சரும் கரிசனையாக உள்ளார். கிடைக்கும் செய்திகள் கவலையளிக்கும் வகையிலும், தீர்க்கமானவையாகவும் உள்ளன. தயவுசெய்து அவர்களு டன் தொடர்பு கொள்ளுங்கள். தயவுசெய்து தவறான வழிகாட் டல்களை பின்பற்றாதீர்கள்.

கனிமொழி."

எனினும் கனிமொழியின் இந்த மடலுக்கான தமது ஆட்சேபனை கருணாநிதியின் பின்கதவுத் தொடர்புகள் ஊடாக தமிழீழ விடுதலைப் புலிகளால் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் அன்று பிற்பகல் மீண்டுமொரு தடவை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயு தக் களைவை வலியுறுத்தி கனிமொழியால் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருக்கு பிறிதொரு மடல் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அந்த மடலின் தமிழ் வடிவம் பின்வருமாறு அமைந்திருந்தது:-

"நடேசன் அண்ணன்,

அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக நாங்கள் எல்லோரும் கவலையடைந்துள்ளோம். சிறீலங்கா அரசாங்கம் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதற்கு முன்வரும் பட்சத்தில் ஆயுதப் போராட்டத்தை கைவிடுவதற்கு தயாராக இருப்பதாக அறிவிப்பதைப்பற்றி சிந்தியுங்கள். உள்துறை அமைச்சரும், முதலமைச்சரும் அங்குள்ள மக்கள் தொடர்பாக மிகவும் அக்கறையாக உள்ளார்கள். நான் சொல்வதை செய்ய முடியாவிட்டால், தயவுசெய்து டில்லியில் உள்ள ஆட்களுடன் கதைக்கவும்.

கனிமொழி."

ஒருபுறம் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருதில் கருணாநிதி குறியாக இருந்ததை அவரது புதல்வியின் மடல் வெளிப்படுத்தியதோடு, முத்தமிழ் அறிஞரின் வாரிசு என்று பெயர்போன அவர் ஆங்கிலத்தில் எழுதிய கடிதங்கள் இன்னொரு செய்தியையும் உணர்த்தியிருந்தது.

அதாவது தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருக்கு கனிமொழி அனுப்பிய இரண்டு கடிதங்களின் படிகள், இந்திய உள்துறை அமைச்சர் பா.சிதம்பரம், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டமையே அந்த செய்தியாகும். இவ்வாறாக வன்னிப் போரின் உச்சகட்டத்தில் கருணாநிதியின் மறுமுகம் தமிழீழ விடுதலைப் புலிகளிடையே எவ்விதமான ஐயம் திரிபு இன்றி பட்டவர்த்தனமாகியிருந்தது.

தனது புலிவிரோதப் போக்கின் உச்சகட்டமாக தமிழீழ விடுதலைப் புலிகளை சரணடைய வைத்து அழிப்பதில் குறியாக இருந்த கருணாநிதி, அதற்காக ஒன்றரை இலட்சம் தமிழீழ மக்களின் உயிர்களை சிங்களம் காவுகொள்வதையிட்டு எவ்வித கவலையும் கொள்ளவில்லை. 26.04.2009 அன்று ஒருதலைப்பட்சமான முறையில் போர்நிறுத்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் பிரகடனம் செய்த பொழுதும்கூட, இதுவிடயத்தில் சிங்கள அரசைப் போர்நிறுத்தம் செய்யுமாறு நிர்ப்பந்திக்கும் நடவடிக்கைகள் எவற்றிலும் இந்திய அரசு ஈடுபடவேயில்லை. இதற்கான அழுத்தங்கள் எதனையும் கருணாநிதியும் பிரயோகிக்கவில்லை.

அதேநேரத்தில் இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கான நாள் நெருங்கத் தொடங்க, தமிழகத்தில் மீண்டும் தளிர்விட்ட மக்களின் கொந்தளிப்பை தணிக்கும் நோக்கத்துடன் மறுநாள் 27.04.2009 அன்று சென்னையில் கருணாநிதியால் உண்ணாநோன்பு நாடகம் அரங்கேற்றப்பட்டது. காலையில் உண்ணாநோன்பை தொடங்கிய கருணாநிதி, தனது முயற்சியால் உடனடியாக போர்நிறுத்தம் ஏற்பட்டிருப்பதாகக் கூறி அன்று மதியத்திற்குள் பழரசம் அருந்தித் தனது உண்ணாநோன்பை முடித்துக் கொண்டார். ஆனால் அதே நாளில் வன்னியில் நூற்றுக்கணக்கான தமிழ் உயிர்களை சிங்களம் நரபலி வேட்டையாடியது. கருணாநிதியை நம்பியிருந்த வன்னி மக்களுக்கு சாவையே பரிசாக கருணாநிதி வழங்கினார். கருணாநிதியின் கலைத்திறமை வெளிப்படுத்துவதற்கு ஈழத்தமிழினமே பலிக்கடா ஆக்கப்பட்டது.

இது பற்றி தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களுக்கு எழுதப்பட்ட மின்மடலில் தமிழகத்தில் இருந்து வெளிவரும் தினமணி பத்திரிகையை சேர்ந்த வி.தேவதாசன் என்ற ஊடகவியலாளர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:-

"தோழர் நடேசன் அவர்களுக்கு, வணக்கம்

சென்னையிலிருந்து தினமணி செய்தியாளர் தேவதாசன் எழுதுவது. போரை நிறுத்த இலங்கை அரசின் பாதுகாப்புக் கவுன்சில் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிக்கின்றது என கூறி, சென்னையில் தனது உண்ணாவிரதத்தை 6 மணி நேரத்திற்குள் முதலமைச்சர் கருணாநிதி முடித்துக் கொண்டுள்ளார். கருணாநிதி கூறுவது உண்மையா? தயவுசெய்து உண்மை நிலையை தமிழ்நாட்டு மக்களுக்கு தெரிவியுங்கள்.

அன்புடன்

வி.தேவதாசன்."

தனது வாக்கு வங்கியைப் பாதுகாப்பதற்காக கருணாநிதி ஆடிய உண்ணாநோன்பு நாடகத்தின் உண்மைத்தன்மையை தமிழக மக்களில் ஒருதரப்பினர் நன்கு புரிந்து கொண்டிருந்ததையே தினமணி செய்தியாளரின் கடிதம் வெளிப்படுத்தியிருந்தது.

"தமிழினத்தின் காவலன், உலகத்தமிழர்களின் ஒப்பற்ற தலைவன், முத்தமிழ் வித்தகர்!" என்றெல்லாம் முகமகன் கூறப்படும் தந்திரி கருணாநிதியின் மறுமுகத்தை உலகத் தமிழனம் புரிந்து கொள்வதற்கு சிறிதளவாவது இக்கட்டுரை உதவிபுரிந்திருக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

கருணாநிதியைப் போன்று தமிழீழ தேசத்திற்கு துரோகமிழைத்த தந்திரிகளின் மறுமுகம் இனிவரும் தொடர் கட்டுரைகளில் அவர்கள் எழுதிய கடிதங்களுடன் ஆதாரபூர்வமாக வெளிக்கொணரப்படும்!

(முற்றும்)

(சேரமான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தல்காரர்களுக்கு அவுஸ்.அதிகாரிகள் கப்பம்

(கொழும்பு)

அகதி படகை ஓட்டிவந்த கடத்தல்காரர்களுக்கு அவுஸ்திரேலிய அதிகாரிகள் கப்பம் வழங்கியதாக கூறப்படுவதை தாம் அறியவில்லை என்று நியூசிலாந்தின் பிரதமர் ஜோன் கீ தெரிவித்துள்ளார்.

இலங்கை அகதிகள் 54 பேர் உட்பட்ட 65 பேரின் படகை செலுத்தி சென்றவர்களுக்கே அவுஸ்தி ரேலிய அதிகாரிகள் கப்பம் வழங்கியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

தாம் இந்த செய்தியை பார்த்ததாக குறிப்பிட்டுள்ள நியூசிலாந்து பிரதமர் ஜோன் கீ, அதில் தமது அதிகாரிகள் தொடர்புபடவில்லை என்று அந்த நாட்டின் வானொலி நிகழ்ச்சி ஒன்றின்போது தெரிவித்தார்.

நியூசிலாந்து அதிகாரிகள், அவுஸ்திரேலிய அதிகாரிகளுடன் பேசியிருக்க முடியும். எனினும் படகு வருகை தொடர்பாக அவர் பேசவில்லை என்றும் கீ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த செய்தி வந்தபோது கடத்தல்காரர்கள் தமது படகை விடுவித்துக் கொள்வதற்காக பணம் கொடுத்தார்கள் என்றே தாம் நினைத்ததாக கீ தெரிவித்துள்ளார். (இ-5)

# மைத்திரி - மகிந்த - சந்திரிகா மூவரையும் ஒன்றிணைப்பேன்

## முன்னாள் பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரை ஒன்றிணைத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற செயற்படுவேன் என முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டதன் பின்னர் நேற்று முன்தினம் கம்பளை பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தற்போது அரசியலை விட்டு விலகி மத வழிபாடுகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் சட்ட ரீதியான ஆலோசகர்களாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் சந்திரிகா குமாரதுங்க செயற்படுகின்றார்கள். எனவே அவர்களை இணைத்துக்கொண்டு எதிர்வரும் நாட்களில் செயற்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மகிந்த ஆதரவு கூட்டங்களில் பங்கேற்போருக்கு எதிராக விசாரணைகள் வேண்டாம்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க வேண்டுமெனத் தெரிவித்து நடத்தப்பட்டு வரும் கூட்டங்களில் பங்கேற்கும் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட வேண்டியதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

மகிந்த ஆதரவு கூட்டத்தில் பங்கேற்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமா என சிங்கள பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் என ஸ்ரீலங்கா சுநத்திரக் கட்சியின் பல்வேறு மக்கள் பிரதிநிதிகள் மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவான கூட்டங்களில் பங்கேற்று வருகின்றனர்.

இந்தக் கூட்டங்களில் பங்கேற்பது தற்போது சாதாரண விடயமாக மாற்றமடைந்துள்ளது.


எனவே கூட்டங்களில் பங்கேற்போருக்கு எதிராக விசாரணை நடத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது பயனற்றது என ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மகிந்த ஆதரவு கூட்டங்களில் பங்கேற்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்னதாக தடைவிதித்திருந்தது.

கூட்டங்களில் பங்கேற்போருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கட்சி நிர்வாகம் அறிவித்திருந்தது.

எனினும் அண்மையில் மாத்தறையில் நடைபெற்ற கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் என 200இற்கும் மேற்பட்ட மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஜே.வி.பி.தனித்தே போட்டியிடும்



(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில் தனித்து போட்டியிட்டு நாடாளுமன்ற நடவடிக்கைகளிலும் தனித்து செயறபடப்போவதாக மக்கள் விடுதலை முன்னணி(ஜே.வி.பி) அறிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கடையில் உள்ள பொருட்கள் விசம் கலந்தவை என்றும் பொது எதிரணியின் வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் கடையில் உள்ள பொருட்களை நம்பமுடியாது என்றும் மக்கள் விடுதலை முன்னணி கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மக்களுக்கு கூறியது என்று முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அதேபோல, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கடையில் உள்ள பொருட்களை நம்பமுடியாது என்றும் கடந்த நாட்களில் முன்னெடுக்கப்பட்ட கூட்டணி ஆட்சியின பொருட்களும் நம்பிக்கையில்லாதவை என்றும் அடுத்த நாடாளுமன்ற தேர்தலின் போது மக்களுக்கு தெளிவுபடுத்துவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## எதிர்பாராதே துன்பப்படாதே

யாரைப் பார்த்தாலும், "இவர் மூலம் நமக்கு என்ன கிடைக்கும்?" என்று கணக்குப் பார்க்கும் குணம் சிலருக்கு உண்டு. பஸ்ஸில் ஒரு நண்பரைப் பார்த்து "ஹலோ!" என்று கூறிச் சிரித்தவுடனேயே "இவன் நமக்கு டிக்கெட் எடுப்பானா?" என்று எதிர்பார்ப்பது சிலரது சில்லறைக் குணம்!

யார்? வீட்டிலாவது டெலிபோனைப் பார்த்தால், யாருக்காவது போன் பண்ண வேண்டும் என்று சிலர் பார்ப்பார்கள்! டெக், காமிரா, கார் போன்ற எந்தப் பொருளை யார் வீட்டில் பார்த்தாலும் குறி வைத்துப் பயன்படுத்துவார்கள் சிலர்.

சில பேர் கடவுளைக் கூட இந்த விடயத்தில் விட்டு வைப்பதில்லை! "எல்லாம் தனக்குள் என்றிருக்கும் சர்வ மகா சத்தியமாகிய இறைவனிடம், இதைக் கொடு, அதைக் கொடு என்று கேட்பது கோடீஸ்வரனிடம் கீரைக் கட்டு யாசிப்பது போல" என்கிறார் இராமகிருஷ்ண குருதேவர்.

எனக்கு ஒரு வேடிக்கையான அனுபவம். ஒரு கோயிலில் நான் பேசிக் கொண்டிருந்த போது, ஒரு பக்தர் பிரதட்சணமாகச் சுற்றாமல் எதிர்த் திசையில் (வலமிருந்து இடம்) சுற்றிக் கொண்டிருந்தார். வேறொருவர் மூலம் தடுத்து நிறுத்தியும் அவர் எதிர் மாறாகச் சுற்றிக் கொண்டிருந்தார். சொற்பொழிவை நிறுத்திவிட்டு, "ஏன் இப்படி முறை மாறிச் சுற்றுகிறீர்கள்?" என்றேன். "என் ஜாதகத்தில் கோளாறு 108 சுற்று முருகனைச் சுற்றும்படி ஜோசியர் சொன்னார்," என்றார்.

"108 முறையும் எதிர்ப் பக்கமாகவா சுற்றச் சொன்னார்?"

"இல்லை ..... இல்லை.... இன்று ஏதோ ஞாபகமாக இருபது சுற்றுக் கூடுதலாகச் சுற்றிவிட்டேன். அது ஏதாவது தவறாகி விடுமோ என்று அதிகமாகச் சுற்றியதைப் பிரித்து அகற்றி விடுகிறேன்!" என்றார்.

பக்தியில் இப்படி அளவு வைத்துக் கொண்டு கும்பிடுபவர்களை நாவுக்கரசர் கண்டிக்கிறார். இத்தனை இலட்சம் ஜபம் செய்திருக்கிறேன். இத்தனை சுற்றுச் சுற்றி இருக்கிறேன், இத்தனை நமஸ்காரம் செய்திருக்கிறேன் என்று எண்ணி எண்ணி இறுமாந்து போகிறவர்களைப் பார்த்து "அன்பில் என்ன அளவு வேண்டிக் கிடக்கிறது?" என்கிறார் நாவுக்கரசர்.

"அளவு படாததோர் அன்போடு ஐயாறு அடைகின்ற போது" என்ற சொல், அளவு படாத அன்பின் பெருமையைப் புலப்படுத்தும். "உனக்காச்சு எனக்காச்சு" என்று சகஸ்ரநாமத்தைச் சண்டைக்காரர் போல சத்தம் போட்டு ஊரைக் கூட்டும் சிலரது பக்தி சிந்தனைக்குரியது. ஸ்ரீபுரத்தில், ரத்ன சிம்மாசனத்தில் ஸ்ரீராஜ ராஜேஸ்வரி உட்கார்ந்திருந்தாள்.

அவள் பாதமலர்களை மூடியபடி கோடி கோடி மலர்கள் குவிந்திருந்தன.

துர்வாச மகரிஷி – அம்பாளைத் தரிசிக்க வந்தவர் – இந்தக் காட்சியைப் பார்த்து அசந்து விட்டார். "அடேயப்பா! எவ்வளவு மலர்கள்! எவ்வளவு மலர்கள்! அம்மா இவ்வளவு புஷ்பங்களால் உன்னை அர்ச்சித்த அந்த மகாராஜன் யார்? குளிர்ந்து போயிருக்குமே!" என்றார்.

"மகரிஷி! இந்தப் பூக்களால் நான் எவ்வளவு குளிர்ந்து போனேன் என்பதைக் காண உனக்கு விருப்பம் உண்டா?" என்றாள் பராசக்தி. "ஆம் தாயே!"

"இந்த மலர்களை உன் கையால் விலக்கி என் பாதங்களைப் பார்" என்றாள் ஜகன் மாதா. பூக்களை விலக்கிய துர்வாசன் முகத்தில் "பகீர" என்ற கலவரக் கவலை.... அதிர்ந்து போனார். ஏன்? பராசக்தியின் பாதங்ள் முழுவதும் கொப்புளங்கள்... முத்து முத்தாக...

"தாயே.... இது என்ன அநியாயம்? உன் மேனி புண்படாதே....? எப்படிப் புண் பட்டது? யார் செய்தது இந்த அநியாயம்?" துர்வாசர் பதறினார்.

"துர்வாசா.... இந்திரன்தான் என்னை இப்படிப் பூஜித்தவன். அவன் அர்ச்சித்த பூவிலும் பயங்கர வெப்பம்... பாதம் புண்ணாகியது!"

"பூவில் எப்படி வெப்பம் வரும்? புரியும்படியாகச் சொல்லுங்கள், தாயே!"

"துர்வாசா.... ஒவ்வொரு பூவையும் அவன் எனக்காகத் தரவில்லை.

கோடானு கோடி ஆசைகள் அவனுக்கு.ஒவ்வொரு பூவிலும் ஒவ்வொரு ஆசையை வைத்து என் மீது அர்ச்சித்தான். இவை புஷ்பங்களா? இல்லை அவனது ஆசை வெப்பங்கள்."

மனிதனது ஆசையும் எதிபார்ப்பும் கடவுளையே காயப்படுத்தும் என்ற கற்பனை பயங்கரமானது. வாழ்க்கையிலும் சரி வழிபாட்டிலும் சரி, "பலனை எதிர் பாராதே" என்ற பகவத்கீதை பலருக்குப் புரிவதே இல்லை!

பக்தி என்பது பின் எப்படி இருக்க வேண்டும்? கந்தபுராணம் இதைச் சரியாக விளக்குகிறது.

சூரபன்மன் மகன் பானுகோபன் பெரிய வீரன். அவனை வெல்வது முடியாத காரியம். அந்தச் செயற்கரிய செயலைச் செய்தவர் முருகனுடைய தம்பி வீரபாகுத் தேவர். வீரபாகு நவசக்தியரில் ஒருவர் மகன் என்பதால் முருகன் தம்பி.

பானுகோபனை வென்ற வெற்றிச் செய்தியுடன் முருகனை வணங்குகிறார் வீரபாகு. ஆசி வழங்கிய ஆறுமுகக் கடவுள் கேட்கிறார்

"வீரபாகு.... செயற்கரிய செய்தாய்..... பதவியா! செல்வமா! என்ன வேண்டுமானாலும் கேள் .... தருகிறேன்."

இந்திரபதவி கேட்பாரோ என்று இந்திரனுக்குப் பயம்! பதவியில் இருக்கிற யார்தான் பயமின்றி இருக்கிறார்கள்? குபேரன் செல்வம் கேட்பாரோ என்று குபேரனுக்குப் பயம்! வீரபாகு வாய் மலந்தார்.

"சுவாமி... குபேரன் செல்வம் கனவிலும் நினையேன் இந்திர பதவி வேண்டேன்." "பின் என்ன வேண்டும்?"

"ஒரே ஒரு வரம் வேண்டும். எப்போதும் உங்கள் திருவடியில் அன்பு செலுத்தும் இதயம் வேண்டும்!"

"தந்தோம்... வீரபாகு..... இதைத்தவிர இன்னொரு வரம் கேள் ..... ம்....." சோதிக்கிறார் முருகன்!

"சுவாமி.... ஆம்...... இன்னொரு வரம் வேண்டும். திருவடியில் அன்பு தவிர, இன்னொன்று வேண்டும் என்ற எண்ணமே என் மனதில் வராமல் இருக்கும் வரம் வேண்டும்!" இந்த வீரபாகுவின் அன்புதான் பக்தியின் இலக்கணம். "மற்றை நம் காமங்கள் மாற்று" என்ற ஆண்டாளின் ஆன்ம வேட்கை.

எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் கோயிலுக்குப் போய் வாருங்கள்.... அந்த அனுபவமே ஒரு தனி சுகம் சுவாமி......!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குப் படைக்குறைப்பும் ஒழிப்பு மறைப்புக்களும்!



படைக்குறைப்பு அல்லது படைவிலக்கம் குறித்த விவகாரம் இப்போது மீண்டும் சூடுபிடித்திருக்கிறது. கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னர் இந்த விவகாரம் அவ்வப்போது சூடுபிடிப்பதும், பின்னர் தணிந்து போவதுமாகவே இருந்து வந்துள்ளது.

வடக்கில் செறிவாக நிறுத்தப்பட்டுள்ள படையினரை அங்கிருந்து விலக்க வேண்டும் என்று கடந்த வாரம் கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் வடக்கு முதல்வர் சீ.வி. விக்னேஸ்வரன் கேட்டுக் கொண்டிருந்தார்.

அதற்கு முன்னதாக அமெரிக்காவின் கலிபோர்னியாவைத் தளமாகக் கொண்ட ஒக்லன்ட நிறுவகம் என்ற ஆய்வு அமைப்பு வெளியிட்ட அறிக்கையிலும், ஆயுத மோதல் முடிவுக்கு வந்த பின்னரும், வடக்கில் இராணுவ மயமாக்கல் சூழல் முடிவுக்கு வரவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தது.

கடந்த மேமாத தொடக்கத்தில் கொழும்பு வந்திருந்து அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் ஹெ்றரியும்கூட, வடக்கிலிருந்து படையினரைக் குறைக்க வேண்டும் என்பதைத் தெரிவித்திருந்தார்.

அதுமட்டுமன்றி, இந்தியாவில் பிரபலமான ஊடகங்கள் அண்மையில் எழுதிய ஆசிரியர் தலையங்கங்களிலும் இதனை வலியுறுத்தியிருந்தன.

இந்தப் பின்னணியில்தான் கடந்த வாரம் பலாலிப் படைத்தளத்துக்கு கொழும்பு ஊடகவியலாளர்களின் குழுவொன்று அழைத்துச் செல்லப்பட்டது. அங்கு யாழ். பாதுகாப்புத் தலைமையகத்தின் தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த மற்றும் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள படைப் பிரிவுகளின் தளபதிகள் ஆகியோர் ஊடகவியலாளர்களைச் சந்தித்தனர்.

வடக்கில் அதிகமாக குவிக்கப்பட்டுள்ள படையினரை விலக்க வேண்டும் என்ற கருத்து வெளியுலகினாலும் தமிழர் தரப்பினாலும் வலியுறுத்தப்பட்டு வந்த சூழலிலும் உயர்பாதுகாப்பு வலய நிலங்கள் ஒப்படைக்கப்பட்டு, தீவிரவாதம் மீண்டும் தலையெடுக்கும் அச்சம் எழுந்துள்ளதாகவும், வடக்கில் பாதுகாப்பு நிலைமைகள் மோசமடைந்துள்ளதாகவும் மகிந்த ராஜபக்ச தரப்பு தென்னிலங்கையில் போலிப் பிரசாரங்களை முன்னெடுத்து வந்த நிலையிலும்தான் இந்தச் செய்தியாளர் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது.

ஒரேநேரத்தில் வடக்கிற்கும் தெற்கிற்கும் பதிலடி கொடுக்க வேண்டிய நிலை இராணுவத் தரப்புக்கு ஏற்பட்டிருந்தது. இந்தச் செய்தியாளர் சந்திப்பில், இராணுவம் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னர், படிப்படியாக பொதுமக்களின் நிலங்களைக் கையளித்து வந்துள்ளதைச் சுட்டிக்காட்டி, இது முன்னைய அரசாங்கத்தின் நடவடிக்கையின் தொடர்ச்சிதான் என்பதை மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த விபரித்திருந்தார்.

அதேவேளை, பொதுமக்களிடம் கையளிக்கப்பட்ட நிலங்களின் பரப்பளவைச் சுட்டிக்காட்டியும், பலாலிப் படைத்தளத்தின் முன்னைய, தற்போதைய பரப்பளவைச் சுட்டிக்காட்டியும், தமிழர் தரப்பையும் அவர் திருப்திப்படுத்த எத்தனித்திருந்தார்.

அடுத்து, அளவுக்கதிகமாகப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டை நிராகரிக்க முனைந்த அவர், அதற்கு ஆதாரமான தகவல்கள் மற்றும் புள்ளிவிபரங்களை? எதையும் வெளியிடத் தயாராக இருக்கவில்லை.

2009 ஆம் ஆண்டில் 152 இராணுவ முகாம்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்ததாகவும், அவற்றில் 59 முகாம்கள் அகற்றப்பட்டு தற்போது 93 முகாம்கள் மட்டுமே பேணப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். படைவிலக்கத்தை அல்லது படைக்குறைப்பை வெளிப்படுத்த அவர் கூறிய ஒரே புள்ளிவிபரம் இதுதான்.

ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னர், 2010 ஜனவரி தொடக்கம் 2014 ஜனவரி வரை யாழ். படைகளின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க அத்தகைய ஒரு புள்ளிவிபரத்தைக் கூறுவார். தான் யாழ். படை களின் தளபதியாகப் பொறுப்பேற்ற போது, 27 ஆயிரமாக இருந்த படையினரின் எண்ணிக்கை 12, 000 ஆக குறைக்கப்பட்டிருப்பதாக அவர் கூறி வந்தார்.

கடந்த ஆண்டில் அவர், யாழ்ப்பாண த்தில் இருந்து வில கிச் செல்ல முன்னர், தற்போது படையின ரின் எண்ணிக்கை 12,000 ஆகக் குறை க்கப்பட்டு விட்டதாகவும் குறிப்பிட்டிருந் தார்.

இதுபோல இப்போ தைய யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த எந்த புள்ளி விபரங்களையும் வெளியிட்டிருக்கவி ல்லை. ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்த 152 இராணுவ முகாம்களில் 59 இராணுவ முகாம்களை மூடியிருக்கிறோம் என்று மட்டும் கூறியிருக்கிறார்.

இதன்படி யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து 39 சதவீதமான இராணுவ முகாம கள் அகற்றப்பட்டுள்ளன. அதையும் மீறி 93 இராணுவ முகாம்கள் யாழ்ப்பாணக் குடாநாடடில இன்னமும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மொத்த தரைப் பரப்பளவு, கடலேரிகளின் பரப்பு போக, 930 சதுரகிலோ மீற்றர் மட்டும்தான்.

இதன்படி பார்த்தால் யாழ்ப்பாணத்தில் இப்போது 10 சதுரகிலோ மீற்றருக்கு ஒன்று என்ற அடிப்படையில் இராணுவ முகாம்கள் இருக்கின்றன. இது படைச்செறிவின் தீவிரத்தை தெளிவாக எடுத்துக் காட்டக்கூடிய ஒரு தரவாகும். இதனை யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவத் தளபதிதான் கூறியிருக்கிறாரே தவிர, இது ஒன்றும் குத்துமதிப்போ மிகைப்படுத்தலோ அல்ல.

நாட்டின் ஏனைய பகுதிகளைப் போலவே வடக்கிலும் இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் அடிக்கடி கூறிவருகிறது.

அந்தவகையில் பார்த்தால் இலங்கையின் மொத்த தரை நிலப்பரப்பான 64,740 சதுர கிலோ மீற்றரில் மொத்தமாக 6474 இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

அந்தளவுக்கு இராணுவ முகாம்கள் அமைக்கப்படவில்லை என்பது தெளிவு. அடுத்து 2010 ஆம் ஆண்டு ஜனவரியில் யாழ். படைகளின் தளபதியாகப்பொறுப்பேற்ற மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தான் பதியேற்ற போது 27,150 படையினர் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்ததாக கூறியிருந்தார். அந்தக் காலகட்டத்தில் மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த கூறியது போல 152 இராணுவ முகாம்கள் இருந்திருக்க வாய்ப்புகள் உள்ளன.

அவ்வாறாயின் ஒரு இராணுவ முகாமில் சராசரியாக 178 படையினர் இருந்திருக்க வேண்டும். கடந்த ஆண்டு மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க கூறியது போல 12,000 படையினரும், 93 இராணுவ முகாம்களுமே இப்போது இருப்பதாக வைத்துக் கொண்டால் ஒரு இராணுவ முகாமின் ஆளணிப்புலம் 129 ஆகக் குறைந்திருக்க வேண்டும்.

இதன்படி தற்போது யாழ்ப்பாணத்தில் சதுர கிலோ மீற்றர் ஒன்றுக்கு 13 படையினர் இருக்கின்றனர் என்று கருத வேண்டும். இதேபோன்று நாடெங்கும் சதுர கிலோ மீற்றர் ஒன்றுக்கு .13 படையினரை நிறுத்துவதானால் இலங்கை இராணுவத்துக்கு 841,620 படையினர் தேவைப்படுவர்.

ஆனால் இலங்கை இராணுவத்தின் ஆளணிப்பலம் இரண்டு இலட்சத்துக்கும் குறைவானது. கடற்படை, விமானப்படையையும் சேர்த்தால்கூட 3 இலட்சம் பேர் வரைதான் வரும். எனவே நாட்டின் பிற பகுதிகளைப் போலவே யாழ்ப்பாணத்தில் படையினர் நிறுத்தப்பட்டுனர். முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பது அப்பட்டமான பொய்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி வடக்கில் உள்ள இராணுவத்தினரின் செறிவைக் குறைத்துக் காட்டுவதிலேயே அரசாங்கமும் படையினரும் குறியாக இருக்கின்றனர்.

இதில் முன்னைய அரசாங்கம் இப்போதைய அரசாங்கம் என்ற வேறுபாடுகள் இல்லை. வடக்கில் இருந்து படையினரை வெளி யேற்றம் பேச்சுக்கே இடமில்லை என்பதுதான். இரண்டு அரசாங்கங்களினதும் ஒரேநிலைப்பாடு.

அதுபோலவே வடக்கில் நிறுத்தப்பட்டுள்ள படையினர் பற்றிய சரியான தரவுகளை வெளியிடுவதில் முன்னைய அரசாங்கத்தைப் போலவே இப்போதைய அரசாங்கமும் ஏமாற்றியே வருகிறது.

வடக்கில் நிலைகொண்டுள்ள படையினரின் எண்ணிக்கை பற்றிய விபரங்களை வெளியிட முடியாது என்று திட்டவட்டமாக நிராகரித்திருக்கிறார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர.

இப்போது ஆயுத மோதல்கள் இல்லை. வடக்கில் பாதுகாப்பு அச்சுறுத்தலும் இல்லை. இதைக்கூறும் அரசாங்கம்தான் வடக்கில் நிறுத்தப்பட்டுள்ள படையினரின் சரியான எண்ணிக்கையை வெளியிடவும் மறுக்கிறது.

பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி படையினரின் எண்ணிக்கையை வெளியிட மறுப்புத் தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை என்றால் எதற்காக இராணுவத்தினரின் தொகையை அரசாங்கம் மறைக்க வேண்டும்?

அரசாங்கமும், படைத்தரப்பும் வடக்கில் உள்ள படையினரின் எண்ணிக்கையை வெளியிட மறுப்பதில் இருந்தே இந்த விவகாரத்தில் அவர்கள் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் இருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ளலாம்.


அனைத்துலக மட்டத்திலும் தமிழ் மக்கள் தரப்பிலும் படைக்குறைப்பு குறித்து வலியுறுத்தப்பட்டாலும் அதனை நிராகரிக்கும் அரசாங்கம் எதற்காக இந்த தரவுகளை மட்டும் மறைக்க வேண்டும்.

அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் இந்த விவகாரத்தைக் கையாளும் ஒன்றாக இருந்தால் துணிச்சலுடன் தமது படைவலிமை மற்றும் படைத்தளங்கள் பற்றிய வெள்ளை அறிக்கையை வெளியிடலாம். இல்லாவிட்டால் தமிழ் மக்கள் மட்டுமன்றி சர்வதேச சமூகமும்கூட அரசாங்கத்தின் நேர்மையின் மீதும் வாக்குறுதிகள் மீதும் சந்தேகம் கொள்வதைத் தவிர்க்க முடியாது. அந்த சந்தேகம் உள்ளவரை இலங்கையில் முழுமையான நல்லிணக்கமும் சாத்தியப்படாது.


-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவில் மாணவி கொலை
# நடந்தது என்ன?


20
மாணவி வித்தியா





மாணவி வித்தியாவின் படுகொலை பிரதேசம், மாவட்டம், மாகாணம், நாடு எ[illegible]ல்லை கடந்து சர்வதேச அளவில் முக்கியத்துவமடைந்தது.

இ[illegible], மத, [illegible] என்ற பேதங்கள் கடந்து வித்தியாவின் கொலைக்கு எதிரான கண்டனங்கள் வலுப்பெற்றன. இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன 26.05.2015 அன்று திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தார்.

ஜனாதிபதி மைத்திரியின் யாழ்ப்பாண விஜயம் மிகவும் இரகசியமாக இருந்தது. எனினும் வலம்புரி நாளிதழ் மட்டும் 26.05.2015 அன்று, ஜனாதிபதி மைத்திரி இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வார் என்ற செய்தியை வெளியிட்டிருந்தது.

இலங்கையில் வெளிவரக்கூடிய எந்த ஊடகமும் ஜனாதிபதி மைத்திரியின் யாழ்ப்பாண விஜயம் பற்றி அறியாமல் இருக்குமளவில் ஜனாதிபதியின் யாழ்.விஜயம் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

பலாலி படைத்தளத்திற்குக்கூட ஜனாதிபதி மைத்திரி யாழ்ப்பாணத்திற்கு வருவார் என்ற செய்தி சொல்லப் படவில்லை. 26.05.2015 அன்று யாழ்ப்பாணத்திற்கு அரசின் முக்கிய பிரமுகர் ஒருவர் விஜயம் செய்வார் என்று மட்டுமே பலாலி படைத்தளத்திற்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரி யாழ்ப்பாணம் வருவார் என்ற செய்தி 26.05.2015 அன்று காலைவேளையிலேயே வடக்கின் முதலமைச்



சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திற்கு வருகின்ற ஜனாதிபதி ஆளுநர் அலுவலகத்தில் தங்களைச் சந்திக்க விரும்புகிறார் என்று கூற அவசர அவசரமாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆளுநர் அலுவலகத்திற்குச் சென்றார். காலை 9 மணியளவில் ஆளுநர் அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரி வந்தாயிற்று. ஜனாதிபதியும் முதலமைச்சரும் சந்திக்கின்றனர்.

என்ன திடீர் விஜயம் என்று ஜனாதிபதியிடம் முதலமைச்சர் நிலை. மாணவி வித்தியாவின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறுவதற்காக வந்துள்ளேன். புங்குடுதீவிற்குச் செல்லவுள்ளேன் என்றார் ஜனாதிபதி மைத்திரி.

ஜனாதிபதி மைத்திரி இவ்வாறு கூறியபோது வடக்கின் முதல்வருக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஒரு தமிழ் மாணவியின் கொலைக்கு அனுதாபம் தெரிவிக்க இந்த நாட்டின் ஜனாதிபதி யாழ்ப்பாணம் வந்து புங்குடுதீவுக்குச் செல்லவுள்ளார் என்ற போது, இப்படியிருந்தால்... இந்த நாட்டில் தமிழருக்குத் தனிநாடு எதற்கு? என்ற எண்ணம் முதல்வருக்கு மட்டுமல்ல தமிழ் மக்கள் அனைவருக்குமே ஏற்பட்டது எனலாம்.

ஜனாதிபதி புங்குடுதீவுக்குச் செல்வது அவ்வளவு நல்லதல்ல. பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் இல்லை. படைத்தரப்பிற்கே சொல்லாமல் யாழ்ப்பாணத்திற்கு வெளிக்கிட்டு வந்த ஜனாதிபதியை புங்குடுதீவுக்கு அனுப்புவது அவ்வளவு நல்லதல்ல என்று வடக்கின் முதல்வர் உட்பட அங்கு நின்ற பலரும் கருதிக் கொண்டனர்.

எனினும் ஜனாதிபதி மைத்திரி புங்குடுதீவுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் மேற்கொண்டார்.

புங்குடுதீவில் அரச பணி புரியும் ஒருவருக்குத் தகவல் கொடுத்து வித்தியாவின் பெற்றோருக்கு, ஜனாதிபதி மைத்திரி உங்கள் வீட்டிற்கு வரவுள்ளார் என்ற செய்தியைத் தெரியப்படுத்துவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டன.



எனினும் குறித்த அரச உத்தியோகத்தர் புங்குடுதீவில் உள்ள மாணவி வித்தியாவின் வீட்டிற்குச் சென்ற போது வித்தியாவின் தாயும் தமையனும் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று விட்டதாகக் கூறப்பட்டது.

இந்தச் செய்தியை மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கு தெரியப்படுத்த, ஜனாதிபதி மைத்திரியின் புங்குடுதீவுக்கான விஜயம் தவிர்க்கப்பட்டு வித்தியாவின் தாயும் தமையனும் யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்திற்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் வாகனத்தில் வித்தியாவின் தாயும் தமையனும் ஆளுநர் அலுவலகத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

ஆளுநர் அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரி காத்திருக்கிறார். வித்தியாவின் தாய் ஆளுநரின் அலுவலகத்திற்குள் நுழைந்தபோது இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எழுந்து இருகரம் கூப்பி தனது ஆழ்ந்த அனுதாபத்தை வித்தியாவின் தாய்க்குத் தெரிவித்துக் கொண்டார்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரி வித்தியாவின் தாய்க்கு இருகரம்கூப்பி சோகத்தோடு தனது கவலையை வெளிப்படுத்திய போது அங்கு நின்றவர்களின் இதயங்கள் நெகிழ்ந்து கொண்டன.

மனிதநேயத்தின் முன்னிலையில் இனவாதம் உயிர் துறந்து போனது என்ற நிஜம் அந்த இடத்தில் சில நிமிட நேரங்களை நிசப்தமாக்கியது.

(தொடரும்)

புருசோத்மன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 219

# பொறாமையிலிருந்து விடுதலை!

...மக்கள் என்னிடம் அவர்களுடைய பிரச்சினைகளுடன் வந்து அவற்றிற்குத் தீர்வு கேட்கிறார்கள். நான் அவர்களிடம் 'நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று சொல்கிறேன்;

மேலும் அவர்கள் ஆசிரமத்தில் இருக்கும்பொழுது சிறிது நேரம் ஆலமரத்தடியில் அமர்ந்துவிட்டுச் செல்லுமாறு சொல்கிறேன். ஆசிரமத்தில் இருக்கும் ஆலமரம் ஒரு சக்திக்களம்.

ஆனால், அவர்கள் இந்த பதிலில் மகிழ்ச்சியடைவதில்லை. விடயங்கள் இன்னும் நல்லபடியாக ஆக என்ன சடங்குகள் செய்ய வேண்டும் என்று கேட்கிறார்கள்.

நான் அவர்களிடம் ஆசிரமத்திலுள்ள ஆலமரத்தை 108 சுற்றுக்கள் சுற்றுமாறு சொன்னால், அவர்கள் அதை மிக மகிழ்ச்சியுடன் செய்வார்கள்! பாருங்கள்.

நீங்கள் ஆலமரத்தை 108 சுற்றுக்கள் சுற்றினால் அது உங்கள் அஹங்காரத்தைத் திருப்திப்படுத்துகிறது. பிறகு நீங்கள் கடினமாக உழைத்ததாகவும் அதன்பலன் உங்களுக்குக் கிடைக்கும் என்று எண்ணுகிறீர்கள்.



நாம் மதத்தைப் பொறுத்தவரை நமது மனத்தை இவ்வாறுதான் பழக்கப்படுத்தியிருக்கிறோம்.

மதங்களிலும் சடங்குகளிலும்கூட, மக்கள் ஒருவருடன் ஒருவர் போட்டியிடுவதை நான் கண்டிருக்கிறேன்! உங்கள் அண்டை வீட்டார் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட வழிபாட்டை ஒரு குறிப்பிட்ட கோயிலில் செய்தால் அடுத்து நீங்களும் அங்கே சென்று அதே வழிபாட்டை அதே கோயிலில் செய்கிறீர்கள்.

எதைக் குறித்து? கடவுளையா அல்லது அண்டை வீட்டுக்காரரையா? இவற்றையெல்லாம் செய்துகொண்டிருப்பதன் மூலம் நீங்கள் எல்லாவற்றையும் தவற விட்டுவிடுகிறீர்கள்!

மக்கள் உலகம் முழுவதும் உள்ள பல்வேறு முக்கியமான புனித ஸ்தலங்களுக்குச் சென்று வந்ததாகக் கூறுவதில் பெருமையடைகிறார்கள்.

அவர்கள் சென்று வந்த கோயில்களைப் பட்டியலிடுகிறார்கள். இந்தக் கதைகளைக் கேட்பவர்களே, உடனடியாக இந்த சாதனைகளை மிஞ்சுவதற்கு முயற்சி செய்யத் தொடங்கிவிடுகிறார்கள்.

இந்த எல்லாப் புனித ஸ்தலங்களுக்கும் சென்று வந்த பிறகு, உங்கள் அஹகங்காரம் இன்னும் உறுதியாகவே இருக்கிறது.

விஷுத்தி சக்கரம் இன்னும் அடைபட்டுதான் இருக்கிறது! இதைப் பற்றி எப்பொழுதாவது நீங்கள் சிந்தித்திருக்கிறீர்களா?

இவையெல்லாம் ஒப்பிடுதல், பொறாமை மற்றும் இதுபோன்ற விடயங்களிலிருந்து விடுதலை பெறவும் உள்ளுலக முன்னேற்றத்திற்காகவுமே செய்யப்படுபவை. ஆனால் இங்கும் நீங்கள் குறிக்கோளை மீண்டும் மீண்டும் தவறவிட்டுவிட்டு, இவற்றை வெளியுலகத்திற்காகவே செய்கிறீர்கள்.

மக்கள் தெய்வத்திற்கு முன் ஸ்லோகங்களைச் சொல்வதைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் சில வரிகளைப் படித்துவிட்டு, வேலைக்காரியைக் கூப்பிட்டு அவளுக்குக் கொடுத்த வேலையை முடித்தாயிற்றா என்று கேட்பார்கள்.


அல்லது சில வரிகளைப் படித்துவிட்டு முடிப்பதற்கு இன்னும் எத்தனைப் பக்கங்கள் மீதியிருக்கிறது என்று பார்ப்பார்கள்! இவ்வாறுதான் அவர்கள் கடவுளுடன் தொடர்பு கொள்கிறார்கள்; மேலும் இறுதியில் அதைப் படித்து முடித்ததற்காகத் திருப்தியடைகிறார்கள்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, இதுபோன்று பாராயணம் செய்வதை ஒரு உறுதியெடுத்துக் கொண்டு 21 நாட்களுக்குத் தொடர்ந்து செய்து கொண்டிருப்பார்கள்! பிறகு பெருமிதத்துடன் சென்று அண்டை வீட்டுக்காரர்களிடமோ அல்லது உறவிகளிடமோ தாங்கள் மிகவும் கடினமான ஒரு சங்கல்பத்தை நிறைவேற்றி விட்டதாகச் சொல்வார்கள். நாம் செய்யும் எல்லா விடயங்களுமே அநேகமாக வெறுமனே மற்றவர்களிடம் சொல்லி, அவர்களிடம் ஒரு ஒப்பிடுதல் விதையை விதைப்பதற்குத்தான்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# கொழுப்பு மின்நிலையம்



கொழுப்பிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் உலகின் மிகப்பெரிய மின் நிலையம் லண்டனில் நிறுவப்பட்டுள்ளது. காய்கறிக் கழிவுகள், மாமிசக் கழிவுகளிலிருந்து மின்சாரம் தயாரிக்க முடியும் என்பது ஏற்கனவே தெரிந்த விடயம்தான்.

ஆனாலும் பெரியளவில் மின்சாரம் எடுக்கப் படவில்லை. தற்போது விலங்குகளின் கொழுப்புகளை எரித்து மின்சாரம் தயாரிக்கும் மிகப்பெரிய மின் நிலையத்தை இங்கிலாந்து அரசு நிறுவியுள்ளது. கிழக்கு லண்டனில் உள்ள பெக்டான் பகுதியில் இந்த மீன்நிலையம் நிறுவப்பட்டுள்ளது உலகிலேயே கொழுப்பை எரித்து மின்சாரம் தயாரிக்கும் மிகப்பெரிய மின் நிலையமாக இது விளங்குகிறது. இதன்மூலம் வருடத்துக்கு 130 ஜிகாவோட்ஸ் மின்சாரம் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது 39 ஆயிரம் குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்க போதுமானதாகும்.

முதற்கட்டமாக 75 ஜிகாவோட்ஸ் மின்சாரம் தயாரிக்கும் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வர்த்தக இயக்குநர் தோம்ஸ்வாட்டர் கூறியதாவது "வழமையாக இறைச்சி கூடங்கள், ஹோட்டல்கள், சமையல் அறைகளில் ஏராளமான கொழுப்புகள் கழிவுகளாக வீசப்படுகிறது. இத்துடன் காய்கறி கழிவுகளும் ஏராளமாக சேர்கிறது. இந்த கழிவுகளால் கழிவுநீர் பாதையில் வருடத்துக்கு 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அடைப்புகள் ஏற்படுவதாக கணிக்கப்பட்டுள்ளது. இறைச்சி மாற்றும் காய்கறி கழிவுகளை தனியே சேகரித்து மின்சாரம் தயாரிக்க பயன்படுத்தினால், இங்கிலாந்தின் மின்தேவையில் 14 முதல் 20 சதவீதம் மின் தேவையை பூர்த்தி செய்ய முடியும்" இவ்வாறு தோம்ஸ் குறிப்பிட்டுள்ளார். இந்த வருடம் தொடக்கம் இதன்மூலம் பயன் பெறும் வகையில் வேலைகள் நடைபெறுகிறது. துர்நாற்றம் வீசாமல் புகையை வெளியிடாமலும் மின்சாரம் தயாரிக்கப்படும் என்று மேலும் கூறியுள்ளார். புதுமையான திட்டம் என்றாலும் கொழுப்பு மின்சாரம் மந்தமாக ஒளிராமல் இருந்தால் சரிதான்.

வி. பிரணவன்




# உருளைக்கிழங்கு ஆம்லெட்

**தே.பொருட்கள்:**



உருளை கிழங்கு -350 கிராம்

முட்டை-7

சோயா சாஸ் -3 தேக்கரண்டி

நல்லெண்ணெய் -1 தேக்கரண்டி

மிளகு- 1 தேக்கரண்டி

மிளகாய்தூள் -1 தேக்கரண்டி

வெங்காயம்-1, பச்சை மிளகாய்-2, பூண்டு-2 பல், உப்பு -தே.அளவு, எண்ணெய்-தே.அளவு


**செய்முறை**

உருளை கிழங்கை 3/4 பதத்திற்கு அவித்து தோலை உரித்து வட்டமாக வெட்டவும. பூண்டு பச்சை மிளகாயை பொடியாக நறுக்கவும். ஒரு பாத்திரத்தில் முட்டையை உடைத்து ஊற்றி சோயா சாஸ், நல்லெண்ணெய் உப்பு மிளகுத்தூள் சேர்த்து நன்றாக அடித்து வைக்கவும். பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி வெட்டிய உருளை கிழங்கை போட்டு பொன்னிறமாக பொரித்து எடுக்கவும். பின்னர் வெங்காயம் பூண்டு, பச்சை மிளகாயை போட்டு வதக்கவும். முட்டைக் கலவைக்குள் பொரித்த உருளைக் கிழங்கு, வதக்கியவற்றைச் சேர்த்துக் கலக்கவும். கொஞ்சம் கொஞ்சமாக ஊற்றி ஆம்லெட்டாக பொரித்து எடுக்கவும். இதை பிட்டு மற்றும் சாப்பாட்டுடன் சாப்பிடச் சுவையாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூடான் ஜனாதிபதிக்கு சிக்கல் வலுக்கிறது!

## நாட்டைவிட்டு வெளியேற நீதிமன்றம் தடையுத்தரவு



தென்னாபிரிக்க நாட்டின் தலைநகர் ஜோகன்னர்ஸ்பேர்க்கில் நடைபெற்று வரும் ஆபிரிக்க யூனியன் மாநாட்டில் கலந்து கொள்ள வந்துள்ள சூடான் ஜனாதிபதி ஒமர் அல்-பஷிரை கைது செய்யுமாறு அந்நாட்டு அரசை சர்வதேச நீதிமன்றம் நேற்று முன்தினம் கேட்டுக்கொண்டது.

இதையடுத்து தென்னாபிரிக்க மனிதவுரிமை அமைப்பை சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் ஜோகன்னர்ஸ்பேர்க் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்தார்.

அதில் சர்வதேச நீதிமன்ற உத்தரவுப்படி பஷிரை கைது செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கேட்டுக்கொண்டார். இம்மனுவை நேற்று முன்தினம் விசாரித்த நீதிபதி ஹான்ஸ் பேப்ரிகஸ், பஷிர் நாட்டைவிட்டு வெளியேறாமல் தடுக்குமாறு தங்கள் நாட்டு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். இதனால் அவர் கைது செய்யப்பட்டு, சர்வதேச நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

எனினும் இதனால் எவ்வித பதற்றமும் அடையாமல் காணப்பட்ட பஷிர், நேற்று முன்தினம் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கோட் சூட்டுடன் கலந்துகொண்டார். நேற்றுடன் மாநாடு முடிவடைந் துள்ளது. இந்நிலையில், பஷிர் கைது செய்யப்படுவாரா? அல்லது சூடான் செல்ல அனுமதிக்கப்படுவாரா? என்று மிகுந்த பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

முன்னதாக கடந்த 2003 ஆம் ஆண்டு சூடானில் நடைபெற்ற போரில், மனிதவுரிமை மீறல்கள் நடைபெற்றதாகவும், போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. இதை தொடர்ந்து அப்போது அந்நாட்டு ஜனாதிபதியாகவிருந்த பஷிர் மீது சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த விசாரணையின்போதுதான், பஷிரை கைது செய்யுமாறு சர்வதேச நீதி மன்றம் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# நக்சல்களின் வன்முறைக்கு 15 ஆயிரம் பேர் உயிரிழப்பு

1980 ஆம் ஆண்டு முதல் 2015 மே 31 ஆம் திகதி வரையிலான காலத்தில் இந்தியா முழுவதும் நடந்த நக்சல்களின் வன்முறை தாக்குதலுக்கு பொதுமக்கள் தரப்பில் 12 ஆயிரத்து 177 பேரும் நக்சல் தடுப்பு வேட்டையில் ஈடுபட்டு வரும் பாதுகாப்புப்படையினர் தரப்பில் 3 ஆயிரத்து 125 பேரும் உயிரிழந்துள்ளனர். இது போல், பாதுகாப்புப் படையினரின் தாக்குதலுக்கு 4 ஆயிரத்து 768 நக்சல்கள் கொல்லப்பட்டனர்.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் அளித்த பதிலில் கூறியிருப்பதாவது,

கடந்த 3 ஆண்டுகளில் பொலிஸ துறையை நவீனப்படுத்துவதற்காக பல்வேறு மாநிலங்களுக்கு மத்திய அரசு 3,038.86 கோடி ரூபா வழங்கி உள்ளது.

2012-13 மற்றும் 2014-15 நிதி ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில், பொலிஸ் துறை நவீனமய மாக்கலுக்காக ஆந்திரப் பிரதேசத்துக்கு 161 கோடி ரூபாவும், உத்தரப் பிரதேசத்துக்கு 377 கோடி ரூபாவும், சத்தீஸ்கருக்கு 73 கோடி ரூபாவும் ஜார்க்கண்டுக்கு 69 கோடி ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

தெலுங்கானாவுக்கு 2014-15 இல் 68.13 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது.

நக்சல் பாதிப்புமிக்க 10 மாநிலங்களில் 400 பொலிஸ் நிலையங்களை மேம்படுத்த மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது. ஒவ்வொரு பொலிஸ் நிலையத்துக்கும் 2 கோடி ரூபாவை அரசு வழங்கும். இதற்கான செலவை மத்திய அரசும் சம்பந்தப்பட்ட மாநில அரசும் 80: 20 என்ற விகிதத்தில் ஏற்கும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)




# நேபாளத்தில் ஏற்பட்ட கடும் நிலநடுக்கத்தால் 10 இலட்சம் பேர் வறுமைக்கோட்டுக்குக் கீழ்!

**(காத்மண்டு)**

**நேபாளத்தில் அண்மையில் ஏற்பட்ட கடும் நிலநடுக்கத்தின் விளைவாக, சுமார் 10 இலட்சம் பேர் வறுமைக் கோட்டுக்கு கீழ் தள்ளப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டின் திட்டக் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



நிலநடுக்கத்தால் உருக்குலைந்த நேபாளத்தை மறுசீரமைப்பதற்கான தேவைகளை அந்நாட்டின் திட்டக் குழு மதிப்பீடு செய்து வருகிறது.

இந்தக் குழு தனது வரைவு அறிக்கையை, பிரதமர் சுஷீல் கொய்ராலாவிடம் கடந்த வெள்ளிக்கிழமை சமர்ப்பித்தது. அதில், நிலநடுக்கத்தால் தங்களது வேலையையும், சொத்துகளையும் இழந்ததன் விளைவாக, 9.82 இலட்சம் பேர் வறுமைக் கோட்டுக்கு கீழ் தள்ளப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரும் 18 ஆம் திகதி இறுதி செய்யப்படும் இந்த அறிக்கை, நேபாளத்தின் மறுவாழ்வு மற்றும் மறுசீரமைப்பு பணிகளுக்காக, வரும் 25 ஆம் திகதி, தலைநகர் காத்மண்டில் நடைபெறும் சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும் என்று நேபாள திட்டக் குழுவின் துணைத் தலைவர் கோவிந்த் ராஜ் போக்கரல் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம், நேபாளத்தில் நிகழ்ந்த சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி 9 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சவுதி தலைமையிலான கூட்டுப்படையின் தாக்குதலில் சிக்கி 13 பேர் உயிரிழப்பு!

சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படையினர் ஏமன் தலைநகர் சனாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிகழ்த்திய வான்வழித் தாக்குதலில் கிளர்ச்சியாளர்கள் 12 பேர் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதல், முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லா சலேவின் உறவினர்கள் வசித்து வந்த இடங்களை இலக்கு வைத்து நடத்தப்பட்டதாகத் தெரிகிறது.

ஷியா பிரிவைச் சேர்ந்த ஹூதி கிளர்ச்சியாளர்களின் நிலைகள் மீது கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதியிலிருந்து சவுதி கூட்டுப் படையினர் தொடர்ந்து வான்வழித் தாக்குதல் நிகழ்த்தி வருகின்றனர். தலைநகர் சனாவின் பழைய நகர் பகுதியிலுள்ள புராதனக் கட்டடங்கள சவுதி குண்டு வீச்சில் தகர்க்கப்பட்டதற்கு ஐ.நா. உள்ளிட்ட அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தும், தலைநகரில் கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள பகுதியில் தொடர்ந்து மூன்றாவது நாளாக வான்வழித் தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டன. இதில் 12 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர். தாக்குதலின்போது, அப்பாவிப் பொது மக்கள் 6 பேர் உயிரிழந்ததாக அதிகார பூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்குப் பகுதியில் உள்ள ஹஜ்ஜாவில் கிளர்ச்சியாளர்களின் முகாம் மீது கூட்டுப்படை விமானங்கள் குண்டு வீசின. இதில் கிளர்ச்சியாளர்களின் வாகனங்கள் தகர்ந்தன என்று கூட்டுப் படை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

ஏமனில் கடந்த சில மாதங்களாக கிளர்ச்சியாளர்களுக்கும், முன்னாள் ஜனாதிபதி மன்சூர் ஹாதிக்கு ஆதரவுப் படையினருக்குமிடையே நடைபெற்று வரும் சண்டையில் பொதுமக்கள் உட்பட ஆயிரத்து 600 இற்கும் மேற்பட் டோர் உயிரிழந்ததாகவும் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் ஐ.நா. தகவல் சுட்டிக்காட்டுகிறது. (இ-5)

# வெளிநாட்டவர்கள் மீதான வெறுப்புணர்வால் அச்சம்

ஆபிரிக்காவிலிருந்தும் மத்திய கிழக்கிலிருந்தும் ஐரோப்பாவுக்கு பெருமளவில் மக்கள் குடிபெயர்ந்துவரும் சூழ்நிலையால் வெளிநாட்டவர்கள் மீதான நியாயமற்ற வெறுப்புணர்வு-அச்சம் (xenophobia) அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக ஐ.நாவின் குடியேறிகள் தொடர்பான பிரதிநிதி பீட்டர் சதர்லேண்ட் தெரிவித்தார்.

பெரும்பாலான குடியேறிகள், பெரும்பாலும் சிரியாவிலிருந்தும் எரித்திரியாவிலிருந்தும் வெளியேறுகின்றவர்கள் துன்புறுத்தல்களிலிருந்து தப்பிவருபவர்கள் என்று சதர்லேண்ட் தெரிவித்தார்.

குடியேறிகள் இறுதியாக சென்றுசேருகின்ற ஐரோப்பிய நாடுகளிடம் தஞ்சம் பெறுவதற்கு அவர்கள் உரித்துடையவர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளால் தஞ்சம் அளிக்கப்படும் குடியேறிகளின் எண்ணிக்கை தொடர்பில் கோட்டா நடைமுறை அவசியம் என்றும் ஐ.நா. பிரதிநிதி தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்தம் மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை 16.06.2015 தொடக்கம் 19.06.2015 வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை வடமாகாணத்திலுள்ள சில பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

16.06.2015 செவ்வாய்க்கிழமை யாழ். பிரதே சத்தில் அந்தோனியார் வீதி, பண்டத்தரிப்பு, காஞ்சிபுரம், புங்குடுதீவு, நெடுந்தீவு வேலணை ஒரு பகுதி, புங்குடுதீவு இலங்கை கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் செக்கட்டிப்புலவு பிரதேசம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மணல்குளம், சூரிய கட்டைக்காடு ஆகிய பிரதேசங்க்ளிலும்

17.06.2015 புதன்கிழமை யாழ். பிரதேசத்தில் காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், காங்கேசன்துறை இலங்கை கப்பற்கூட்டுத்தாபனம், பலாலி இராணுவத் தலைமைக் காரியாலயம், மயிலிட்டி கரிசன் 5ஆவது பொறியியல் படைமுகாம், பலாலி இலங்கை விமானப்படை முகாம், மயிலிட்டி கரிசன் 5 ஆவது பொறியியல் படை முகாம் (புதியது), பலாலி விமானப்படை ஓய் வுகாலவிடுதி, காங்கேசன்துறை பாதுகாவல் நிலையம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பட்டானிச்சூர் பிரதேசம், பட்டக்காடு பிரதேசம், வேப்பங்குளம் பிரதேசம், மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடிய வரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் வட்டுப் பித்தன்மடுவிலிருந்து புதுக்காமம் ஆகிய பிரதேசங்களிலும்

18.06.2015 வியாழக்கிழமை யாழ்.பிரதேசத்தில் அந்தோனியார் வீதி, பண்டத்தரிப்பு, காஞ்சிபுரம், வல்லான்,ஆலடி சந்தி, குறிகாட்டுவான், புங்குடுதீவு, இறுப்பிட்டி, கேரதீவு, மண்டைதீவு,துறையூர், மண்டைதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடிய வரை, பொகவஸ்வேவ,சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மணல்குளம், சூரியகட்டைக்காடு ஆகிய பிரதேசங்களிலும்

19.06.2015 வெள்ளிக்கிழமை யாழ்.பிரதேசத்தில் உசன், விடத்தற்பளை, கெற்பெலி, கிளாலி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பூவரசங்குளத்திலிருந்து கங்கன்குளம் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)

# சர்ச்சைக்குள் சிக்கினார் மத்திய அமைச்சர் சுஷ்மா

(டில்லி)

லலித் மோடிக்கு விசா பெற உதவியதால் சர்ச்சையில் சிக்கிய இந்திய மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் போர்கொடி உயர் த்தி இருக்கும் நிலையில் அதனை பாரதீய ஜனதா நிராகரித்துள்ளது.

லலித்மோடிக்கு மனிதாபிமான அடிப்படையிலேயே சுஷ்மா சுவராஜ் உதவி செய்திருப்பதாக பாஜக தேசிய தலைவர் அமித்ஷா தெரிவித்துள்ளார். மேலும், குவாத்ரோட்சி, ஆன்டர்சனை அனுப்பியது போன்ற விவகாரம் இல்லை இது. அந்த மாதிரி எந்த தவறும் நடைபெறவில்லை என்று கட்சி முழுமையாக நம்புகிறது. மனித நேய அடிப்படையில் இது நடந்துள்ளது என்றார்.

இந்த விவகாரம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறுகையில்,

பிரிட்டிஷ் துணைத்தூதரிடம் விதிமுறைகளுக்கு உட்பட்டு என்ன செய்ய முடியுமோ அதை செய்து தருமாறு கூறியிருக்கிறார். இதைத் தவிர சுஷ்மா சுவராஜ் வேறு எதையும் செய்யவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# தமிழ்த் தேர்வுநாடிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படும்

## மேல்முறையீட்டு நீதிமன்றத்திடம் உறுதிமொழி

**தகுதியிருந்தும் புறக்கணிக்கப்பட்ட தமிழ் தேர்வு நாடிகளுக்கு ஜுலை முதலாம் திகதிக்கு முன் நியமனங்கள் வழங்கப்படும் என மேல்முறையீட்டு நீதிமன்றத்திடம் உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.**

2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அப்பொழுது இருந்த அரசின் கிழக்கு மாகாண சபை ஆளுநர் மேஜர் மோகன் விஜேவிக்கிரம சிங்கவினால் ஏப்ரல் மாதம் முகாமைத்துவ உத் தியோகத்தரும் அபிவிருத்தி உத்தியோகத்தரும் பணிக்கமர்த்தப்பட்டனர்.

கொள்கை ரீதியாக தேர்வுகளிலே உயர்மதிப் பெண்களை பெற்ற பொழுதும் தமிழர் இப்பதவிகளுக்கு நியமிக்கப்படவில்லை. மாறாக சிங்கள முஸ்லிம் தேர்வு நாடிகளே பணிக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

இது குறித்து தமிழ் தேர்வு நாடிகள் விசாரித்த பொழுது, அடுத்து வரும் 3 வருடங்களுக்கு தமிழர் குறித்த நியமனங்களை பெறப்போவதில்லை என்ற பதிலையே பெற்றனர்.

இந்த நியமனங்களுக்கு எதிராக தமிழ் தேர்வுநாடிகள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலே எழுத்தாணைகள் கோரி இரு வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

நிலைமை இவ்வாறிருக்க கடந்த 2015 ஜனவரியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் விளைவாக புதிய ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டார்.

இவரை பதவியமர்த்துவதில் கடந்த காலத்தில் இடம்பெற்ற புறக்கணிப்புகள் தவறு என்பதை ஏற்றுக் கொண்டதோடு, இதற்கான தகுந்த நடவடிக்கையினை தகுதியுள்ள தமிழ் தேர்வுநாடிகளை பணியமர்த்துவதன் மூலம் எடுக்கவும் நீதிமன்றிற்கு வாக்குறுதி அளித்திருந்தார்.

நேற்று இவ்விரு வழக்குகளும் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மனுதாரர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ம. ஆ. சுமந்திரன் மனுதாரருக்கு நியமனங்கள் வழங்கப்படும் என்ற உறுதமொழியினை ஏற்றுக்கொண்டு, வழக்குகள் இரண்டையும் மீளப் பெற்றுக்கொண்டார்.

இதனடிப்படையில் முறையே 10.02.2014ஆம் திகதியிலிருந்தும் 04.04.2015ஆம் திகதியிலிருந்தும் இந்நியமனம் கொடுப்பதாக கடிதங்கள் ஜுலை முதலாம் திகதிக்கு முன்னதாக வழங்கப்படுவதாக நீதிமன்றிற்கு உறுதிமொழி அளிக்கப்பட்டது.

மோகன் பாலேந்திராவின் பணிப்பின பேரில் சட்டத்தரணிகள் ம. ஆ. சுமந்திரன் மற்றும் ஜுவனிற்றா அருளானந்தம் ஆகியோர் மேற்குறித்த வழக்கில் மனுதாரர் சார்பிலும் ஆளுநர் சார்பில் அர்ஜுன ஒபேசேகரவும் தோன்றினர்.

இவ்வழக்கானது மேன் முறையீட்டு நீதிமன்ற தலைவர் விஜித் மலல்கொட முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. (இ-5)

# செல்ஃபி






















உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர்,
முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாயோ அல்லது வித்தியாசமான பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் எமது செயல்கள் அவற்றை அம்பலப் படுத்திவிடும்.
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அரசியல் துறவறம் பூண மகிந்த குடும்பம் தயார் போலும்

ஒக்ரோபர் மாதம்வரை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேடை ஏறமாட்டார் என்று அவர் தரப்பு திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

சோதிடரின் உத்தரவு என்று கூறிக்கொண்டாலும் சோதிடர் என்பதை பிரித்தால் வரக் கூடிய இடர் காரணமாக மகிந்த அப்படியொரு முடிவை எடுத்திருக்கலாம்.

எதுவாயினும் மகிந்த குடும்பம் ஊழல் குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்பிக்கொள்வதற்கு இரண்டு வழி உண்டு.

அதில் ஒன்று; எதிர்வரும் பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ பிரதம வேட்பாளராகப் போட்டியிட்டு, அதில் வெற்றிபெற்று பிரதமராகுதல்.

19ஆவது திருத்தச்சட்ட மூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் மகிந்த ராஜபக்ஷ பிரதமரானால் அவர் நிச்சயம் தனக்கும் தனது குடும்ப உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு அரணை அமைத்துவிடுவார். அதன் பின்னர் மகிந்த குடும்பத்திற்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படமாட்டா.

ஆனால் இது எந்தளவு தூரம் சாத்தியம் என்பது பற்றி அதிதீவிரமாக ஆராய வேண்டும். ஜனாதிபதித் தேர்தல் போல பொதுத் தேர்தலும் மகிந்தவைக் காலை வாரிவிட்டால் அந்தோகதிதான் இனி மீட்சியில்லை என்றாகிவிடும். இது ஒருமுறை.

இதைவிட இன்னுமொரு வழி இருக்கிறது அதாவது; எதிர்வரும் பொதுத் தேர்தலில் மட்டுமல்ல, இனி மேல் நாங்கள் அரசியலில் இறங்கமாட்டோம். எங்களுக்கு எந்தப்பிரச்சினையும் வராமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றொரு இணக்கப்பாட்டுக்கு மகிந்த குடும்பமும் தற்போதைய ஆட்சியாளர்களும் வருதல்.

அதாவது, ராஜபக்ஷ குடும்பம் அரசியலிலிருந்து கூண்டோடு துறவுபூணுதல் என்ற அடிப்படையில் ஒரு சமரசத்திற்கு வருதல்.

இத்தகையதொரு முடிவு மகிந்த தரப்பையும் நிச்சயம் பாதுகாக்கும். இருந்தும் எதிர்காலத்தில் கிடைக்கக்கூடிய பதவிகளையும் இழக்கத் தயாராகும் போதே இந்தவழிமுறை சாத்தியமாகும்.

எதுவாயினும் சமகால சூழ்நிலைகளைப் பார்க்கும் போது, மகிந்த ராஜபக்ஷ குடும்பம் அரசியலிலிருந்து முற்றுமுழுதாக ஒதுங்குதல் என்பதாக நிலைமை இருக்கும்போல் தெரிகிறது. இதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

- அரசியல் மேடை ஏறி பேசுவதில்லை என்பது மகிந்த ராஜபக்ஷவின் முடிவு.
- அரசியலில் ஈடுபட மாட்டேன் என்கிறார் கோத்தபாய ராஜபக்ஷ
- மகிந்த ராஜபக்ஷவின் மூத்த சகோதரரும் சபாநாயகருமான சமல் ராஜபக்ஷ அரசியலிலிருந்து விரைவில் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இவ்வாறான அறிவித்தல்கள் வெளிவருகையில் பசில் ராஜபக்ஷவிற்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. எது எப்படியோ காலம் தான் எதிர்காலத்தை தீர்மானிக்கப் போகிறது என்பது உறுதி.

இருந்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் குழப்பமான அரசியல்வாதிகள்; பேரினவாதிகள் நின்று நிலைப்பது கடினம்.

ஏனெனில் போருக்குப் பின்பான இலங்கையில் அமைதியும் சமாதானமும் அபிவிருத்தியும் ஏற்பட வேண்டும் என ஒட்டுமொத்த இலங்கை மக்களும் விரும்புகின்றனர்.

ஆயினும் பொது மக்களின் விருப்பத்தை அறியாத அரசியல்வாதிகள் சிலர் இன்னமும் இனவாதத்தினூடாக அரசியல் ஆதாயம் தேடலாம் என நம்புகின்றனர்.

இந்த நம்பிக்கைகள் தவிடுபொடியாக கூடிய வாய்ப்புகளே இந்த நாட்டின் எதிர்கால அரசியலில் உண்டு என்பதை மட்டும் ஆணித்தரமாகச் சொல்ல முடியும்.

# ஓய்வுபெற்ற ஜனாதிபதியைப் போல் சந்திரிகா நடந்து கொள்வதில்லை

## டலஸ் அழகப்பெரும விசனம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் பிரிவுகளை உருவாக்குவதை நிறுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ அழகப்பெரும கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு நாராஹேன்பிட்டி அபயராம விகாரையில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தும் தேவையுள்ளது.

மைத்திரிபால சிறிசேனவின் ஐக்கிய தேசியக் கட்சியுடனான உடன்படிக்கை 100 நாளில் முடிந்துள்ளது. எனினும் மைத்திரி சந்திரிகா உடன படிக்கை 5 ஆண்டுகளுக்கு தொடரும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அரசியலில் இருந்து ஓய்வுபெற்று விட்டார். ஆனால் அரசியலில் ஓய்வு பெற்றவர் போல் அவர் நடந்து கொள்வதில்லை.

ஓய்வுபெற்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவர் மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவிடம் கற்றுக்கொள்ள வேண்டும்எனவும்டலஸ்அழகப்பெரும கூறியுள்ளார். (செ-11)

# பஸ் வண்டிகளின் வேகம் ஜீ.பி.எஸ் மூலம் கண்காணிப்பு

## அதிவேகமாக செல்வோருக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

அதிவேகமாக பயணிக்கும் பஸ் வண்டி களை ஜீ.பி.எஸ் தொழில்நுட்பத்தின் மூலம் கண்காணிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

நாராஹேன்பிட்டி தலைமை அலுவலகத்திலிருந்து சகல பஸ் வண்டிகளும் கண்காணிக்கப்பட்டு அதிவேகமாக செல்லும் சாரதிகளை உடனடியாக தொடர்பு கொண்டு எச்சரிக்கை விடுக்கும் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் இலங்கை போக்குவரதது சபையின் பயணிகள் போக்குவரத்து பிரதி பொதுமுகாமையாளர் ராஜா குண திலக தெரிவிததுள்ளார்.

அறிவுறுத் தலை மீறி தொடர்ந்து தவறிழைக்கும் சாரதிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர்களை பணியிலிருந்து நீக்குவதற்கும் தமக்கு அதிகாரம் உண்டு எனவும் இலங்கை போக்கு வரத்து சபையின் பயணிகள் போக்குவரத்து பிரதி பொதுமுகாமையாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (செ-11)

# இராணுவத்தின் அதிகாரபலம் குறைவடைந்து வருகின்றது

## கலாநிதி அபயதிஸ்ஸ தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு வருவதாகவும் இராணுவத்தின் பலமும் அதிகாரமும் குறைந்து வருகிறது எனவும் கலாநிதி மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கை சிங்களவர்களின் நாடு என்று யார் கூறுகின்றனர் என நீதியமைச்சர் கேள்வி எழுப்புகிறார்.

வடக்கில் போர்க் குற்றவாளிகள் இருப்பதாக வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறுகிறார். வடக்கில் இராணுவத்தினர் ஊடாக போதைப் பொருள் விற்பனை நடைபெறுவதாக அவர் குற்றம் சுமத்துகிறார்.

அதேவேளை விடுதலைப் புலிகள் இருந்த போது தமக்கு தற்போது இருப்பதை விட பாதுகாப்பு இருந்ததாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேசிய கொடியில் மாற்றங்களை ஏற்படுத்தி வைபவங்களின் போது ஏற்றுவதற்காக வேறு கொடி ஒன்றுக்கான அனுமதியை பெறுவதற்காக அந்த யோசனை அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒரு கீதமாக இருந்த தேசிய கீதம் தற்போது இரண்டு கீதங்களாக பாடப்படுகின்றன எனவும் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் கூறியுள்ளார்.

மெதகொட அபயதிஸ்ஸ தேரர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



போலித்தனம் கூடாது, பொய் கூடாது, போக்கிரித்தனம் கூடாது. இதுவே நான் விரும்புவது. நான் எப்போதும் இறைவனையே நம்பியிருக்கிறேன்; பகலின் பிரகாசம் போல் விரிந்து நிற்கின்ந சத்தியத்தையே நம்பியிருக்கின்றேன்.

கவனமாக இருங்கள். உண்மைக்குப் புறம்பான அனைத்தின் விடயத்திலும் எச்சரிக்கையாக இருங்கள். உண்மையை விடாமல் பிடித்துக்கொள்ளுங்கள். நாம் வெற்றி பெறுவோம். அது மெதுவாக இருக்கலாம், ஆனால் வெற்றி நிச்சயம்.

உன் தாகத்தைத் தணித்த பாத்திரத்தைப் பிறருக்கும் கொடு. வாழ்வின் இலட்சியம் உனக்குக் கைகூடட்டும். இது எனது ஆசீர்வாதமாகும்.

தத்துவம் அது இது என்று பொருளற்ற குப்பைகளால் உன் மூளையைக் குழப்பிக்கொள்ளாதே, உனது கொள்கை வெறியால் பிறரைக் குழப்பாதே. நீ செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று. ஸ்ரீராமகிருஷ்ணரைப் பிரசாரம் செய். பக்தியைப் பிரசாரம் செய். வேலை செய்துகொண்டே போவதற்காக உன்னை நான் ஆசீர்வதிக்கின்றேன்.

உலக வரலாறு முழுவதிலும் நாம் காண்பது இதுவே. மாமனிதர்கள் பெரிய தியாகங்களைச் செய்கிறார்கள். மனிதகுலம் அதன் பலனை அனுபவிக்கிறது.

இந்தியாவும் சனாதன தர்மமும் நெடுங்காலமாகத் துயரப்பட்டு வந்துள்ளன. ஆனால் கடவுள் கருணைக்கடல் மீண்டும் ஒருமுறை அவர் தம் குழந்தைகளைத் கைதூக்கிவிட வந்துள்ளார். வீழ்ச்சியுற்றுக் கிடக்கின்ற இந்தியா எழுந்து நிற்பதற்கு மீண்டும் ஒருமுறை வாய்ப்பு தரப்பட்டுள்ளது

உன்னில் ஊக்கத் தீ பற்றட்டும். பிறகு அதை எல்லா இடத்திலும் பரப்பு. வேலை செய், வேலை செய். வழிநடத்திச் செல்லும்போது பணியாளனாக இரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரீபியனுக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றியது ஆஸி

அவுஸ்திரேலியா - மேற்கிந்திய கிரிக்கெட் அணிகள் இடையிலான 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கிங்ஸ்டனில் நடந்தது. இதில் முதல் இன்னிங்சில் அவுஸ்திரேலியா 399 ஓட்டங்களும், மேற்கிந்திய தீவு 220ஓட்டங்களும் எடுத்தன. 179ஓட்டங்கள் முன்னிலையுடன் 3 ஆவது நாளில விளையாடிய அவுஸ்திரேலிய அணி 2 ஆவது இன்னிங்சில் 65 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 212 ஓட்டங்கள் சேர்த்து 'டிக்ளேர்' செய்தது. ஷான் மார்ஷ் (69 ஓட்டங்கள), டேவிட் வோர்னர் (62 ஓட்டங்கள்), ஸ்டீவன் சுமித் (54 ஓட்டங்கள்) ஆகியோர் அரைசதம் அடித்தனர்.



இதன் மூலம் மேற்கிந்திய தீவு அணிக்கு 392 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இமாலய இலக்கை நோக்கி 2 ஆவது இன்னிங்சை தொடங்கிய மேற்கிந்திய தீவு அணி 3 ஆம் நாள் ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுக்கு 16 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

இந்த நிலையில் நேற்று 4 ஆவது நாள் ஆட்டத்தை தொடர்ந்த மேற்கிந்திய தீவு அணி அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 114 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து படுதோல்வி அடைந்தது.

துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டத்தால் தான் மேற்கிந்திய தவுகள் அணி தோல்வியை தழுவியது.

அவுஸ்திரேலியாவின் சிறப்பான பந்துவீச்சால், ஒருவர் கூட நிலைத்து ஆட முடியாமல் திணறினர். அணியில் அதிகபட்சமாக ராம் டின் மட்டும் 29 ஓட்டங்கள் எடுத்தார்.

அபாரமாக பந்து வீசிய ஸ்டார்க் 3 விக்கெட்டுகளையும், ஹாசல்வுட், லியான், ஜோன்சன் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

ஏற்கனவே முதல் டெஸ்ட்டில் வென்ற அவுஸ்திரேலியா, இந்த வெற்றியின் மூலம் தொடரை 2-0 என்று தட்டிச்சென்றது.

ஆட்ட நாயகனாக ஸ்டீவன் சுமித்தும், தொடர் நாயகனாக ஹாசல்வுட்டும் தேர்வு செய்யப்பட்டனர். (க)

## ஜேபிஎல் இருபது-20 தொடருக்கு திருநெல்வேலி வி.கழகம் தகுதி

யாழ்ப்பாணம் பிறீமியர் லீக் எனப்படும் ஜேபிஎல் இருபது 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் தகுதி காண் போட்டியில் திருநெல் வேலி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று ஜேபிஎல் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

யாழ்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற தகுதிகாண் சுற்றில் சுழிபுரம் விக்டோரியன்ஸ் அணியும் திருநெல்வேலி விளையாட்டுக்கழக அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது. என்.லவகாந் அதிரடியாக ஆடி 120 ஓட்டங்களையும், எஸ்.சுரேந்திரன் 36, என். சிவராஜ் 27 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் விக்ரோறியன்ஸ் அணி சார்பாக என்.ஜங்கரன், எம்.சர்வானந்த ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

246 என்ற பாரிய வெற்றியிலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய விக்ரோறியன்ஸ் அணி, 18.2 ஓவர்களில் 125 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தனர். என்.கணேஷ் 68, எஸ்.பிரணவன் 17 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் திருநெல்வேலி அணி சார்பாக ஆர்.கோகுலன் 3, என்.பிரபு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (க)

## வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதித் தொடரில் கொற்றாவத்தை அ.த.க.சம்பியன்



வவுனியாவில் நடைபெற்ற வடமாகாண பாடசாலைக்கிடையிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் சம்பியனாகியது கொற்றாவத்தை அ.த.க. பாடசாலை அணி. வெற்றிவாகை சூடிய அணியினர் ஊர் திரும்பிய போது பொலிகண்டி பாரதி சனசமூக நிலையத்தினரால் பெருமெடுப்பில் வரவேற்பு வைபவம் நடத்தப்பட்டது. பொலிகண்டி வீரபத்திரர் ஆலயத்திலிருந்து பாடசாலை வரையிலும் ஊர் மக்கள் அனைவரும் திரண்டு நின்று வரவேற்றனர்.

பொலிகண்டி தெற்கு கிராம சேவகர் பாலலோசினி மற்றும் நிலைய உறுப்பினர்கள், ஆசிரியர்களால் மாலை அணிவித்து பட்டா சுச் சத்தம் மின்னி முழங்கிட பாடசாலையின் பாண்ட் வாத்திய அணியினரின் இசை முழங்க இரு மருங்கிலிருந்தும் மக்கள் பூக்களைச் சொரிய ஊர்வலமாய் அழைத்து வரப் பட்டார்கள். பின்னர் பாடசாலையில்வரவேற்புவிழாவும் உணவு பரிமாறலும் இடம்பெற்று இனிதாய் நிறை வேறியது. (க-60)

## பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கி சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சம்பியன்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட 19 வயதுப்பிரிவு இருபாலாருக்குமான ஹொக்கி தொடரில் ஆண்கள் பிரிவில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியன் ஆகியது.

சுந்தசனிக்கிழமைவட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிய எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதிக் கொண்டது.



ஆட்டம் ஆரம்பமாகி நான்காவது நிமிடத்திலேயே சென்.ஜோன்ஸின் ஆதிக்கத்தை ஆரம்பித்து வைத்தார் மதுரங்கன். அதே விறுவிறுப்புடன் தொடர்ந்து இரண்டாவது கோலுக்காக முனைப்புக்காட்டியது சென்.ஜோன்ஸ். முயற்சிக்குக் கிடைத்த பலனாக ஆட்டத்தின் 10 ஆவது நிமிடத்தில் சென்.ஜோன்ஸ் சார்பாக இரண்டாவது கோல் பதிவானது. பழி தீர்க்க வேண்டும் என்று யூனியன் படாதபாடுபட்ட போதிலும் எதுவும் பயனளிக்கவில்லை. மாறாக சென்.ஜோன்ஸ் சார்பாகவே கோல் கணக்கு அதிகரித்தது. 20 ஆவது நிமிடத்தில் எழிலன் தனது அணிக்கான 3 ஆவது கோலினையும் அடிக்க ஆட்டத்தின் முதல் பாதியில் சென்.ஜோன்ஸ் 3:0 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது.

உறுதியான வெற்றியுடன் சென்.ஜோன்ஸும் போராட்டத்தை விடுவதில்லை என யூனியனும் களமிறங்க ஆரம்பமானது ஆட்டத்தின் இரண்டாவது பாதி. இரண்டாவது பாதியில் யூனியனுக்குச் சாதகமாக சில வாய்ப்புக்கள் அமைந்த போதிலும் தமது கோல் கணக்கை தொடக்க தடுமாற்றம் காட்டினார்கள் யூனியன் வீரர்கள். எழிலன் மீண்டும் ஒரு கோலை விளாச சென்.ஜோன்ஸின் நான்காவது கோலும் பதிவானது. இதே நிலைமை நீடிக்க முடிவில் சென்.ஜோன்ஸ் 4:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கியது. (க)

## அனைத்து விதமான போட்டிகளிலும் மிரட்டுவேன்; கிறிஸ் கெய்ல்

நான் அனைத்து விதமான போட்டிகளிலும் அதிரடி காட்டுவேன் என்று மேற்கிந்திய தீவுகளின் "மிரட்டல் மன்னன்" கிறிஸ் கெய்ல் தெரிவித்துள்ளார்.

ஐபிஎல் போட்டிகளில் அதிரடி காட்டிய மேற்கிந்திய தீவுகளின் வீரர் கிறிஸ் கெய்ல், தற்போது இங்கிலாந்தில் நடக்கும் இருபது-20 தொடரிலும் பட்டையை கிளப்புகிறார். இதனால் கெய்ல் இருபது-20 போட்டிகளுக்கு ஏற்ற வீரர் என்று அழைக்கப்படுகிறார்.

இது தொடர்பாக இணையத்தளம் ஒன்றிற்கு பேட்டியளித்த கிறிஸ் கெய்ல், நான் இருபது-20 போட்டிகளில் மட்டுமல்ல ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளிலும் அதிரடி காட்டுவேன் என்று தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் கூறுகையில், நான் டெஸ்ட் போட்டியில் இரண்டு முச்சதங்கள் அடித்துள்ளேன். 21 ஒருநாள் போட்டிச் சதங்களும் கூட அடித்துள்ளேன். அதனால், சகல வகை கிரிக்கெட்டுக்கும் ஏற்ற வீரர் நான்.

இருபது-20 கிரிக்கெட்டால் பல புதிய ரசிகர்கள் இந்த விளையாட்டுக்குக் கிடைத்திருக்கிறார்கள். ஆகவே இருபது-20 கிரிக்கெட்டையும் நாம் தொடரவேண்டும்.

என்னை அணியில் சேர்க்க ஆர்வமாக உள்ளார்களா என்று தெரியவில்லை. ஒரு நல்ல முடிவு எட்டப்படும் என எதிர்பார்க்கிறேன்.

சொந்த ஊருக்குத் திரும்பிய பிறகு பயிற்சியாளர் மற்றும் கிரிக்கெட் வாரியத்துடன் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவேன் என்று கூறியுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியா...

மாணவியின் தாய் சாட்சியம

சிவலோகநாதன் சரஸ்வதி ஆகிய எனக்கு மூன்று பிள்ளைகள் உள்ளன. இரண்டு பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளையும் இருக்கின்றார்கள். முதலாவது பெண் பிள்ளை கிரிசாந்தி, இரண்டாவது ஆண்பிள்ளை நிசாந்தன, மூன்றாவது பெண்பிள்ளை வித்தியா. புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் உயர்தர வகுப்பில் படித்து கொண்டிருந்த எனது மகள் வித்தியாவை கடைசயாக 2015.05.13 அன்று காலை 7.30 மணியளவில் பாடசாலை செல்லும் போது கண்டிருந்தேன்.

அன்று காலை துவிச்சக்கர வண்டியில் பாடசாலை சென்றவர் மூன்று மணியாகியும் வீடு திரும்பவில்லை. எனது மகளை தேடி முதலில் எனது மகன் நிசாந்தன் பாடசாலைக்கு சென்றிருந்தார். அதன் பின்னர் நானும் சென்று தேடிப்பார்த்தேன். வித்தியாவை தேடி பாடசாலைக்கு சென்ற மகன் அங்கு விசாரித்தார். அன்றையதினம் வித்தியா பாடசாலைக்கு வரவில்லை என கூறியிருந்தார்கள். பாடசாலைக்கு மகள் வரவில்லை என கூறியதனை அடுத்து பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் வித்தியாவை எம்மோடு சேர்ந்து தேடியிருந்தனர்.

எங்கு தேடியும் மகளை காணாததனால் குறிகட்டுவான் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வதற்கு நானும் மகனும் சென்றிருந்தோம். அங்கு, இவ்வாறான முறைப்பாடுகள் எடுக்க முடியாது ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்திற்கு செல்லுமாறு கூறியதனை அடுத்து ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்வதற்காக சென்றிருந்தோம். முறைபபாடு செயது விட்டு அங்கிருந்து நாம் வீடு திரும்பும் போது இரவு எட்டு மணி இருக்கும்.

மறுநாள் காலை 5.30 மணியளவில் வித்தியாவை தேடி நானும் எனது மகனும் அயல் வீட்டார் சிலரும் சென்றோம். ஆலடி வீதியில் முச்சக்கர வண்டி சாரதி சுதன் என்பவரை விசாரித்திருந்தோம். இதற்கிடையில் குறித்த வீதி முழுவதும் தேடி பார்த்தோம். வீதியின மறுபக்கம் எனது மகன் நிசாந்தனும், இலங்கன் என்பவரும் தேடிச் சென்றனர். மகன் தேடிச் சென்ற திசையில் இருந்து சிறிது நேரத்தில் அம்மா..! என (குளறி அழுது) சத்தம் கேட்டது. நாம் சத்தம் கேட்ட திசை நோக்கி ஓடினோம்.

அங்கு எனது பிள்ளையின் பாடசாலை உடுப்பை கண்டதும் நான் அவ்விடத்திலேயே மயங்கி வீழ்ந்து விட்டேன். மகளின் அருகே என்னால் செல்ல முடியவில்லை. பின்பு எனக்கு மகள் இறந்து விட்டதாக கூறியிருந்தார்கள். நானும் எனது மகனும் மகளின் அந்த நிலையை பார்த்ததும். அதனை சொல்லும் நிலையில் இல்லை. அங்கு வந்தவர்கள் பொலிசாருக்கு முறைப்பாடு செய்திருந்தனர். பின்பு 15.05.2015 அன்று பொலிசாருக்கு வாக்குமூலம் ஒன்றினையும் வழங்கியிருந்தேன். சம்பவ இடத்திற்கு வந்திருந்த பொலிசாரிடம் தகவல்களை வழங்கியிருந்ததோடு. நீதவானிடமும் இறந்தது எனது மகள் தான் என கூறியிருந்ததாக வித்தியாவின் தாயாரான திருமதி சிவலோகநாதன் சரஸ்வதி சாட்சியம் வழங்கியிருந்தார்.

**மாணவியின் சகோதரன் சாட்சியம்**

பசுபதிப்பிள்ளை சிவலோகநாதன எனது அப்பா. சிவலோகநாதன் சரஸ்வதி எனது அம்மா, நான் எனது குடும்பத்துடன் புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தில் வசித்து வருகின்றேன். நான் எனது குடும்பத்தில் இரண்டாவது பிள்ளை. நசாந்தி எனது அக்கா வித்தியா எனது தங்கை அக்கா யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக பிரிவில் கல்வி கற்று வருகின்றார், தங்கை வித்தியா புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் உயர்தர பிரிவில் கல்வி கற்று வந்தார்.

நான் எனது தங்கையை 13.05.2015 அன்று காலை தான் கடைசியாக கண்டிருந்தேன். அன்றையதினம் காலை ஆறு மணியளவில் அருகில் உள்ள இடமொன்றில் வேலி அடைக்கும் தற்காலிக வேலை ஒன்றிற்கு சென்றிருந்தேன். காலை பத்து மணியளவில் வேலையை விட்டுவிட்டு வீட்டுக்கு வந்திருந்தேன். வித்தியா பிற்பகல் மூன்று மணியளவில் பாடசாலையல் இருந்து வீடு திரும்புவது வழமை. ஆனால் அன்றையதினம் மூன்று மணியாகியும் வீடு திரும்பவில்லை. விசேட வகுப்பு ஏதும் போடப்பட்டுள்ளதா? என அறிவதற்கு வித்தியாவின் பாடசாலைக்கு சென்றிருந்தேன்.

நான் செல்லும் போது பாடசாலை மூடப்பட்டிருந்த காரணத்தினால் எனது வீட்டுக்கு திரும்பி வந்து மோட்டார் சைககிளை எடுத்துக்கொண்டு வித்தியாவின் சக மாணவியான லக்சனா என்பவரிடம் சென்று அவரிடம் கேட்டபோது வித்தியா அன்றையதினம் பாடசாலைக்கு வரவில்லை என கூறியிருந்தார். பின்பு நானும் அம்மாவும் வித்தியாவை காணவில்லை என முறைப்பாடு செய்வதற்காக குறிகட்டுவான் பொலிஸ் நிலையம் சென்றிருந்தோம். இதற்கு முன்னர் வேறொரு மாணவி மூலம் பாடசாலை அதிபரிடம் தொலைபேசி மூலம் வித்தியா தொடர்பில் கேட்டிருந்தோம்.

**முறைப்பாட்டை ஏற்கமறுத்த பொலிசார**

மாலை 5.30 மணியளவில் குறிகட்டுவான் பொலிஸ் நிலையம் சென்ற போது மழை இருட்டாக காணப்பட்டது. நேரத்தை சரியாக கூறமுடியாது உள்ளது. குறிகட்டுவான் பொலிஸ் நிலையம் சென்ற போது தாம் இவ்வாறான முறைப்பாட்டை எடுப்பதில்லை என்றும் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையம் செல்லுமாறும் கூறியருந்தனர். அங்கு செல்லும்போது இரவு நேரமாகி கடும் இருட்டாக இருந்தது.

இந்த நேரத்தில் தாம் முறைப்பாடு எடுப்பதில்லை எனவும் காலை வருமாறும் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் இருந்த பொலிசார் எம்மிடம் கூறியிருந்தனர். யாருடனும் செனறிருப்பார் காலை வந்துவிடுவார். என எம்மிடம் பொலிசார் கூறியிருந்தனர். எனினும் எமது முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தியத்தை அடுத்து முறைப்பாட்டை ஏற்றுக்கொணடனர். முறைப்பாடு செய்த பின்பு வீடு சென்ற நாம் மறுநாள் காலை வித்தியாவை தேடி நானும் அம்மாவும் சென்றிருந்தோம்.

**வித்தியாவை கண்டுபிடித்த நாய்**

ஆலடி வீதி வழியாக நானும் என்னுடன் வந்தவர்கள் மற்றும் எனது அம்மா ஆகியோருடன் தனித்தனியாக தேடி வந்தோம். இவ்வாறு தேடி வந்த போது எமது வீட்டு வளர்ப்பு நாயும் உடன் வந்து கொண்டிருந்தது. குறித்த இடத்திற்கு அருகில் செல்ல செல்ல நாயின் வேகமும் அதிகரித்து சென்றது. நான் நாயினை பின்தொடர்ந்து சென்றபோது நாய் ஒரு விதமான ஒலி எழுப்பியது, நாய் நின்ற இடத்திற்கு சென்ற போது வித்தியா அங்கு கட்டப்பட்ட நிலையில் இருந்தார். (மன்றில் மயங்கி விழுந்த சகோதரன்) இவ்வாறு சாட்சியம் அளித்து கொண்டிருந்த வித்தியாவின் சகோதரன் நிசாந்தன் திடீரென மன்றில் முற்பகல் 11.45 மனியளவில் அசாதாரண நிலைக்கு சென்றமையால் சிறிது நேரம் சாட்சியம் வழங்குவது தடைப்பட்டது. தொடர்ந்து நீதவானின் அறிவுறுத்தலுக்கு அமைய அவர் நாற்காலியில் அமர வைக்கப்பட்டு சாட்சியம் அளிபபது தொடர்ந்தது.

கைகள், கால்கள் இரண்டும் வெள்ளைத்துணியால் கட்டப்பட்ட நிலையில் உடைகள் விலகிய நிலையில் தங்கச்சியின் உடல் காணப்பட்டது. அருகில் குடை, பாடசாலை பொருடகள் என்பன காணப்பட்டிருந்தன. பின்பு சிறிது நேரத்திற்கு பின்னர் சம்பவ இடத்திற்கு பொலிசார் வந்திருந்தனர். வசாரணையின் பின்னர் உடல் யாழ. போதனா வைத்திய சாலைக்கு எடுத்து செல்லப்பட்டு மறுநாள் அடக்கம் செய்யப்பட்டது. என வித்தியாவின் சகோதரன் தனது சாட்சியத்தில் கூறியிருந்தார.

**தனியார் பேருந்து நடத்துனர் சாட்சியம்**

சண்முகலிங்கம் கார்த்திக் (வயது 28) ஆகிய எனக்கு வித்தியாவை சிறு வயதிலிருந்தே தெரியும். வித்தியாவை கடைசியாக சம்பவ இடத்தில் வைத்து தான் பார்த்தேன். வித்தியா காணமல் போனதன் பிறகு அவரினை நானும் அவருடைய அண்ணனுடன் சென்று தேடி பார்த்தேன் என்றவாறாக வித்தியாவை கடைசியாக கண்டது எப்போது, பின்னர் என்ன நடந்தது என பது குறித்து சண்முகலிங்கம் கார்ததிக் சாட்சியமளித்திருந்தார்.

**ஊர்காவற்துறை உதவிப்பொலிஸ் பரிசோதகர் சாட்சியம்**

2015-03.17 ஆம் திகதியன்று ஊரகாவற்துறை பொலிஸ்நிலையத்திற்கு கடமைக்கு வந்தேன். இந்த வழக்கு தொடர்பில் 2015.05.15 அன்று விசாரணை மேற்கொண்டிருந்தேன். 2015.05.14 அன்று காலை 7.30 மணியளவில் பொலிஸ் திணைக்களத்தின் 119 அவசர முறைப்பாட்டு தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பு வந்தது. அதில் புங்குடுதீவு பிரதே சத்தில் பாடசாலை மாணவியொருவர் வன்புணர்விற்குப்படுத்தப்பட்டு கொலை செய்யப்படடதாக முறைப்பாடு ஒன்று கிடைக்கப்பெற்றது.

அதனை அடுத்து ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ பரிசோதகர் பெரேரா என்பவருடன் நானும், பொலிஸ் குழு ஒன்றும் சம்பவ இடத்திற்கு காலை 8 மணியளவில் சென்ருந்தோம். குற்றம் நடைபெற்ற இடம் வேலணை வீதி வழியாக 09 கிலோ மீற்ரும், நயினாதீவு செல்லும் வீதி வழியாக 10 கிலோ மீற்றர் தூரமாக இருந்தது. புங்குடுதீவு ஆலடி மந்தியடியிலிருந்து இடது புறமாக இரண்டரை கிலோமீற்றர் தூரத்திறகு சென்று வல்லன் கிராமத்திற்கு செல்லும் இடத்தில் 500 மீற்றர் தூரத்தில் பாதையின் இடது பக்கத்தில் மாணவியொருவர் பற்றைகள் நிறைந்த இடத்தில் கைகள் கட்டப்பட்ட நிலையில் சடலமாக காணப்பட்டார்.

அப்போது கடும் மழை பெய்து காணப்பட்டிருந்தது. அந்த நேரம் அங்கு ஜே/25 கிராம சேவகரும் வந்திருந்தார். இதன் போது அங்கு சி.சரஸ்வதி (வித்தியாவின் தாய்) சி.நிசாந்தன் (வித்தியாவின் சகோதரர்) ஆகியோரும் நினறிருந்தனர். எம்முடன் வந்திருந்த நடராஜா எனும் பொலிஸ் சாயன்ட் உதவியுடன் தமிழ் மொழி மூலம் மூவரிடமும் கதைத்தோம். இறந்தவர் சிவலோகநாதன் வித்தியா என்ற பாடசாலை மாணவி என கிராம சேவகர் மூலம் அறிந்து கொண்டோம்.

சடலத்தை பாதுகாக்கும் பொருட்டு விசாரணைகளை ஆரம்பித்திருந்தோம். அப்போது மாணவியின் வலது காலில் வெள்ளை நிற சப்பாத்து ஒன்று காணப்பட்டது. அருகில் துவிச்சக்கர வண்டியொன்றும் காணப்பட்டது. ரோஸ் நிறமுடைய குடை ஒன்றும் காணப்பட்டது. உடல் மேற்பக்கமாக பார்க்கும் வகையில் கட்டப்பட்டிருந்தது. கைகளுடன் தலை முடியின ஒரு பகுதியும் சேர்த்து கட்டப்படடிருந்து. இடது காதில் இரத்தம, நீர் வடிந்து கொண்டிருந்தது. பாடசாலை கழுத்து படியினால் (ரை) கழுத்து மரத்தோடு கட்டப்பட்டிருந்து. வாயில் ஏதோ ஒன்று திணிக்கப்பட்டிருந்தது. சீருடையினால் முகப்பகுதி மூடப்பட்டிருந்தது. என்றவாறாக வித்தியாவின் உடல் எவ்வாறு சம்பவ இடத்தில் காணப்பட்டது தொடர்பில் சாட்சியம் அளித்ததை தொடர்ந்து, வாக்கு மூலங்கள் பதியப்பட்டமை தொடர்பிலும் சாட்சியம் அளித்தார்.

சாட்சியமளிப்பு முடிவில் வாயில் திணிக்கப்பட்டிருந்த ஒரு ஆடை மற்றும் உப்பாவாடை, பாடசாலை சீருடை என்பனவற்றை ஊர்காவற்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர். சான்று பொருட்களாக மன்றில் ஒப்படைத்திருந்தார்.

**சட்ட வைத்திய அதிகாரியின் சாட்சியம்**

எஸ்.மயூரன் ஆகிய நான் யாழ். போதனா வைத்திய சாலையில் கடந்த மே மாதம் எனது கடமையில் சேர்ந்தேன். வித்தியா கொலை செய்யப்பட்டமை தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வந்தேன். உலர்ந்த குருதி மாதிரி, கழுத்து பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட சீமெந்து, கண் பகுதியில் காணப்பட்ட திரவம், உட்பட நர்ன்கு திரவ மாதிரிகளை பெற்றதாக கூறி மன்றில் அவற்றை ஒப்படைத்தார். மேலும் கொலை செய்யப்பட்ட மாணவியின் இரத்த மாதிரி, சந்தேக நபர்கள் ஒன்பது பேரின் இரத்த மாதிரிகள் என்பவற்றையும் மன்றில் சமர்ப்பித்தார்.

**பிரதான பொலிஸ் பரிசோதகர் சாட்சியம்**

டபிள்யூ பி பெரேரா ஆகிய நான் தறபோது மன்னாரில் பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வருகினறேன். இதற்கு முன்னர் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடைமையாற்றி வந்தேன். முதல் மூன்று சந்தேக நபர்களான சகோதரர்களை இக்கொலையின் சந்தேக நபர்களாக கைது செய்திருந்தேன்.

கைது செய்த பின்னர் அவர்களது வீட்டினை சோதனையிட்ட போது இருவரின் மேல்சட்டை (சேட்), பணியன் (ரிசேர்ட்) ஆகியவற்றில் இரத்தக்கறை காணப்பட்டிருந்தது. மற்றொருவரின் இடுப்பின் பின்புறத்தல் இரத்தக்கறை காணப்பட்டிருந்தது. என சாட்சியம் அளித்து அச்சான்று பொருட்களினையும் மன்றில் கையளித்திருந்தார்.

**குற்றப்புலனாய்வு துறை அதிகாரி சாட்சியம்**

ஏ.பி.என.நிசாந்த சில்வா ஆகிய தான் 18 வருடங்களாக குற்றப்புலனாய்வு துறை அதிகாரியாக கடமையாற்றி வருவதாகவும் விசேடமாக கூட்டுககொலை தொடர்பில் புலனாய்வு செய்து வருவதாக கூறி குறித்த வழக்கில் ஊர்காவற்துறை பொலிசார், சட்டவைத்திய அதிகாரிகளால் முன்வைக்கப்பட்ட சான்று பொருட்களை அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறும். நீதிமன்றில் கேட்டுக்கொண்டார்.

சந்தேக நபர்களின் இரத்த மாதிரிகளையும் அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்திற்கு மரபணு பரிசோதனைக்கு மன்று அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

குறித்த வழக்கில் நேற்றையதினம் ஏழு பேரின சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் நீதவான் சந்தேக நபர்களிடம் ஏதும் கூறவுள்ளதா? என கேட்டிருந்தார். அதிலொருவர் சம்பவம் நடைபெற்ற போது தான் கடைக்கு சென்றதாக கூறினார்.

அது விசாரணையின் போது கூறபபட வேண்டியது என தெரிவித்த நீதவான் நீங்கள் விரும்பினால் சட்டத்தரணிகளை வைத்து வாதாட முடியும் என கூறினார். அதற்கு எமக்காக வாதிடுவதற்கு சட்டத்தரணிகள் யாரும் வருகின்றனர் இல்லை என சந்தேக நபர்கள் கூற சட்டத்தரணி உங்களுக்காக ஆஜராகுவதை யாருமதடுத்தால் அதனை மன்றில் தெரியப்படுத்துமாறும் அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் நீதவான் கூறினார்.

**நீதவான் கட்டளை**

தொடர்ந்து நீதவான், குறித்த சந்தேக நபர்களை பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு வசாரணை செய்வதற்கு மன்று அனுமதி அளிக்கின்றது. சந்தேக நபர்களுடன் தொடர்புடைய அனைதது வங்கி கணக்குகளினையும் விசாரணை செய்ய மன்று கட்டளை இடுகின்றது. என கட்டளை பிறப்பித்தார்.

சுமார் நான்கு மணி நேரமாக நடைபெற்ற இவ்வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராஜா அனுசரணையில் சட்டத்தரணிகளான சுகாஸ், விஜயராணி, அம்பிகா, ஜனகன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். குறித்த வழக்கு மீண்டும் அடுத்த மாதம் பதின் மூன்றாம் திகதி எடுத்துக்கொள்ளப் படும். (செ-4)

# மாணவி...

விசாரணை செய்வதற்கு நீதவான் அனுமதியளித்துள்ளார்.

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்பு மாணவியொருவர் கடந்த மாதம் 13 ஆம் திகதியன்று புங்குடுதீவு ஆலடிக்கு அருகாமையில் வைத்து கூட்டு வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டு கொடூரமான முறையில் கொல்லப்பட்டிருந்தார்.

இக்கொலையின் சந்தேக நபர்களாக ஒன்பது பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில் இரண்டாவது தடவையாக ஊர்காவற்துறை நீதிமன்றில் நேற்றையதினம் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

குறித்த வழக்கில் நேற்றையதினம் ஏழு பேரின் சாட்சியங்கள் நீதிமன்றில் பதியப்பட்டிருந்திருந்தன. அச்சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் குறித்த வழக்கு தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல் குறித்து கவனத்தில் எடுக்கப்பட்டது.

குறித்த கொலை சந்தேக நபர்களை பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணை செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் ஜனாதிபதி தனது அறிவுறுத்தலை மன்றுக்கு வழங்கியிருந்தார்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தல் தொடர்பில் கவனம் செலுத்திய மன்று குறித்த கொலை இன நல்லிணக்கத்தை சீர்குலைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதா? வேண்டுமென்றே வன்முறையை கட்டவிழ்த்து விடப்படுவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதா? போன்ற பல கோணங்களில் விசாரிக்கப்பட வேண்டியிருப்பதனால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்கின் ஒன்பது சந்தேக நபர்களினையும் முப்பது நாட்களுக்கு தடுத்து வைத்து குற்றப்புலனாய்வு அதிகாரியின் முன்னிலையில் விசாரணை செய்வதற்கு மனறு அனுமதியளிப்பதாக நீதவான கட்டளையிட்டார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ மேற்கொள்ளப்படும் விசாரணையை அடுத்து குறித்த விசாரணை அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்வு துறையினருக்கு உத்தரவிட்ட நீதவான் வழக்கினை அடுத்த மாதம் (யூலை) பதின் மூன்றாம் திகதி வரை ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி குமார் குணரட்ணம் ஆஜராகியிருந்தார். (செ-4)

# மாகாண...

கொள்கையை வகுங்கள். கொள்கைகளை வகுத்துவிட்டு கலந்தாலோசிக்க முற்படாதீர்கள். வடக்கு மாகாணத்திற்கு ஏனைய மாகாணங்களை விட அதிக நிதி உதவிகளை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இப்பயிற்சிப்பட்டறையின் காலை அமர்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் கரு ஜயசூரிய ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை...

கள் பேரவையின் அமர்வில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் மனித உரிமை விடயங்களில் ஒத்துழைப்பை வழங்குவதற்கான அமர்வாக இது அமைந்துள்ளதாகவும் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

பொறுப்புக்கூறல் விடயங்களில் இலங்கையின் புதிய அரசாங்கம், நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். அத்துடன் நியாயமான கலந்துரையாடல்களுக்கு வழிவகுக்கப்பட வேண்டும்.

சர்வதேச பொறிமுறைக்கு அல்லது பெரும்பான்மையான சர்வதேச நீதிபதிகள் அந்த பொறிமுறையில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று கண்காணிப்பகம் கோரியுள்ளது.

இந்தநிலையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளருக்கு வழங்கிய உறுதிமொழியை காப்பாற்றும் முகமாக இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறல் விடயங்களில் ஒத்துழைப்பை வழஙக வேண்டும் என்றும் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கை அரசாங்கம் காணமல் போனோர் மற்றும் காணி விடயங்கள்பற்றி உரிய [illegible] (செ-4)




# மரண அறிவித்தல்

**திருமதி**

**அருளம்பலம் தவமணிதேவி**

சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அ.தவமணிதேவி 15.06.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிமணியம் - மனோன்மணி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் - சேதுநாக ரத்தினம் தம்பதிகளின் மருமகளும், அருளம்பலத்தின் மனைவி யும், சத்தியதேவி, சுசீலாதேவி (மல்லாகம் நீதிமன்றம்), சந்திரமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், தர்மலிங்கத்தின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2015) செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

(767)

பப்பன்கடை ஒழுங்கை, சிறுப்பிட்டி.

தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சமல் ராஜபக்ஷ...

யான தகவல்கள் தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில், அரசியலில் இருந்து நான் விரைவில் ஓய்வுபெறுவதற்கு பெரும்பாலும் வாய்ப்புகள் உள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக நான் நியமிக்கப்படவுள்ளதாக வெளியாகும் செய்திகளில் அடிப்படை இல்லை. எனக்கு அத்தகைய அபிலாசைகளும் இல்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

1989ஆம் ஆண்டு முதல் முறையாக அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட சமல் ராஜபக்ஷ கடந்த 26 ஆண்டுகளாக தொடர்ந்து நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## தாய், சகோதரன்...

றுக்கொண்டிருந்த போது வழக்கில் சாட்சியமளித்து முடிவுற்ற சிறிது நேரத்தில் மாணவியின் தாயார் மற்றும் சகோதரர் ஆகிய இருவரும் மன்றில் மயங்கி விழுந்தனர்.

இந்த படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 9 சந்தேகநபர்களும் நேற்றைய வழக்கு விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், வழக்கு விசாரணை இடம்பெற்றது.

இதன் போது, மாணவியின் தாயார் மன்றில் சாட்சியமளித்தார். அவர் சாட்சியமளித்துக் கொண்டிருந்தபோது மன்றில் திடீரென மயங்கி விழுந்தார். இதனையடுத்து அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டு, மன்றிலுள்ள கதிரையில் அமரவைக்கப்பட்டார்.

தொடர்ந்து சகோதரன் சாட்சியமளித்து முடித்த பின்னர் அவரும் மயங்கி விழுந்தார். அவர் உடனடியாக ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின் தொடர்ந்து வழக்கு விசாரணை நீதிமன்றத்தில நடைபெற்றது. (செ-4)

## தெற்கு...

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில நேறறு திங்கட்கிழமை பிரசன்னமாகியிருந்தனர்.

மாணவி கொலை வழக்குத் தொடர்பான விசாரணைகள் நேற்று நீதிமன்றில் நடைபெறுவதை மன்றில் அமர்ந் திருந்து இந்த 3 சட்டத்தரணிகளும் பார்வையிட்டனர்.

இந்தச் சட்டத்தரணிகளின் வருகையால் குழப்பமடைந்த வித்தியா சார்பாக ஆஜராகிய சட்டத்தரணி கே.வி.தவராஜா, வித்தியாவுக்கு ஆதரவாக அல்லது சந்தேகநபர்களுக்கு ஆதரவாக ஆஜராவதற்காக வந்துள்ளீர்கள் என அவர்களிடம் வினாவியுள்ளார். இதற்கு பதிலளித்த அம்மூன்று சட்டத்தரணிகளும், யாருக்காகவும் ஆஜராக வரவில்லையெனவும் மன்றில் வழக்கு நடைபெறுவதைப் பார்வையிடுவதற்காக வருகை தந்ததாக தெரிவித்துள்ளனர். (செ-4)

## பசில் ராஜபக்ஷ...

யில் செல்ல அனுமதிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை, பசல் ராஜபக்ஷவுக்கு பிணை வழங்குபவர்கள் அரசாங்க பணியாளர்களாகவும், நெருங்கிய உறவினர்களாகவும் இருக்க வேண்டும் என்றும் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவருடன் கைது செய்யப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் நிஹால் ஜயதிலக மற்றும் திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஆர்.ஏ.கே. ரணவக்க மற்றும் திவிநெகும வங்கியின் முன்னாள் தலைவர் பி.பீ. திலகசிறி ஆகியோரும் நிபந்தனை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் பசில் ராஜபக்ஷ கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே. (செ-11)


### புவியியல் கருத்தரங்கு தொடர்

P.S.குமரன் B.A(Hons) Geo. spl, Dip in edu.

ஆரம்பம்:- 21.06.2015 : நேரம் பி.ப 1.00 மணி

◆ தேர்ச்சிகளின் மதீப்பீட்டு உள்ளடக்கம் ◆ பிரதான விடயங்கள்
◆ அண்மைக்கால விடயங்கள்

பெயரிடு, குறித்துப் பெயரிடுக, விளக்குக, விபரிக்குக, தருக, ஆராய்க, அமைக்குக, ஒப்பிடுக, வரைக, கணிப்பீடு செய்க, வரையறை செய்க, தெரிவு செய்க, வகைப்படுத்துக, தெளிவுபடுத்துக, பரிசீலிக்குக, அடையாளம் செய்க, உடன்படுகிறீரா? காரணம் தருக.

(C-1290)

என்னும் வினாக்களுக்கு **அதிகபுள்ளிகளைப்** பெற சரியான விடையளிக்கும் முறைகள் (20.06.2015 முன் பதிவு செய்க)

**பொருளியற் கல்லூரி** யாழ்ப்பாணம்.



### வேலைவாய்ப்புக்கள்

**Golden group (Advertising)**

எமது நிறுவனத்தில் உருவாக இருக்கும் புதிய கிளைகளுக்கான

- மேற்பார்வையாளர்
- விநியோகஸ்தர்
- உதவி முகாமையாளர்
- முகாமையாளர்

போன்ற பதவியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

O/L இல்லாதவர்களுக்கும் விசேட பதவி வாய்ப்புக்கள் உள்ளன.

O/L, A/L உள்ளவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும்.

கிளிநொச்சி,முல்லைத்தீவு,வவுனியா,மன்னார்,யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. No. 8,6ம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு :- 0779987699, 0776219536

(C-1286)



### Microsoft Excel Solution

| | | |
|---|---|---|
| Basic Excel (25 Functions) | ➡ | 2 Months Rs.2, 000 |
| Advanced Excel (50 Functions) | ➡ | 3 Months Rs.4, 000 |
| Finance Excel (75 Functions) | ➡ | 4 Months Rs.5, 000 |

வர்த்தகத்துறை மாணவர்கள் மற்றும் Accounting field இல் தொழில்புரிவோருக்கு மட்டும்

Diploma in Data Analystics through Microsoft Excel (125 Functions) ➡ 6 Months Rs.10, 000

**Student Success Centre**

320, Main Street, Jaffna.

தொடர்புகளுக்கு- 0776169470

(766)


### பழைய மாணவர் சங்கம்
### யா/யூனியன் கல்லூரி
### தெல்லிப்பளை

## பொதுக்கூட்டம் 2015

காலம்:- 28.06.2015
நேரம்: காலை 9 மணி
இடம்: யூனியன் கல்லூரி மண்டபம்

➡ பிரேரணைகள் இருப்பின் 26.06.2015க்கு முன்பதாக செயலாளர், பழைய மாணவர் சங்கம் யூனியன் கல்லூரி எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

➡ ஆயுட்கால அங்கத்தவர்கள், அங்கத்துவம் பெற்றுக் கொள்ளாதவர்கள் 0776478261 எனும் தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டு தங்களின் ஆயுட்கால அங்கத்துவத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

(C-1287)


**N.B.பாலேந்திரன்**
**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்**

**யூனியன் கல்லூரி,**
**தெல்லிப்பளை.**

## கண்ணீர் அஞ்சலி

**பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் பாரதிநகர் 3ஆம் யுனிற், யோகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட**

**அமரர் முருகேசு கிருஷ்ணநவரத்தினராசா (மு)**



மலர்வு
1959 - 01 - 04

மறைவு
2015 - 06 - 14

"என் கடன் பணிசெய்து கிடப்பதே"

அப்பர் சுவாமியின் வாக்கிற்கிணங்க அருள்மிகு யோகாம்பிகை சமேத யோகபுரநாதர் ஆலய திருப்பணிச் சபைத் தலைவரும், சமய சொற்பொழிவாளரும் பாண்டியன்குள பிரதேச சபை செயலாளருமான

**முருகேசு கிருஷ்ணநவரத்தினராசா (மு)**

14.06.2015 அன்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சிவபதமடைந்தவருக்கு எமது இதயங்கனிந்த கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதோடு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆலய திருப்பணிச் சபை, பரிபாலன சபை,**
**அன்னதான சபை, சிவ தொண்டர்கள்**
**மல்லாவி, யோகபுரம்.**

(764)

## செல்வவடிவேல் மணிவிழாச் சபை



### திரு.இரா.செல்வவடிவேல்
அவர்களின்
## மணிவிழா அறிவித்தல்

திரு.இரா.செல்வவடிவேல் அவர்களுக்கு 28.06.2015 மணிவிழா கொண்டாடுவதற்கு மணிவிழா சபை அமைத்து மணிவிழா தொடர்பான ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன. எனவே மணிவிழா நாயகனது நண்பர்கள், பழைய மாணவர்கள், தனியார் கல்வி நிறுவன அதிபர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், கலைஞர்கள் ஆகியோர் இம்மணி விழா சிறக்க தங்களது பங்களிப்பை நல்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| பேராசிரியர் | ஆசிரியர் | சண்.வாமதேவன் |
| க.தேவராசா | ஞான திருக்கேதீஸ்வரன் | ஓய்வுநிலை அதிபர் |
| யாழ்.பல்கலைக்கழகம் | தொ.பே:-0773764961, | தொ.பே:-0771403517 |
| தொ.பே:-021 224 1404 | 021 221 5010 | |

(761)




மீண்டும் O/L உடன்

சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியாவில் மாதம் 3 இலட்சத்துக்கு மேல் உழைக்கக்கூடிய

**Business & Hotel Management**

யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பித்து 6 மாதங்களில் விரும்பிய நாடு செல்லும் விசா உத்தரவாதம்!

SEGi University & Colleges | B.H.M.S. Business & Hotel Management School | nmit | William Angliss Institute

MALAYSIA | SWITZERLAND | NEW ZEALAND | AUSTRALIA

விளக்கக் கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும் — 20-06-2015 காலை 10 மணி சிகரம் கேட்போர் கூடம்

முற்பதிவுகளுக்கு: 0777 32 4004

வெளிநாடு செல்ல விரும்பாதோருக்கு யாழ், கொழும்பு முன்னணி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு ஏற்பாடு செய்து தருகிறோம்.

**அனுமதி முற்றிலும் இலவசம்**

+ FREE Basic English Course

SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions

**Sikaram (Pvt) Ltd.**
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 021 222 00 11

(சி-1289)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org